[illegible] 1924-25

வால்யூம் 13 — ஸஞ்சிகை 1

R65ma211,N11v3.
N24.15.1
186744

1338

2 - DEC 1924
MADRAS

Regd: No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷி௵,
1924—1925.
ஸம்புடம் 15.

ஐப்பசி௴.
OCTOBER.
ஸஞ்சிகை 1.

பத்ராதிபர்.
கார்யதர்சி. } ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. விஜ்ஞாபனம்:—கார்யதர்சி. 1
2. பத்ராதிபரின் குறிப்புகள்:— 2
3. ஹயக்ரீவாவதாரம்:—ஸ்ரீ. உப. ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார். 9
4. கயாமாஹாத்ம்யம்:—ஸ்ரீ. உப. கோமடம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார். 15
5. ஜாதியும் மதமும்:—ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல தாதாசார்யர். 17
6. ஸ்ரீதேசிகாபிமான விசேஷம்:—
ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 22
7. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழி பெயர்ப்புடன்:—
ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 73
8. மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்:—
ஸ்ரீ. உ. வே. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர். 1

K. R. Press, Madras.

வர்ஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

உலக ப்ரசித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3.



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் மூலமும், தமிழ்மொழி பெயர்ப்பும்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த இந்த அத்யத்புதமான நாடகம் ஸம்ஸ்க்ருதத்தில் இருப்பதினால் அனைவருக்கும் ப்ரயோஜனப்படவில்லையே என்பதைக்கருதி ஷெ க்ரந்தத்திற்கு திருவஹீந்திரபுரம் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியால் எழுதப்பட்ட ஸரியான தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டிருக்கிறது. டிம்மி சைஸ் 680-பக்கம் கொண்டது. பைண்டு புஸ்தகம். விலை ரூபா 4—8—0. தபாற்கூலிவேறு 0—8—0.

விலாசம்:— மானேஜர், நிகமபரிமளம் ஆபீஸ், ஸ்ரீசடகோப நிலையம்,
மௌண்ட் ரோட், சென்னை.

P. R. S. பட்டாசார்யாரின்

பரத்வாஜ சந்தனதிகிருதம் அல்லது

நீர்ரோக நிவாரண நெய்.—இது மூத்திர கோசங்களில் உண்டாகும் வீரணங்கள், கெனோரியா வென்னும் வெள்ளை நோய் முதலிய வியாதிகளால் கஷ்டப்படும் ஸ்திரீ புருஷர்கள் இருபாலருக்கும் கைகண்ட மருந்தாகும். நீரடைப்பு முதலியதை வெகுசீக்கிரத்தில் நிருத்துவதில் நிகரற்றது.

விலை 8 அவு - புட்டி 1 - க்கு ரூபாய் ... 2—0—0

தபால் செலவு வேறு. காட்லாக் வேண்டுபவருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

பரத்வாஜ ஆச்ரமம்,
பெருமாள் கோவில் வீதி, எழும்பூர், சென்னை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:,

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 15.] ரக்தாக்ஷி (வரு), ஐப்பசிமீ". [ஸஞ்சிகை 1.

“ த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மே(அ)நவத்யா॥

ஸ்ரீபாகவதம். 1-9-23.

விஜ்ஞாபனம்.

தீபிகையின் பதினான்காவது வயது சென்ற புரட்டாசிமீ"த்துடன் முடிவாகி இந்த ஐப்பசிமீ" முதல் பதினைந்தாவது வயது ஆரம்பமாகிவிட்டது. இந்ததீபிகை சென்ற வருஷத்தில் சில நித்யகர்மாநுஷ்டானங்களின் ஸ்வரூபத்தை எடுத்துக்காட்டியும், குருபரம்பரையிலுள்ள விவாதாம்சங்களை எடுத்துரைத்தும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய லக்ஷணங்களை ப்ரதிபாதித்தும், ஸன்மார்க்கத்தில் புத்தி ப்ரஸரிக்கும்படி நீதிச்லோகங்களை விவரித்தும், திருவாய்மொழியின் பெருமையை ஸகலரும் அறியும்படி விஷயஸ்வாரஸ்யங்களை எடுத்துக்காட்டியும், ஸஹ்ருதயருடைய மனதை ரஞ்ஜிப்பிக்கும்படி செய்துகொண்டு தன்னுடைய பதினான்காவது வருஷத்தை ஸார்த்தமாகக் கழித்தது.

தன்னை சென்ற வருஷத்திலேயே அபிமானிக்கிறவர்கள் பலருளர் என்ற ஸந்தோஷத்தினால் தான் இன்னும் மேன்மேலும் உபயோகமாக ஆகவேண்டுமென்று எண்ணி பகவத் க்ருபையை முன்னிட்டு, வேதாந்த விஷயங்களை ஸகலரும் எளிதிலறியும்படி செய்துகொண்டும், இதிஹாஸபுராணங்களிலுள்ள ஆசாரம், தர்மம் முதலியவற்றின் ஸ்வரூபத்தையும், ஸ்வாரஸ்யங்களையும் விசதமாகவும் ஸுலபமாயும் எல்லோரும் அறியும்படி செய்துகொண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கு ஆஸ்திக்யம் அதிகம் உண்டாகி செழித்து ஓங்கி வளரவேண்டும் என்று அபிஸந்தியுடன், இந்த தீபிகை ப்ரவர்த்திக்கிறது. இதை ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் அதை முன்னுக்கு வரும்படியாக அபிமானத்துடன் ஆதரிக்கும்படி ப்ரார்த்திக்கப்படுகிறது. ஆகையால் தத்காலமிருக்கும் மெம்பர்களும் சந்தாதார்களும் தங்களுடைய ஸ்நேஹிதர்களுக்கு இதன் விஷயத்தை எடுத்துரைத்து இதை ஸ்வீகரித்து உதவி புரியும்படி ஸஹாயம் செய்ய வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

கார்யதர்சி.

186744

ஸ்ரீ:

பத்ராதிபரின் குறிப்புகள்.

மந்த்ரங்களின் மஹிமை.

சப்தங்களின் நாதங்களை அநுஸரித்த வ்யவஸ்தையினுல் ஏற்படுத்தப் பட்ட வரிசை க்ரமத்தை உடைய அக்ஷரங்களின் ஸமூஹத்துக்கு மந்த்ரங்களென்றுபெயர். மந்த்ரமானது மனனம் செய்வதற்காக ஏற்பட்டது. மன் (நினைக்கிறது)என்கிற தாதுவிலிருந்து உண்டானது. த்ரஎன்பது த்ராணம் அதாவது ரக்ஷிக்கிறது. தன்னை நினைக்கிறவர்களை ரக்ஷிக்கிறபடியால் மந்த்ரம் என்று பெயர். அவைகள் வைதிகம் என்றும் தாந்த்ரிகம் என்றும் இருவகைப்படும். ருக், யஜுஸ், ஸாம, அதர்வ வேதங்களில் சந்தோபத்தமாயும் இல்லாமலுமிருக்கிற மந்த்ரங்கள் வைதிகங்களென்றும், தாந்திரிக க்ரந்தங்கள் பாஞ்சராத்ர சாஸ்த்ரங்கள் புராணங்கள் இவைகளில் சொல்லப்படுகிற மந்த்ரங்கள் தாந்திரிகங்கள் என்று வ்யவஹரிக்கப்பட்டு வருகின்றன. ருக், ஸாம, அதர்வ வேதங்களில் காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி, த்ருஷ்டுப், ஜகதீ என்று ஏழுவிதமான சந்தஸ்களினுல் அலங்க்ருதமான அக்ஷரராசிகள் பாடுவதற்கு யோக்யமாயுள்ளது. இந்த மந்த்ரங்களை ஸ்வரத்துடன் கானம் பண்ணும்போது ஸ்தோத்ரம் என்றும், ஸ்வரமில்லாமல் வாக்யம்போல் சொல்லும்போது சஸ்த்ரம் என்று வ்யவஹரிப்பது வழக்கம். யஜுர் வேதத்திலுள்ள மந்த்ரங்கள் மேலே சொன்ன சந்தஸ் இல்லாமல் வாக்யரூபமாயுள்ளவை. இந்த வைதிக மந்த்ரங்கள் எல்லாவற்றிற்கும் சப்தராசிக்கே ஒரு அர்த்தம் உண்டு. தாந்த்ரிக மந்த்ரங்கள் ஆநுபூர்வியோடு கூடின அக்ஷர ராசி. தானுக அவைகளுக்கு அர்த்தம் கிடையாது. உச்சரித்தால் மட்டும் அவைகளுக்கு மஹிமை. ஹ்ரீம் - க்லீம் என்பதற்கு அர்த்தம் சொல்லமுடியாது. அவைகளை ஸரியாக உச்சரித்தால் சில பலம் ஏற்படுகிறது.

இம்மந்த்ரங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ப்ரதிபாத்யமான தேவதை உண்டு. இந்த மந்த்ரங்களால் அவர்கள் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டு உபாஸகனுல் கோறப்பட்ட பலனைக் கொடுக்கிருர்கள். இந்த மந்த்ரங்களில் சில இந்த உலகத்திய பலன்களைத் தருகின்றன. அவையாவன:— ஆயுஸ்ஸின் வ்ருத்தி, நல்ல பத்னியை அடைதல், சரீரதார்ட்யம், வித்யை இது முதலான எல்லா ஸுகங்களையும் கொடுக்கின்றன. சில வ்யாதிகளை நிவர்த்திக்கின்றன. அதர்வவேதத்தில் சில ஜ்வரங்கள் ஜலத்தாலும், சில காட்டிலிருந்தும், சில க்ருமிகளாலும அதாவது கண்ணுக்குப் புலப்படாத ஸூக்ஷ்ம ஜந்துக்களாலும் (microbes) உண்டாகிறதென்றும் அவைகளை நிவாரணம் செய்ய சில மந்த்ரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சில வ்யாதிகள் எரும்புகளால் ஏற்படுகிறதென்றும் அவைகள் சில மந்த்ரங்கள் நிவாரணம் செய்கின்றன. செடி

களில் உண்டாகும் பூச்சிகளை நிவர்த்திசெய்ய சில ஸூக்தங்களிருக்கின்றன. இவைகளை சில பெரியோர்கள் கிராமங்களில் இப்போதும் ப்ரயோகித்து வருகிருர்கள். சில மந்த்ரங்கள் பரலோக ஸாதகமானவை, அதாவது ஸ்வர்க்கம் முதலிய மேலான ஸுகங்களைத் தருவதாயும், சில மோக்ஷத்தையே கொடுக்கக்கூடியதாயுமிருக்கின்றன.

அந்தந்த மந்த்ரங்களை ஸதாசார்யன் மூலமாய் க்ரஹித்து ஸ்வரப்பிழை வர்ணப்பிழை இல்லாமல் உச்சரித்தால்தான் அந்தந்த பலன்கள் கிடைக்கும். அப்படிச் செய்யாவிட்டால் அந்தந்த பலன்கள் கிடைக்காதிருப்பதுடன்கூட விபரீத பலங்களும் உண்டாகும். இது பின்வரும் உபாக்யானத்தால் வ்யக்தமாகும். முன்னொருகாலத்தில் வ்ருத்ராஸுரனுக்கும் இந்த்ரனுக்கும் வெகு கோரமான சண்டை உண்டாயிற்று. வ்ருத்ராஸுரன் தோல்வியடைந்து மறுபடி இந்திரனை ஜயிக்கவேண்டுமென்றும், அதற்குத் தகுந்தபலன் தனக்கு உண்டாகவேண்டுமென்றும் யாகம்செய்ய ஆரம்பித்தான். யாகத்துக்கு வேண்டிய ஸம்பாரங்களை சேர்த்து ஹோதா, ப்ருஹ்மா, அத்வர்யு, உத்காதா முதலான ரித்விக்குக்களை ஏற்படுத்தி யாகம் நடத்திவரும்போது ஹோதா ‘இந்த்ரசத்ரு வர்த்தஸ்வ’ என்னும் மந்த்ரத்தை அந்தோதாத்தமாய் அதாவது உகாரத்தை உதாத்த ஸ்வரமாய் சொல்லுவதற்குப் பதிலாக ஆத்யுதாத்தமாக அதாவது ரேபத்துக்கு அடுத்த அகாரத்தை உதாத்த ஸ்வரத்தில் சொல்லி ஹோமம் செய்தார். இப்படிச் செய்ததால் வ்ருத்ராஸுரனுக்கு பலம் குறைந்தது. வசாரிக்கும்போது ஸ்வரத்தில் தப்பிதம் என்று தெரிந்து கொண்டார்கள். இத்தால் வ்ருத்ராஸுரனுக்கு யாகம் நிறைவேரவில்லை.

ஸ்வரப்பிசகினுல் உண்டான அர்த்தபேதமாவது, ‘இந்த்ரசத்ரு வர்த்தஸ்வ’ என்னும் மந்த்ரத்தில் அந்தோதாத்தமாக உச்சரித்தால் ‘இந்த்ரசத்ரு’ என்னும் பதம் தத்புருஷ ஸமாஸமாகி, இந்திரனுடைய சத்ரு அதாவது இந்திரனைக் கொல்லக்கூடிய சத்ருவாகிய நீ வ்ருத்தி அடைவாய்’ என்னும் அர்த்தம் ஆகவேண்டியிருக்க, ‘இந்த்ரசத்ருஃ’ என்பதை ஆத்யுதாத்தமாக உச்சரித்தால் பஹுவ்ரீஹி ஸமாஸமாகி, இந்திரன் எவனுக்கு சத்ருவோ அதாவது கொல்லுகிறவனுக ஆகிருனே அப்பேர்க்கொத்த நீ வ்ருத்தியடைவாய்’ என்று அர்த்தமாகிவிட்டது. ஆகையால் இந்திரனுக்கு பலம் ஜாஸ்தியாகி வ்ருத்ராஸுரன் தான் இந்திரனைக்கொல்ல உத்தேசித்ததற்குப் பதிலாக விபரீத பலனை அடைந்தான். ஆகையால்தான் மந்த்ரங்கள் ஸ்வரத்திலும் வர்ணத்திலும் தவருதலாக உச்சரிக்கப்பட்டால் அவை அவைகளினுல் உத்தேசிக்கப்பட்ட அர்த்தத்தைக் கொடாமல் வாயால் ப்ரயோகிக்கப்பட்ட வஜ்ராயுதம்போல ஆகி யஜமானனையே கொன்றுவிடுகின்றன.

இந்த விஷயத்தை ப்ரத்யக்ஷத்தி லறியலாம். சப்தங்களை உச்சரித்தவுடன் காத்தில் அசைவு (vibration) உண்டாகின்றது. இந்த அசைவு ஸூ

க்ஷ்மமாயும் ம்ருதுவான ஸ்தலத்தில் பட்டவுடன் அவ்விடம் ஒருவிதமான உரு உண்டாகிறது. ஒவ்வொரு சப்தத்துக்கும் தனித்தனியான உரு உண்டாகிறது. இந்த ஸூக்ஷ்மத்தை எடிஸன் என்னும் ஒரு தத்வசாஸ்த்ரி கண்டுபிடித்து போனோகிராப் (Phonograph) என்னும் யந்திரத்தைக் கண்டுபிடித்தார். இத னுடைய பரிணாமந்தான் தத்காலம் கிராமபோன் (gramaphone) என்று சொல்லப்படும் யந்த்ரவிசேஷம். இதனால் ஒருவருடைய பேசும் சப்தத்தை அதே ஸ்வரம் த்வனியுடன் எந்தக் காலத்திலும் எந்த தேசத்திலும் பிறர் கேழ்க்கும்படி செய்யப்பட்டு, ப்ரதிதினம் நாம் வழியே போகும்போது ப்ரபுக்கள் தங்கள் க்ருஹங்களில் இந்த யந்த்ரத்தை வைத்துக்கொண்டு அனுபவிப்பதைப் பார்த்து வருகிறோம். அதிஸூக்ஷ்மமான மணலை கொஞ்சம் எடுத்து ஒரு மேஜையின்மீது பரப்பி ஒரு குழாயை எடுத்துக்கொண்டு எதையாவது அந்த மணலுக்கு ஸமீபத்தில் உச்சரித்தால் அந்தமணலிலிருக்கும் ஸூக்ஷ்மமான துளிகள் சப்தத்துக்கு அனுகுணமாக ஒதுங்கி ஒருவிதமான ரூபத்தை ஏற்படுத்திக்கொள்ளும். இதை ப்ரத்யக்ஷத்தில் பார்க்கலாம்.

மந்த்ரங்கள் தேவதைகளைப் ப்ரார்த்திப்பதற்காக ஏற்பட்ட சப்தஸமூஹம்தான் என்று எண்ணக்கூடாது. ஒவ்வொரு மந்த்ரத்துக்கும் ஒவ்வொரு ரூபமுள்ள தேவதாஸ்வரூபமுண்டு. அந்தந்த மந்த்ரங்களை உச்சரிப்பதால் அந்தந்த தேவதையின் ஸ்வரூபத்தில் ஒருவிசேஷ முண்டாகிறது. மந்த்ரங்களை ஆவ்ருத்தி செய்யச் செய்ய இந்த தேவதையின் ப்ரஸாதம் விசதமாயும் ஊர்ஜிதமாகவும் ஆகி, உபாஸகனிடத்தில் அவைகளுக்கு ப்ரீதி உண்டாகி அவனுக்கு அவைகள் பலத்தைத் தருகின்றன. இதைத்தான் மீமாம்ஸகர்கள் மந்த்ரத்தை உச்சரித்தவுடன் அதுவே பலனைக்கொடுப்பதில்லை. அதிலிருந்து அபூர்வம் என்னும் ஒரு கண்ணால் பார்க்க முடியாத ஒரு தர்மமுண்டாகி அது அந்த உபாஸகனுக்கு ஸ்வர்க்கத்தையோ வேறு எந்த பலனையோ கொடுக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த மதத்தை ஸ்ரீதேசிகன் பரமத பங்கத்தில்,

"ஈசனு மற்றணங்குமில தென்றெழில் நான்மறையில்
பேசியநல்வினையாற் பெரும்பாழுக்கு நீரிறைக்கும்
நீசரை நீதிகளால் நிகமாந்தத்தினால் வழியே
மாசில் மனங்கொடுத்தும் மறுமாற்றங்கள் மாற்றுவமே"

என்று கண்டித்திருக்கிறார். அதாவது ஒரு ஸர்வேச்வரன் என்று பேசப்பட்ட நாராயணனும் மற்றதேவதைகளுமில்லை. அபூர்வமே யஜ்ஞம் முதலிய

கேநோ ஹி நஃஸ்வர்கதோ வர்ணிதோ வா த்ருப்தோ வா ப்ரீதோ ந கஶ்சித் [illegible] ஸ வாக்வஜ்ரோ யஜமாநம் ஹிநஸ்தி யதேந்த்ரஶத்ருஃ ஸ்வரதோ [illegible] பராதாத் ||

ஸத்க்ரியைகளால் உண்டாகிறது என்று மீமாம்ஸகர்கள் சொல்லுவது ஒரு பயிருமில்லாத பாழான பூமிக்கு நீர் இறைப்பது போலிருக்கிறது. ஏனெனில் அந்த அபூர்வமென்பது ரூபமில்லாதது, அறிவில்லாதது, மற்ற எவ்வித குணமுமில்லாதது. அப்படி இருக்கும் அபூர்வம் எப்படி இவனுக்கு பலனைக் கொடுக்கும். உலகத்தில் விரைமுதலிய அறிவில்லாத வஸ்துக்கள் செடி முதலியவைகளாகக் கிளம்பும்போது அறிவுடைய மனிதர் முதலியவர்களுடைய ஒத்தாசையை எதிர்பார்த்தே பலத்தைத் தருகின்றன. ஆதலால் அவர்கள் சொல்லுவது பாழுக்கு நீரிறைத்தது போலாகும். ஆகலால் அவர்கள் சொல்லுகிற வாதங்களை வேதாந்த சாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியே அந்த தேவதைகளுடைய அனுக்ரஹத்தாலேயே யாகாதிகளைச் செய்பவர்களுக்குப் பலமுண்டாகிறது, என்று சொல்லியிருப்பதை அனுஸரித்து நிராகரிக்கிறோம் என்று. "யஜ்ஞம் முதலிய ஸத்கர்மங்களால் தேவதைகளை உங்களிடத்தில் ப்ரீதி உடையவர்களாகச் செய்யுங்கள், அப்படிப்பட்ட தேவதைகள் உங்களுக்கு வேண்டிய இஷ்டபலன்களைக்கொடுத்து உங்களுக்கு ப்ரீதியை உண்டாக்குவார்கள். இப்படி ஒருவருக்கொருவர் ப்ரீதி செய்வித்துக்கொண்டே மோக்ஷபர்யந்தமான ஸித்தியை அடைவீர்களாக" என்று பகவான் யஜ்ஞத்தையும் ப்ரஜைகளையும் ஸ்ருஷ்டிக்கும்போதே கட்டளையிட்டதாக ஸ்ரீகீதாசார்யன் சொல்லியிருக்கிறார். ஆகையால் மந்த்ரங்களுக்கு அதிஷ்டான தேவதை உண்டு என்பது ஸித்தம். விச்வாமித்ரர் ஸ்ரீராமனுக்கு அஸ்த்ர மந்த்ரங்களை உபதேசித்தபோது ஸ்ரீராமன் ஒருதடவை அந்தமந்த்ரங்களை உச்சரிக்க அதனபிமானி தேவதைகள் கைகூப்பிக்கொண்டு நாங்கள் கிங்கரர்களாக இருக்கிறோம், என்ன செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்தது ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் மந்த்ரங்களுக்கு தேவதை உண்டு என்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. கிராமபோன் ப்ளேட்டில் பூதக்கண்ணாடியைவைத்துப் பார்த்தால் ஸூக்ஷ்மமான கோடுகளைப்பார்க்கலாம். இப்படி ப்ரத்யக்ஷத்தில் கண்ணால் பார்க்கும்படி கோடுகள் உண்டாவதைப் பார்த்த பிறகு மந்த்ரங்களை உச்சரித்தால் தேவதாரூபத்தில் விசேஷமுண்டாகிறது என்பதைப்பற்றி ஸம்சயிக்கவும் வேணுமா.

அந்தந்த மந்த்ரங்களின் அக்ஷர ராசியை அதே வரிசையில் உச்சரித்தால் தான் நமக்கு ஒருவிதமான பலமுண்டாகும். வேறு விதமாக உச்சரித்தால் வேறுவிதமான ரூபம் காற்றிலுண்டாகி அதற்கனுகுணமாக வேறு நல்லதாகவோ அல்லது கெடுதலானவோ பலமுண்டாகிவிடும். ஆகையால் தான் 'இந்த்ரஶத்ரு' 'வ்ருத்ரஶத்ரு' என்னும் சப்தங்கள் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கிறதாயிருந்தாலும் 'இந்த்ரஶத்ரு' என்னும் மந்த்ரத்தால் உண்டாகும் பலம் 'வ்ருத்ரஶத்ரு' என்பதை உச்சரித்தால் உண்டாகாது. மந்த்ரங்களிலிருக்கும் வரிசை க்ரமத்தை மாத்திரமாவது,

அதே அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய வேறு ஸம்ஸ்க்ருத பதத்தையே உச்சரித்தாலும் மந்த்ரங்களாலுத்தேசிக்கும் பலம் கிடைக்காது. இப்படி இருக்க மந்த்ரங்களின் அர்த்தத்தை வேறு பாஷையில் சொன்னால் ஒரு பலமுமுண்டாகாது. ஆகையால்தான் ஸந்த்யாவந்தனம் முதலிய நித்ய கர்மானுஷ்டானத்தில் உச்சரிக்கவேண்டிய மந்த்ரங்களை ஸம்ஸ்க்ருத பாஷையில் பெரியவர்களால் நமக்கு உபதேசிக்கப்பட்டபடி உச்சரித்தால் தான் நமக்கு அவை பலனைக்கொடுக்கும். மேனாட்டுக்கல்வியின் பயிர்ச்சியால் அர்த்தம் தெரியாமல் ஸம்ஸ்க்ருதத்தில் மந்த்ரங்களைச் சொல்லாமல் அதன் அர்த்தங்களை தமிழில் சொல்லுவது போதாதாவென்று அநேகர் சொல்லுகிறார்கள். அப்படிச்செய்யக்கூடாதென்று ஸ்பஷ்டமாக அவர்கள் தெரிந்துகொள்ள ப்ரத்யக்ஷ ப்ரமாணம் வேறு என்னவேண்டும்? இதுபோலவே ப்ராஹ்மணர்களின் மீதுள்ள த்வேஷத்தால் கோவில்களில் ஸம்ஸ்க்ருதத்தில் மந்த்ரங்களைச்சொல்லுவது தங்களுக்கு புரியவில்லையென்றும், தமிழில் சொல்லவேண்டுமென்றும், இத்தால் தமிழின் அபிவ்ருத்தி குறைந்துவிடுகிறதென்றும் தங்களை வஞ்சிப்பதற்காகவே இவ்விதம் ப்ராஹ்மணர்களால் ஏற்படுத்தப்பட்டதென்றும் நினைத்து கோபம் கொள்ளும் ப்ராஹ்மணரல்லாதார்களுக்கு (Non-Brahmans) இந்த விஷயம் தெரிந்திருந்தால் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். அவர்கள் சொல்லும்படி செய்தால் எவ்வளவு அநர்த்தம் நேரிடும் என்று அவர்கள் நன்கு உணர்ந்து கொள்வார்களென்று நம்புகிறோம். உலகம் முழுவதும் ஸுகமாக இருக்கவேண்டும் என்று பகவானை ப்ரதி தினம் ப்ரார்த்திக்கும் ப்ராஹ்மணர்களை தங்களுடைய பரமஸுஹ்ருத்துக்களாகவும் தங்களுடைய ஹிதத்தையே தேடுகிறவர்கள் என்று அறியாமல் அவர்களை த்வேஷிப்பது, நமது ஹிந்துமதத்தின் உண்மை (ideals)யை ஸரியாக அவர்கள் அறிந்து கொள்ளும்படி அவர்களுக்கு எடுத்து உரைக்காத காரணமே ஒழிய வேறில்லை. இதை அறிந்தால் த்வேஷ புத்தி விலகிப்போகும்.

மந்த்ரங்களின் மஹிமை இவ்வளவு தான் என்று சொல்லிமுடியாது. இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த யுவனாச்வன் புத்ரகாமேஷ்டி செய்யத் துடங்கி, அவனுக்கு தாஹம் அதிகமாகி, ஜலம் எங்கும் கிடைக்காமல் ஒரு கும்பத்தில் ஜபித்துவைத்திருந்த ஜலத்தை ஸாப்பிட்டு அதிலிருந்து அவனுடைய வயிற்றில் கர்பமுண்டாகி பன்னிரண்டு மாதங்களானவுடன் அவனுடைய வலது பக்கத்திலிருந்து தேஜஸ்வியான மாந்தாதா என்னும் குமாரன் வெளிவந்த சரித்ரத்தைக் கவனித்தால் மந்த்ரங்களுக்கு எவ்வளவு மஹிமை இருக்கிறது என்பது வ்யக்தமாகும்.

ஸம்ஸ்க்ருதபாஷையில் ஒவ்வொரு அக்ஷரங்களுக்கும் வர்ணம் சக்தி லிங்கம் உண்டு. இதுபோலவே மந்த்ரங்களுக்கும் பும், ஸ்த்ரீ, நபும்ஸகம் என்ற மூன்று லிங்கங்களும் உண்டு. தாந்த்ரிக மந்த்ரங்கள் ஸௌரமென்றும் சாந்த்ரமென்றும் இருவகையாகச் சொல்லுவார்கள். ஸௌரமந்த்ரங்கள் புல்லிங்கமானவை. சாந்த்ரமந்த்ரங்கள் ஸ்த்ரீலிங்கமானவை. புல்லிங்க நபும்ஸகலிங்க மந்த்ரங்களை மந்த்ரங்களென்றும், ஸ்த்ரீலிங்க மந்த்ரங்களை வித்யா என்றும் வ்யவஹரிக்கிறார்கள். நபும்ஸகலிங்க மந்த்ரங்கள் நம: என்னும் பதத்தில் முடிகின்றவைகள். அவைகளுக்கு மற்ற மந்த்ரங்களுக்கு இருக்குமளவு சக்தியும் வீர்யமும் கிடையாது. 'ஹும்' 'பட்' என்று முடியும் மந்த்ரங்கள் புல்லிங்கமானவை என்றும், 'ஸ்வாஹா' என்று முடியும் மந்த்ரங்கள் ஸ்த்ரீலிங்கமானவை என்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கின்றன. இம்மந்த்ரங்களுக்கு சக்தியுண்டு. ஆகையால் இவைகளை ஸ்வாதீனப்படுத்தி அனுபவிக்கக்கூடிய சக்தியுள்ளவர்கள் தான், இவைகளை நிர்வஹிக்க முடியும். வாலி அடிக்கப்பட்டு, கீழே விழுந்துகிடக்கும் பொழுது ஸ்ரீராமன் கையிலிருந்த தனுஸ்ஸு யஜமானனிடத்தில் இருக்கும் பரிவினால் வாலி எழுந்திருந்து ஒரு ஸமயம் ஸ்ரீராமனை அடிக்க ஆரம்பித்தால் என்ன செய்கிறது என்ற எண்ணத்தால் வாலிக்கு இருக்கும் மிகுதி ப்ராணனையும் எடுத்துவிடுவோமென்று எழும்பிக்குதிக்க ஆரம்பிக்க, ஸ்ரீராமன் அதை தன் கையால் அழுத்தி அடக்கிவைத்திருந்தாரல்லவா? காண்டீவத்தை அடக்கி ஆளுவதற்கு அர்ஜ்ஜுனனுக்கு பகவதம்சமிருக்கும் வரையில் ஸாத்யமாகி அம்சம் நீங்கினவுடன் அஸாத்யமாகி விட்டதல்லவா? அதுபோலவே வீர்யமுள்ள மந்த்ரங்களை ஸ்வாதீனப்படுத்தி ஆளக்கூடிய யோக்யதை இருந்தாலொழிய அவைகளை அப்பஸிக்கக்கூடாது. இப்போது மந்த்ரங்களை உபாஸனம் செய்ய ஆரம்பித்து ஸித்திபெறாமல் பயித்யம் பிடித்து நாசமாகும் எவ்வளவோ ஜனங்களை பார்த்திருக்கிறோமல்லவா. ஆகையால் தான் இவைகளை தகுந்தபடி உபாஸிக்கவேண்டும்.

இந்த மந்த்ரங்களடங்கிய வேதத்தை ஆசார்யன் சிஷ்யனுக்கு ஸந்தைவழியே கர்ணபரம்பரையாக அப்யஸிக்க வேண்டுமென்றும் புஸ்தகத்தை வாசித்து வேதத்தை அத்யயனம் செய்பவன் நரகத்தை அடைவான் என்று குமாரிலபட்டர் தந்த்ரவார்த்திகத்தில் சொல்லியிருக்கிறார். இந்த மந்த்ரங்களுக்கு இவ்வளவு பெருமை இருப்பதால் இவைகளை ஸதாசார்யன் ஸச்சிஷ்யனுக்கே உபதேசிக்க வேண்டுமென்று வித்யாதேவியே ஸதாசார்யனிடம்போய் முறையிட்டு ப்ரார்த்தித்த நாலுமந்த்ரங்களின் அர்த்தம் இங்கு எடுத்துக்காட்டுவது ஸங்கதமாகும்.

1. "நான் உமக்கு நிதியைப்போல் உபகாரமாக இருக்கிறேன். அதிகாரியில்லாதவனையும், நம்மிடத்தில் அஸூயைப்படுகிறவனுக்கும், ஆர்ஜவமில்லாத

(1) வித்யா ஹ வை ப்ராஹ்மணமாஜகாம கோபாய மா ஸேவதிஷ்டேஹமஸ்மி । அஸூயகாயாந்ருஜவேயதாய ந மா ப்ரூயா வீர்யவதீ ததா ஸ்யாம் ।

வனுக்கும், நல்ல நடவடிக்கை இல்லாதவனும், ஸ்நாநமாசமநீயம் முதலியவைகளால் சுத்தி இல்லாதவனுகவும் இருக்கிற சிஷ்யனுக்கு என்னைச்சொல்லாதேயும். இப்படிச் செய்தீராகில் உமக்கு நான் ஸகல பலத்தையும் கொடுக்கிறேன்'

2 'எந்த ஆசார்யன் சிஷ்யனை ஹிதத்துடன் காதுக்கு அம்ருதம்போல் மோக்ஷத்தைக்கொடுக்கக்கூடிய வேதத்தை லளிதமாய் சிறுகச் சிறுக அவனுக்குச்சொல்லி வைக்கிறுனே அந்த ஆசார்யன் அந்த சிஷ்யனுக்கு தாயும் தகப்பனுமாகிறுன். அவருக்கு அவன் ஒருநாளும் துரோஹம் நினைக்கக்கூடாது'

3. 'ஆசார்யனிடமிருந்து வேதங்களை அப்யஸித்து, எவர்கள் மனோவாக்காயங்களால் அவரை கௌரவப்படுத்தவில்லையோ அவர்களுக்கு ஆசார்யன் ஒருநாளும் ஸஹாயம் செய்யக்கூடாது. அவர்கள் அப்யஸித்தவேதமும் அவர்களுக்கு உபயோகமாகாது'

4. 'எவனுவது ஒருவன் சுத்தனுகவும், கற்றுக்கொள்ள ஆசை உடையவனுகவும், புத்திசாலியாகவும், நல்ல நடத்தை யுள்ளவனுகவும், சரீர சுத்தியுடையவனுகவும், ஒருநாளும் துரோஹபுத்தி இல்லாதவனுகவும் இருக்கிறுனே அவனுக்கு என்னைச் சொல்லிக்கொடும். உம்முடைய நிதியாகிய என்னை அவன் காப்பாற்றிவருவான்'

இதனுல் எவ்வளவு கவலையுடன் இந்த பாரதவருஷத்தில் வேதமந்த்ரங்கள் காப்பாற்றப்பட்டன என்று கவனிக்கத்தக்கது.

இவ்வளவு மஹிமையுள்ள மந்த்ரங்களை அநாதரித்து நாளுக்கு நாள் கீழே வந்துகொண்டிக்கும் தசையைப் பார்த்து இனிமேலாவது முழித்துக்கொண்டு நம்முடைய ஸ்வரூபத்தை அடைய நம்முடைய ஸந்ததியாருக்காவது வேதாத்யயனத்தை செய்விக்கத் துடங்கினேமாகில் தேசத்துக்கு க்ஷேமம் உண்டாகும்.

---

(2) 𑌯 𑌆𑌵𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑌵𑌿𑌤𑌥𑍇𑌨 𑌕𑌰𑍍𑌣𑌾𑌵𑌦𑍁𑌃𑌖𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌮𑍃𑌤𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌨𑍍 । 𑌤𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌚 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨 𑌦𑍍𑌰𑍁𑌹𑍍𑌯𑍇𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑌸𑍍𑌯 𑌜𑌾𑌨𑌨𑍍 ॥

(3) 𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑌾 𑌯𑍇 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌨𑌾𑌦𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌮𑌨𑌸𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌵𑌾 । 𑌯𑌥𑍈𑌵 𑌤𑍇 𑌨 𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑍋𑌜𑌨𑍀𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌤𑌾𑌨𑍍𑌨 𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌤𑌤𑍍 ॥

(4) 𑌯𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌃 𑌶𑍁𑌚𑌿𑌮𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌂 𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍇 𑌨 𑌦𑍍𑌰𑍁𑌹𑍍𑌯𑍇𑌤𑍍𑌕𑌤𑌮𑌚𑍍𑌚𑌨𑌾𑌹 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌮𑌾 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾 𑌨𑌿𑌧𑌿𑌪𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 ॥

ஸ்ரீ:

ஹயக்ரீவாவதாரம்.

(ஸ்ரீ. உப. ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார்.)

எப்பொழுது தர்மத்துக்குக் குறைவும் அதர்மத்துக்கு ஆதிக்யமும் உண்டாகிறதோ அப்பொழுது ஸாதுக்களைக் காப்பாற்றி துஷ்டர்களை ஸம்ஹாரம் செய்து, தர்மத்தை நிலைநிறுத்த பகவான் அவதாரம் செய்கிறுர். இந்த அவதாரம் பூர்ணுவதாரம் என்றும் அம்சாவதாரமென்றும் இருவகைப்படும். பூர்ணுவதாரத்தில் பகவான் தானே தன்னுடைய பூர்ணசக்தியுடன் அவதரித்து தர்ம ரக்ஷணம் செய்வது வழக்கம். அம்சாவதாரத்திலோ ஏற்கெனவே பிறந்திருக்கும் ஜீவகோடிகளில் தகுதியான பாத்ரத்தைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்குத் தன்னுடைய ஏகதேச சக்தியைக் கொடுத்து தானும் அநுப்ரவேசித்து தன்னுடைய உத்தேசித்த கார்யத்தை முடித்துக்கொள்ளுகிறது ஸ்வபாவம். மத்ஸ்ய, கூர்ம, வராஹ, வாமன, ராம, க்ருஷ்ண, ஹம்ஸ, ஹயக்ரீவ, முதலிய அவதாரங்கள் பூர்ணுவதாரம் என்றும், பரசுராமன், பலராமன், வ்யாஸர், நம்மாழ்வார், பாஷ்யகாரர், முதலியவர்கள் அம்சாவதாரமென்றும் பூர்வாசார்யர்களுடைய திருவுள்ளம்.

இதில் ஹயக்ரீவ அவதாரத்தைப்பற்றி அதிக ப்ரஸித்தமாக ஜனங்களுக்குத் தெரியாததலால் அதை இங்கு விசாரிப்போம்.

முன் ஒரு ப்ரளயகாலத்தில் எல்லாம் ஒரே ஜலமயமாயிருந்த காலத்தில், பகவான் ஆதிசேஷன்மீது பள்ளி கொண்டு, ஜகத்தை ஸ்ருஷ்டிக்கவேண்டும் என்கிற ஸங்கல்பத்துடன் யோக நித்ரையிலிருந்தார். அப்போது ப்ரு மாவை ஸ்ருஷ்டித்து அவருக்கு ஒத்தாசையாக வேதங்களைக் கொடுத்து வைகளைக்கொண்டு ஜகத்தை முழுமையும் ஸ்ருஷ்டிக்கும்படி கட்டளையிட்ர். ப்ரும்மா ஒரு தாமரஸ புஷ்பத்தில் வீற்றிருந்தார். இந்த புஷ்பத் இலையில் இரண்டு ஜலபிந்துக்களிருந்தன. அவைகள் பகவானுடைய ...லத்தால் மது என்றும், கைடபன் என்றும் இரண்டு அஸுரர்களாக ஆய்விட்டன. அந்த அஸுரர்கள் ப்ரும்மாவின் பக்கத்திலிருந்த வேதங்களை எடுத்துக்கொண்டு ஜலத்துக்குள் மறைந்து ஓரிடத்தில் ஒளித்துவைத்துவிட்டு யதேச்சையாய் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தார்கள்.

வேதங்களில்லாமல் ப்ரும்மா ஸ்ருஷ்டி கார்யம் ஒன்றும் செய்யமுடியாமல் ப்ரமித்துப்போய் இன்னது செய்கிறது என்று தெரியாமல் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஸமயத்தில் அவருக்கு பகவானை ஸ்தோத்ரம் செய்யவேண்டும் என்று எண்ணம் உண்டாயிற்று. உடனே பகவானை சரணமடைந்து களை மீட்டுக்கொடுக்கும்படி ப்ரார்த்தித்தார். பகவானும் இவருடைய தர் ...ப் பார்த்து மிகவும் இரக்கங்கொண்டு அபயப்ரதானம்செய்துடனே

கழுத்துக்குக்கீழ் மனுஷ்ய ரூபமும், கழுத்துக்குமேல் குதிரைரூபமுமான ஹயக்ரீவ ரூபத்தை எடுத்துக்கொண்டு ஜலத்துக்குள் முழுகி வேதங்களை ஒளித்து வைத்திருக்குமிடத்தை அடைந்து அஸுரர்களைக் காணுமல், வேதங்களை எடுத்துக்கொண்டு திரும்பிவந்து ப்ரும்மாவிடம் கொடுத்து விட்டு மறுபடி யோக நித்ரை செய்ய ஆரம்பித்தார். அஸுரர்கள் இருவரும் கொஞ்சகாலம் கழித்து திரும்பிப்பார்க்கையில் வேதங்களைக்காணுமல் போனதைக் கண்டு மிகவும் கோபம் கொண்டு வேகமாய் வந்து ப்ரும்மாவிடமிருக்கக்கண்டு, இவைகளை திருப்பி எடுத்துக்கொண்டு வந்தவன் பகவானுகத்தா னிருக்கவேண்டுமென்று அவருடன் யுத்தத்துக்குத் தயாராக சேஷசயனத்தினிடம் வந்து சேர்ந்தார்கள். பகவான் தூங்குவதைப் பார்த்து இவர்தான் எடுத்துவந்திருக்கவேண்டும் என்று சிரித்தார்கள். இவர்கள் சிரிப்பைக்கண்டு பகவான் கண்ணைத் திறந்து பார்த்ததும், இவர்கள் சண்டைக்கு ஸந்நத்தர்களாக இருப்பதைக் கண்டு, உடனே எழுந்திருந்து அவர்களுடன் யுத்தம் செய்து அவர்களைக் கொன்றுவிட்டார். பிறகு ப்ரும்மாவிடம் வந்து அவரை அனுக்ரஹித்து இப்படி நடக்கிறதே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்த அவரை தைர்யப்படுத்தி, லோகத்தை ஸ்ருஷ்டி செய்வதற்குத்தகுந்த புத்திவிகாஸம் உண்டாகும்படி அனுக்ரஹம் செய்து முன்போல் தன் ஸ்தானத்தை பகவான் அடைந்தார். ப்ரும்மாவுக்கு வந்த ஆபத்தைக் காப்பாற்றி வேதங்களை ரக்ஷித்துக் கொடுப்பதற்காக எடுத்த அவதாரத்துக்கு ஹயக்ரீவாவதாரம் என்று பெயர். இந்த உபாக்யானம் ஸ்ரீமன் மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் 357வது அத்யாயத்தில் சொல்லப்படிருக்கிறது.

இந்த அவதாரத்தின் சரித்திரம் தேவீ பாகவதத்தில் பின் வருமாறு காணப்படுகிறது.

முன் ஒரு காலத்தில் ஹயக்ரீவன் என்று ஒரு அஸுரனிருந்தான். அவன் ஹிரண்யகசிபுபோல் தபஸ்ஸு செய்து மனுஷ்யர்களாலும் ம்ருகங்களாலும் கொல்லப்படாமலிருக்கும்படி வரனை ஸம்பாதித்துக்கொண்டு, தேவதைகளை ஹிம்ஸிக்க ஆரம்பித்தான். ஹிம்ஸை பொறுக்கமுடியாமல் தேவர்கள் தேவியை சரணமடைந்தார்கள். அவள், அது தன்னால் ஆகக்கூடிய கார்யமில்லையாதலால் பகவானை சரணமடையும்படி சொல்ல, தேவர்களும் அப்படியே சரணமடைந்து ரக்ஷிக்கவேண்டுமென்று யாசித்தார்கள். அவரும் ரக்ஷிக்கிறேன் என்று வாக்குத்தத்தம்செய்து உடனே மனுஷ்யரூபமில்லாமலும் ம்ருகரூபமில்லாமலும் குதிரைத்தலையும் மனுஷ்ய சரீரத்தையும் ஸ்வீகரித்துக்கொண்டு அஸுரனிடம்போய் அவனை ஸம்ஹாரம்செய்து தேவர்களுடைய கஷ்டத்தை நிவ்ருத்தி செய்தார், என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸாதாரணமாய் இந்த ஹயக்ரீவந்தான் வித்யாதிஷ்டான தே[வதை]யாக வைஷ்ணவர்களால் கொண்டாடப்படுகிறார். இந்த ரூபமான ப...

உபாஸநம் செய்கிறவர்களுக்கு அனேக விதமான பலங்கள் உண்டாகின்றன. உபாஸகர்களுடைய ஸௌகர்யார்த்தமாக அநேக ரூபங்கள் ஹயக்ரீவகல்பமென்னும் க்ரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹயக்ரீவனை இரண்டு கைகளை உடையவராகவும், 4, 6, 8, 10, 12 கைகளை உடையவராகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவர் ஸாதாரணமாய் வெண்மை வர்ணமுள்ளவர். அந்தந்த பலத்தைத் தரக்கூடிய ரூபங்களின் பேதங்கள் கீழே குறிக்கப்படுகின்றன.

(1) ஸந்தானத்தை இச்சிக்கிறவர்களுபாஸிக்க வேண்டிய மூர்த்தி:— ஶ்வேதவர்ணம், ஹயாநநம், த்விபுஜம், விஶாலாக்ஷம், ஜ்ஞாநமுத்ரா புஸ்தக தாரிணம் ॥

வெள்ளை வர்ணம் குதிரையின் முகம், இரண்டு கைகள், ஒரு கையில் ஜ்ஞான முத்திரை, மற்றொன்றில் புஸ்தகம்.

(2) வாக்கின் ஐச்வர்ய ஸித்தியை விரும்புகிறவர்களுக்கு:—

[illegible]
ஜபவலய ஸரோஜே புஸ்தகாபீஷ்டதாநே ।
[illegible]
[illegible] ॥

நாலு திருக்கைகள், வலது கைகளில் ஜபமாலை, தாமரை புஷ்பம், இடது கைகளில் ஒன்றில் புஸ்தகம், மற்றொன்று வரத முத்ரையாக இருக்க வேண்டும்.

(3) பெரிய ஆசார்யனுக ப்ரஸித்தி வரவேண்டுமென்று ஆசை உள்ளவர்களுக்கு:—

வ்யாக்யாமுத்ராம் கரஸரஸிஜை: புஸ்தகம் ஶங்கசக்ரே
பிப்ரத் பிந்நஸ்படிகருசிரே புண்டரீகே நிஷண்ண: ।
அம்லாநஶ்ரீ: அம்ருதவிஶதை: அம்ஶுபி: ப்லாவயந் மாம்
ஆவிர்பூயாத் அநகமஹிமா மாநஸே வாகதீஶ: ॥

பின் இரண்டு கைகளில் சங்குசக்ரமும் இன்னொரு வலது கை உபதேசமுத்தரையோடு கூடினதாயும், இன்னொரு இடதுகையில் புஸ்தகமும்.

(4) ஊமையாயிருக்கிறவனை பேசும்படி செய்ய விரும்புகிறவர்களுக்கு:—

ஶார்ஙூஶார்ங ஹஸ்தம்

ஶங்காதிபாத்ரா...

ஸம்வித்த வாஹம்...

ஜாநந்து நித்யஸர்வஜ்ஞம் ॥

முன் இரண்டு கைகளில் சக்ரமும் சங்கும், மறு இரண்டு கைகளை முழங்கால் மேல்வைத்துக்கொண்டு இருக்கிற ப்ரகாரம். இந்த ப்ரகாரமான மூர்த்தி திருவஹீந்திர புரத்தில் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் நிறப்படி ஆராதனத்தில் எழுந்தருளி யிருக்கிறார். ஸ்ரீதேசிகன் ஹயக்ரீவனை மங்களாசாஸனம் செய்ய மலைக்கு எழுந்தருளும் பொழுது இந்த மூர்த்தியும்கூடவே எழுந்தருளுகிறார்.

(5) வ்யவஹாரங்களில் ஜயம் உண்டாக வேண்டியவர்களுக்கு:—

வந்த்ரேணைவ ஸ்வரூபம் ஹயக்ரீவம் ஸாந்திரம் ॥

ஜ்ஞாநமுத்ரா யாம் தேவம் ஶங்கசக்ர யாம் விஷ்ணும் ॥

புஸ்தகம் வாமஹஸ்தே தாரிணம் வநமாலிநம் ।

கிரீட ஹாரகேயூர கடககௌஸ்துப பூஷிதம் ॥

பின் இரண்டு கைகளில் சக்ரமும் சங்கும், மற்றொரு வலக்கையில் ஜ்ஞான முத்ரை மற்றொரு இடக்கையில் புஸ்தகம்.

(6) சத்ருக்களை நாசம் செய்ய விரும்புகிறவர்களுக்கு:—

ஹயக்ரீவம் கராப்ஜாப்யாம் ஶங்கசக்ர யாம் விஷ்ணும் ।

ரக்தவர்ணம் த்ரிநேத்ரம் ச த்யாயேத் க்ரூர கர்மஸு ॥

வர்ணம் செகப்பு. இரண்டு கைகள்தான். சக்ரத்தையும் சங்கத்தையும் தரித்துக்கொண்டிருக்க வேணும், 3-கண்களுண்டு.

(7) மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கும் ப்ருஹ்மஜ்ஞானத்தை அடைய இச்சிக்கிறவர்களுக்கும்:—

1. ஶங்க சக்ர கதாபத்ம ஜ்ஞாநபுஸ்தக தாரிணம் ।
ஹயக்ரீவ மஹம் வந்தே கிரீடாதி விபூஷிதம் ॥

2. ஶங்க சக்ர கதா பத்ம ஜ்ஞாநபுஸ்தக தாரிணம் ।
பாஶாங்குஶ தரம் தேவம் ஹயாநந மஹம் பஜே ॥

3. ஶங்க சக்ர கதாபத்ம சாபபாஶாஸி தாரிணம் ।
ஜ்ஞாநாதி வர புஸ்தகதரம் ஹயாநந மஹம் பஜே ॥

4. ஶங்க சக்ர கதாபத்ம ஜ்ஞாநபுஸ்தக தாரிணம் ।
பாஶாங்குஶாஸி வஜ்ராதி கேடஶூலதரம் விபும் ॥

1. 6-கைகள், சங்கம், சக்ரம், கதை, தாமரைப்புஷ்பம், ஜ்ஞானமுத்ரை புஸ்தகம் இவைகளை தரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

2. 8-கைகள், சங்கம், சக்ரம், கதை, தாமரைபுஷ்பம், ஜ்ஞானமுத்ரை, புஸ்தகம், பாசக்கயிறு, அங்குசம், இவைகளை தரித்துக்கொண்டிருக்கவேண்டும்.

3. 10-கைகள், சங்கம், சக்ரம், கதை, தாமரைபுஷ்பம், வில்லு, பாசக்கயிறு, கத்தி, ஜ்ஞானமுத்ரை, அபயமுத்ரை, புஸ்தகம்.

4. 12-கைகள்; சங்கம், சக்ரம், கதை, தாமரை புஷ்பம், ஜ்ஞான முத்ரை, புஸ்தகம், பாசக்கயிறு, அங்குசம், கத்தி, வஜ்ராயுதம், கேடயம், சூலம் இவைகளை தரித்துக்கொண்டிருக்க வேண்டும்.

(8) எல்லா பலத்தையும் ஆசைப்படுகிறவர்களுக்கு:—

ஸம்வாஹம் ஶங்கசக்ரே கரகமலயுகே புஸ்தகம் ஜ்ஞாநமுத்ராம்

பிப்ராணம் ஜ்ஞாநமுத்ராம் லஸித உபரகரே ...

... வாணீகே ... வாமஶீர்ஷே ...

ஸ்ரீமாந் ஜ்ஞாநமூர்த்தி நிவஸது ... ॥

4-கைகள், பின் இரண்டில் சக்ரம், சங்கம், இன்னொரு இடதுகையில் புஸ்தகமும், இன்னொரு வலதுகையில் ஜ்ஞானமுத்ரையும்.

மேலே குறிக்கப்பட்ட மூர்த்திகளைக் காட்டிலும் வேறான ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவன் மைஸூரிலிருக்கும் ஸ்ரீபரகால மடத்தில் எழுந்தருளியிருக்கிறார். இந்த மூர்த்தி ஸரஸ்வதியால் ஸ்ரீ பாஷ்யகாரருக்குக் கொடுக்கப்பட்டு, அவரால் திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்கு கொடுக்கப்பட்டு, அந்தவம்சஸ்தர்களால் மூன்று தலைமுறை ஆராதனம் பண்ணப்பட்டு, ஸ்ரீதேசிகனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டு, பிறகு அவரால் ப்ரும்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமிக்கு கொடுக்கப்பட்டு, அது முதல் பரம்பரையாய் ஸ்ரீபரகாலமடத்தில் திருவாராதனத்தில் எழுந்தருளி யிருக்கிறார். இந்த மூர்த்திக்கு பின் இரண்டு கைகளில் சங்கு சக்ரமும் வலதுகை உபதேசமுத்ரை யாகவும், இடது கையில் புஸ்தகமும் இருக்கிறது.

சிலர் ஹயக்ரீவனை பகவதவதாரமென்று தெரிந்துகொள்ளாமல், ப்ரஸித்தமான மஹாபாரதம், கீழ்ச்சொல்லிய ஹயக்ரீவகல்பம் போன்ற

மந்த்ரசாஸ்த்ரங்கள், திருமங்கை ஆழ்வார் ஸ்ரீஸூக்தி இவைகளை மறந்து ஹயக்ரீவன் அநுபாஸ்யரென்றும், அவருடைய உபாஸநத்தினால் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுக்கு கிடைத்த ஜ்ஞானம் அநுபாதேயமென்றும் சொல்லி வருவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். பெரியதிருமொழியில்,

‘ வசையில் நான்மறைகெடுத்த அம்மலரயற்கருளி, முன் பரிமுகமாய்
இசைகொள் வேதநூலென்றிவை பயந்தவனே! எனக்கருள் புரியே
உயர்கொள் மாதவிப் போதொடுலாவிய மாருதம் வீதியின் வாய்
திசையெல்லாம் கமழும் பொழில்சூழ் திருவெள்ளறை நின்றானே!

5. 3. 2.

குருக்கத்திப் பூவின் வாஸனை நிறைந்துள்ள வீதிகளோடும் சோலைகளால் சூழப்பட்ட திருவள்ளரையில் நித்யவாஸம் பண்ணும் பகவானே! உம்முடைய நாபீகமலத்திலுண்டான ப்ரும்மாவுக்கு முன் ஒரு காலத்தில் கெட்டுப்போன வேதங்களை ஹயக்ரீவனாய் அவதரித்து திருப்பிக் கொடுத்து உபகரித்தது போல் என் விஷயத்திலும் க்ருபை பண்ணி அருளவேண்டும்.

‘ முன்னிவ்வுலகேழுமிருள் மண்டியுண்ண
முனிவரொடு தானவர்கள் திசைப்ப வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளை யெல்லாம்
பரிமுகமா யருளிய வெம்பரமன் காண்மின்
செந்நெல் மலிகதிர்க்கவரி வீசச்
சங்கமவை முரலச் செங்கமல மலரையேறி
அனன்மலி பெடையோடு மமரும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த வமரர்கோவே ’’ 7. 8. 2.

முன் ஒரு காலத்தில் இந்த ஏழு உலகங்களும் அஜ்ஞானத்தால் மூடப்பட்டு தேவர்களும் அஸுரர்களும் திகைத்து நிற்கும் காலத்தில் பரமபதத்திலிருந்து க்ருபையுடன் வந்து ஸகல வேதங்களையும் அதன் அர்த்தங்களையும் ஹயக்ரீவனாய் ப்ரும்மாவுக்கு உபதேசித்தருளின பரமோதாரனான பகவான் தான், சாமரங்கள் போன்ற நெல்கதிர்களையுடையவும், சங்கத்வனியுடன் கூடினவும், ஹம்ஸமிதுநங்கள் யதேச்சையாய் ஸஞ்சரிக்கும் திருவழுந்தூரில் நித்யவாஸம் பண்ணுகிறவர்.

இந்த இரண்டு பாட்டுக்களிலும் ஹயக்ரீவரைப்பற்றி அருளிச்செய்திருப்பது இவ்விடத்தில் ஸாத்விகர்கள் நினைக்கத்தக்கது. ஆதலால் முதலில் ப்ரும்மாவுக்கு வேதத்தைக் கொடுத்த ஹயக்ரீவனால் வந்த ஸ்ரீதேசிகனுடைய ஜ்ஞானம் அநுபாதேயமாகில் ப்ரும்மாவுக்கு ஏற்பட்ட வேதங்களும் அதைப்பற்றிய வேதாந்த சாஸ்த்ரங்களும் எல்லாம் அநுபாதேயதமங்களமாகிவிடும். ஆகையால் ஸ்ரீ ஹயக்ரீவனுடைய அந்தந்த ஸமயங்களில் வித்யைகளை ப்ரவசனம் செய்த உபகாரத்தை அநுஸந்தித்து அவ்வெம்பெருமான் திறத்தில் க்ருதஜ்ஞதையுடன் பக்திசெய்து கொண்டிருந்தால் நாம் எல்லோரும் தத்வஜ்ஞாநத்தை அடைந்து அதனால் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையலாமென்று பெரியோர்களுடைய அபிப்ராயம்.

ஸ்ரீ:

கயாமாஹாத்ம்யம்.

(ஸ்ரீ. உப. கோமடம். ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.)

அசுரர்களுக்குள் மிகுந்த பலமும் பராக்ரமமுமுடைய கயாவென்னும் ஒரு அசுரன், கோலாகல மென்னும் பர்வதத்தில் மிகவும் தீவ்ரமான தபஸ்ஸு செய்துவந்தான். அவன் நூறுயோசனை உயரமும், அறுபது யோஜனை பருமனு முடையவன். அவனது தபஸ்ஸின் வேகத்தால் தேவர்களெல்லோரும் மிகவும் நடுங்கி ப்ரும்மாவிடம் போய் முறையிடவே, ப்ரும்மாவும் அவர்களுடன் மகாவிஷ்ணு விடம் சென்றார். மகாவிஷ்ணுவும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இரங்கிக் கயாசுரனிடம் வந்து உன் தபஸ்ஸினால் ஸந்தோஷம் அடைந்தேன், வேண்டியவரங்கே ளென்னவே, அவன், தன்னுடைய தேகம் ப்ரும்மா, சிவன் முதலான எல்லாரைக் காட்டிலும் மிகவும் பரிசுத்தமுடையதாக வேண்டும் என்று கேட்டான். மகாவிஷ்ணுவும் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி போய்விட்டார். கயாசுரனும் தபஸ்ஸை முடித்துவிட்டான். அவனுடைய தேகம் மிகவும் பரிசுத்த மானதனால், அதைப் பார்த்தும், தொட்டும், ஸகல ஜனங்களும் பரிசுத்தமடைந்து கொண்டிருந்தார்கள். அப்படியடையவே, மூன்று லோகங்களும் சூன்யமாய் விட்டன. யமனுக்கும் வேலையில்லாமல் போய்விட்டது. யமனும், இந்த்ரனும் ப்ரும்மாவினிடம் போய், எங்களுக்கு ஒரு வேலையுமில்லையே, எல்லோரும், கயாசுரனைப்பார்த்தும், தொட்டும் நல்லகதியை அடைந்துவிட்டார்களே, ஆகையால் எங்களுக்கு நீர் கொடுத்திருந்த அதிகாரத்தை நீரே வாங்கிக்கொள்ளும் என்றார்கள். இதைக்கேட்டதும் ப்ரும்மா, இந்த சங்கடத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வழிதெரியாமல் மகாவிஷ்ணுவைக்கண்டு தன்குறையைச் சொல்லிக் கொண்டார். அவரும், ப்ரும்மாவை நோக்கி, நீர் கயாசுரனிடம் சென்று, உமக்கு யாகஞ்செய்ய உத்தேச மென்றும், பரிசுத்தமான இடம் உலகில் கிடைக்கவில்லை யென்றும், அதனால் அவன் சரீரத்தைக் கொடுக்கும்படி கேளும் என்றார். ப்ரும்மாவும், மகாவிஷ்ணு சொல்லியபடியே கயாசுரனைக்கேட்க, அவனும் மிகுந்த ஸந்தோஷத்துடன் தன்தேகத்தில் பிரம்மா யாகஞ்செய்ய ஒப்புக்கொண்டான். உடனே யாகமும் ஆரம்பிக்கப்பட்டது. யாகத்துக்குச் சகல தேவதைகளும் வந்துகூடினார்கள். பூர்ணாஹுதி ஆனதும் ப்ரும்மா யூபஸ்தம்பத்தை நாட்டினார். உடனே கயாசுரனுடைய சரீரம் அசைய ஆரம்பித்தது. அதைப்பார்த்துத் தர்மராஜனைக் கூப்பிட்டு, கயாசுரன் சரீரம் அசையாதபடி அவன் தலையில் ஒரு மலையைக் கொண்டுவந்து வைக்கச்சொன்னார். அப்படிவைத்தும் அந்தத்தலை மலையுடன் ஆட ஆரம்பித்து விட்டது. ப்ரும்மா சிவன் முதலான எல்லாத் தேவதைகளையும் அந்தமலையின்மேல் ஏறி உட்காரும்படி கட்டளையிட்டார். அப்படிச் செய்தும் ஆட்டம்நிற்கவில்லை. யாக

த்துக்கு அபாயம் வந்துவிடுமோ என்னும் பயத்தால் ப்ரும்மா மகாவிஷ்ணுவிடம் சென்று ஸ்வாமீ! கயாசுரன் தேகம் அசையத் தொடங்கிவிட்டது. யாகம் நிறைவேறாமற் போய்விடுமே யென்று முறையிட்டார். அவரும் தம்முடைய சக்தியை ஆகர்ஷித்து ஒரு மூர்த்தியை உண்டாக்கி ப்ரும்மாவுக்குக் கொடுத்து இதை அந்த மலையின் பேரில் வைத்தால் அசைவு நின்றுவிடும் என்று சொன்னார். ப்ரும்மாவும் அப்படிச்செய்தும் அசைவு நிற்கவில்லை. மறுபடியும் ப்ரும்மா மகாவிஷ்ணுவை ப்ரார்த்தித்தவுடன் மகாவிஷ்ணு தாமே தம்முடைய கதாயுதத்தை எடுத்துக்கொண்டுபோய் அந்த மலையின்பேரில் நின்று, கயாஸுரனை அசையாதிருக்கும்படி கட்டளையிட்டார். கயாசுரனும் அசையாதிருந்துவிட்டான். பின்பு அவன் மகாவிஷ்ணு முதலானவர்களைப் பார்த்து என்னை ஏன் இப்படி வஞ்சனை செய்தீர்களென்று கேட்டதும் மகாவிஷ்ணு நீ எந்த வரங்கேட்டாலும் கொடுக்கிறோம் அஞ்சாதே என்றார். அதற்குக் கயாசுரன் 'இந்த க்ஷேத்ரம் என் பெயரிட்டு வழங்கப்படவேண்டும். ப்ரும்மா விஷ்ணு ருத்ரன் முதலான சகலதேவதைகளின் ஸாந்நித்யம் இந்த க்ஷேத்ரத்துக்கு உண்டாகவேண்டும். இங்கு எல்லாப் புண்ணியதீர்த்தங்களின் ஸாந்நித்யமும் வேண்டும். எவனொருவன் இங்கே ஸ்நானம் செய்து தர்ப்பணம் பண்ணிப் பிண்டதானமும் செய்கிறானோ அவன் தன்னுடைய குலத்தையும் அனேக இதர குலங்களையும் நல்ல கதியை யடையும்படி செய்தவனாகவேண்டும். பிண்டத்துடன் சிராத்தம் செய்கின்றவர்கள் ப்ரும்மலோகமடையவேண்டும். ப்ரும்மஹத்தி முதலிய பாபங்களும் இந்த க்ஷேத்ரத்தை மிதித்தமாத்திரத்தில் எல்லோருக்கும் நீங்கவேண்டும்' என்று பிரார்த்தித்தான். மகாவிஷ்ணுவும் அங்ஙனமே அவனுக்கு வரங்களைக்கொடுத்து, 'என்னுடைய பாதம் வைக்கப்பட்டுள்ள இடத்தைப் பூஜை செய்பவர்கள் நல்லகதி யடைபவர்களாக ஆகுக' என்று சொல்லிவிட்டுத் தேவர்களுடன் மறைந்தனர். ப்ரும்மாவும் யாகத்தை நிறைவேற்றினார். கயாசுரனும் மோக்ஷத்தை அடைந்தான். ப்ரும்மாவும் யாகத்தை நடத்த மனஸ்ஸால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிராம்மணர்களுக்கு யதேஷ்டமாக க்ராமங்களை ஏற்படுத்தியும், அன்னபர்வதங்களை உண்டாக்கியும், பாலாகவோடும் பல்குனி நதியை ஸ்ருஷ்டித்தும், நெய்யாறு தேனாறுகளை உண்டாக்கியும், காமதேனு, கல்பக விருக்ஷம் இவற்றைக்கொடுத்து ஒருவரிடத்தும் யாசகஞ்செய்யக்கூடாதென்று கட்டளையிட்டும் தமது இருப்பிடஞ் சேர்ந்தனர். சிலநாளைக்குப் பிறகு இந்தப் பிராம்மணர்கள் அபரிமிதமான ஐசுவரியத்தைப் ப்ரும்மா தங்களுக்குக்கொடுத்திருந்தும் பேராசையால் பிறருக்கு யாகங்களைச் செய்வித்தும் யாசிக்கவும் தொடங்கினார்கள். இதனை அறிந்த ப்ரும்மா அவர்களுக்குக் கட்டிக்கொடுத்துள்ள வீடுகளை மண்வீடுகளாகவும் நெய், பால், தேன் நதிகளை ஜலநதிகளாகவும், அன்னமலைகளை கல்மலைகளாகவும் அந்த ப்ராம்மணர்களை தக்ஷிணைவாங்கியே ஜீவனம் பண்ணுகிறவர்களாகவும் சபித்துவிட்டு

போயினர். அன்றுமுதல் அவையெல்லாம் அவரது சாபத்தின்படியே ஆயின. அந்தப் பிராம்மணர்கள் எங்களுக்கு பிழைக்க வழியில்லையே நாங்கள் எப்படிப்பிழைப்போமென்று ப்ரும்மாவிடம் முறையிட்டுக்கொள்ளவே அவரும் மனமிரங்கி அவர்களைப் பார்த்து நீங்கள் சந்த்ர சூர்யர்கள் உள்ளவரையிலும் தீர்த்தயாத்ரையாக வருபவர்களிடம் தக்ஷிணைவாங்கியே ஜீவிக்கக்கடவீர்களென்றும், கயையில் சிராத்தம் செய்கிறவர்கள் உங்களை பூஜிக்கவேண்டுமென்றும், உங்களைப் பூஜிப்பது என்னைப் பூஜிப்பது போலாகுமென்றும், மகாவிஷ்ணுவின் பாதத்தில் எவன் பிண்டதானம் செய்கிறானோ அவன் இருபத்தொரு தலைமுறையிலுள்ள பித்ருக்களை கரையேற்றுவிக்கிறானென்றும், சொல்லிப்போயினர்.

ஆகையால் தான், ப்ரும்மாவின் மானஸபுத்திரர்கள் இப்பொழுது இந்தக் கயாவாளிகளாக இருக்கிறார்கள். இதுதான் கயையின் மாகாத்ம்யம்.

இது வாயுபுராணம் 106-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ:

ஜாதியும் மதமும்.

(ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல தாதாசாரியர்.)

வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் நிர்ணயம் செய்யப்பட்ட ஜாதிகளையும் மதங்களையும் பற்றி இக்காலத்திய மேதாவிகள் செய்யும் வியாக்கியானங்களும் உபபத்திகளும் பழைய வழிகளில் கௌரவமும் அபிமானமும் நம்பிக்கையும் உடைய வ்ருத்தர்களுக்கு மனதிற்கு இசையக்கூடியதல்ல. தேசக்ஷேமம் என்கிற வார்த்தையை அர்த்தமில்லாத வகையிலே சொல்லிக்கொண்டு அவரவர்களுக்குத் தோன்றிய முறைகளை யெடுத்துக்காட்டி பழைய ஆசாரங்களைப் பழிப்பதும் விடுவிக்க முயற்சிச்செய்வதும் இக்காலத்திய மேதாவிகளின் முக்கிய காரியமாக இருக்கிறது.

தர்மசாஸ்த்ர முறைப்படி பிராஹ்மணர்களெல்லாரும் ஒரே வகுப்பாராயிருக்க வைஷ்ணவர்கள் ஸ்மார்த்தர்களிடத்தில் போஜனம் செய்யாதிருப்பது அகாரணமானதென்று அவர்களை இகழ்வதும் ஸ்மார்த்தர்கள் சிலர் வைஷ்ணவர்களிடத்தில் போஜனம் செய்ய ஸம்மதிப்பதை யெடுத்துக்காட்டி அவர்களைப் புகழ்வதுமாய்ச் சில மேதாவிகள் உபந்யாஸம் செய்வதைக்கேட்டிருக்கிறோம்.

வைஷ்ணவர்கள் முக்கிய ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ர ஸித்தாந்தப்படி ஸ்ரீமந் நாராயணன் தவிர வேறு தேவதைகளுக்கு நிவேதனம் செய்யப்பட்ட எதையும் வைஷ்ணவன் புஜிக்கக்கூடாது,

என்பதையும், ஸ்மார்த்தர்கள், 'ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மஹேச்வரம்' என்கிறபடியே ஸூர்யன், பார்வதி, விஷ்ணு, விநாயகன், பரமசிவன் இவ்வைவர்களையும் பூஜிக்கிறவர்களென்பதையும் அப்படியே அவ்விரு வகுப்பார் கிருஹங்களிலும் பாத்திரங்களைச் சுத்திசெய்யும் முறை, பற்று அலம்புகிற முறை, முதலிய ஆசாரபேதங்களையும் ஸூக்ஷ்மமாக கவனிப்பவர்களுக்கு எவ்வித ஆக்ஷேபணையும் உண்டாகாது.

போஜனவிஷயமே யிப்படியிருக்கையில் கொள்வனை கொடுப்பனையைப் பற்றி விசாரமேது? இப்படி பிளவுபட்டு விலகிப்போய் எத்தனை நாள்களாயிருக்குமென்கிற கேள்விக்கு தெரிந்துகொள்ள முடியாத காலம் முதலாகவென்று பதில் சொல்லுவதே பொருத்தமுடையது. வைஷ்ணவர்களில் சிலர் கொள்கைப்படிக்கு ஸ்ரீபாஷ்யகாரர் காலந்தொடங்கியே இக்கட்டுப்பாடு என்று வைத்துக்கொண்டாலும் அது இப்போதைக்கு தொள்ளாயிரம் வருஷமாகிறது.

இத்தனை வருஷகாலமாய் நடந்துவரும் கோட்பாட்டை எளிதில் அகற்றிவிட யாரால் முடியும்? தேசக்ஷேமமென்று கல்பித்துச் சொல்லப்படுகிற அர்த்தமில்லாத வார்த்தையை யார் பொருள்படுத்துவார்கள்? நாளாவர்த்தியில் இவ்வெண்ணம் நம்மவர்களில் தெளிவும் அறிவும் உடைய சில விருத்தர்களுக்கும் கூட உண்டாயிருக்கிறதென்பது மிகவும் வ்யஸனிக்கத் தகுந்த விஷயமேயாம்.

மந்த்ரபூர்வகமாகச் செய்யப்படும் ஸாதாரண தானங்கள் கூட பஞ்சஸம்ஸ்காரம் இல்லாதவர்களுக்குச் செய்யக்கூடாதென்கிற அபிஸந்தியால் வாசா சொல்லுவதைக்கூட மாற்றி வைஷ்ணவர்கள் நடந்துவருவதை யார்தான் மறுதளிக்க முடியும்? 'ஸர்வேப்யோ ப்ராஹ்மணேப்யோ நம:' (எல்லா பிராஹ்மணர்களுக்கும் நமஸ்காரம் என்றும்) ச்ரோத்ரியாய ஸம்ப்ரததே (வேதாத்தியயனம் செய்தவனுக்குக் கொடுக்கிறேன்) என்றும் சொல்லுவது பழைய வழக்கமாக இருந்தது. ஸ்மார்த்தர்கள் இன்னும் அப்படியேதான் சொல்லி வருகிறார்கள். வைஷ்ணவர்கள் மாத்திரம் அதை மாற்றி, (ஸர்வேப்ய: ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம:, ஸ்ரீவைஷ்ணவாய ஸம்ப்ரததே, எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு நமஸ்காரம், ஸ்ரீவைஷ்ணவனுக்குக் கொடுக்கிறேன்) என்று சொல்லிவருவதைக் கவனிக்க வேண்டும்.

'தஸ்மாத் விஷ்ணு ப்ரஸாதாய வைஷ்ணவாந் பரிதோஷயேத்'

அதனால் விஷ்ணுவின் அநுக்கிரஹம் பெறவேண்டுவதற்காக ஸ்ரீ வைஷ்ணவர்களை ஆராதிக்க வேண்டுமென்று பகவத் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதையும் விஷ்ணுவைத் தவிர வேறு தேவதைகளை ஸேவிக்கக் கூடா

தென்று நிஷேதிக்கப்பட்டிருப்பதையும் கொண்டு பதிவ்ரதா தர்மத்திற்கொப்பான பாரமைகாந்த்ய தர்மத்தில் நிலைபெற்ற நம்மவர்கள் இப்படி அநுஷ்டிக்கலானார்கள். அவர்கள் ஏற்படுத்திய ராஜமார்க்கம் நாளது வரையில் எவ்விதமான தடையும் இல்லாமலே தெரியாதவர்கள்கூடத் தவறிப்போகாமல் வழிநடக்கக் கூடியதாயிருக்கிறது. இப்படி பல நூற்றாண்டுகளாக நடந்துவரும் வழக்கத்தை அதன் உண்மையை யறியமாட்டாத புதுமேதாவிகள் அழிக்க முயற்சிசெய்வது எவ்வளவு அநியாயம்? வைஷ்ணவர்களின் கோட்பாட்டை ஸ்மார்த்தர்கள் பலர் நியாயமென்று ஒப்புக்கொண்டே இருக்கிறார்கள். ஸ்திரீகளின் பதிவ்ரதா தர்மத்தைப் பொறாது பழிகூறுபவர் யாராவது உண்டோ? ப்ரபஞ்சமெல்லாம் கடவுள் மயமன்றோ என்கிற நியாயத்தை அவ்விஷயத்தில் உபயோகிப்பது யுக்தமாகுமோ?

சில ஸ்திரீகள் பரபுருஷர்களைக் காண்பதும் பேசுவதும் பழகுவதும் செய்தாலும் மனநிலையில் திடம் குறைபடாது கற்புநிலைக்குப் பழுதுநேராது நடந்து வருவதுண்டு. சில ஸ்திரீகள் மனநிலை மாறுமோ என்று அஞ்சி அப்பரபுருஷரோடு பேசுவதையே விட்டு நடந்துகொள்ளுகிறார்கள். இவ்விரண்டு வகையும் கற்புநிலைமைக்கு உற்றதேயாம். இவ்விருவகையாரில் ஒருவகையாரைப் புகழவும் ஒருவகையாரை இகழவும் இடமுண்டென்று நாம் நிர்ணயிக்கவில்லை.

உண்மைநிலை இப்படியிருக்க மதபேதத்தைப் பாராட்டாது ஜாதிபேதத்தோடு நிற்கவேண்டுமென்று சில மேதாவிகளும் ஜாதிபேதத்தையும் ஒழித்து இந்துக்களனைவரும் ஒன்றென்னும் கொள்கையை நிலைநாட்டவேண்டுமென்று சில புத்திமான்களும் அந்த வேறுபாட்டையும் ஒழித்து மனிதர்கள் மிருகங்கள் என்கிற பகுபாட்டோடே நிற்கவேண்டுமென்று சில நிபுணர்களும் இப்போது அபிப்ராயப்படலானார்கள். இம்மூன்று வகுப்பாரும் தேசக்ஷேமத்திற்குத் தாங்கள் தாங்கள் குறித்துக் காட்டுகிறவழியே ஏற்றதென்று உபந்யாஸம் செய்கின்றனர். அதற்கு திருஷ்டாந்தமாகச் சில பழைய ஆசாரங்களைக் காட்டுகின்றனர். அதன் உண்மை என்ன? அது எவ்வளவு வரைக்கும் திருஷ்டாந்தமாக்கக் கொள்ளக்கூடியது? அதற்குக் காரணமென்ன? இந்த விஷயங்களை அவர்கள் ஆலோசிப்பதில்லை. சில விஷயங்களைக் கல்பித்துக் காட்டவும் அவர்களில் சிலர் பின் வாங்குவதில்லை.

ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்யர்களில் பெருமையும் பேரும்பெற்ற மஹான்களில் கிடாம்பி ஆச்சானென்கிற மஹாபுருஷன் ஒருவர் இருந்தார். அவர்வம்சம் பலகிளையாகத் தழைத்து பல இடங்களில் வியாபித்திருக்கிறது. அவற்றி லொருகிளை காஞ்சீபுரத்தை அடுத்த அரசாணிப்பாலை என்னும் அக்கிரஹாரத்தின் பெயரைக் குடிப்பெயராகப்பெற்று அநேக இடங்களில் பிரசித்தியோடு

விளங்கிவருகிறது. இதில் அந்த அக்கிரஹாரத்தை ப்ரதிஷ்டை செய்து அங்கே அநேக யாகங்களைப்பண்ணி தீக்ஷிதர்களென்கிற பிருதை வம்ச பாரம்பர்யமாய் நிலைநிற்கும்படி செய்த மஹாத்மா ஒருவர் இருந்தார். அவர் திருநாமம் ஸ்ரீநிவாஸாத்வரி. இவர் ச்ரௌதக்ரியாமணிதர்ப்பணம் என்கிறகிற கிரந்தமருளிச் செய்திருக்கிறார்.

இவர் செய்த யாகங்களினால் திருவுள்ள முகக்கப்பெற்ற பேரருளாளப் பெருமாள் (காஞ்சீபுரம் வரதராஜஸ்வாமி) இவரை 'அப்பா' என்று கூப்பிட்டழைத்தா ரென்றும் அது முதல் அவர் அப்பாதீக்ஷிதர் என்று பிரசித்தி அடைந்தாரென்றும் வழங்கி வருகிறது. இந்த ஐதிஹ்யத்திற்கு அநேக ஆதாரங்களும் இருக்கின்றன. பெனுகொண்டா சந்திரகிரி முதலிய இடங்களை இராஜதானியாகக் கொண்டு அரசுபுரிந்துவந்த ராயவம்சத்தின் குலகுருவாய் அதனால் ராயகுருவென்றும் கர்ணாட ராஜகுருவென்றும் பிரசித்திபெற்றிருந்த தாதாசார்ய ரென்கிற மஹாவித்வானுக்கு அவர் மருமகன் (உடன்பிறந்தாள் குமாரன்). இந்த தாததேசிகன் ராஜஸ்தானத்தில் பெரிய வித்வானொருவனோடு வாதம் செய்து அவனால் கொள்ளப்பட்ட ஐந்து மதங்களையும் ஜயித்து பஞ்சமத பஞ்சனம் என்கிற கிரந்தமியற்றியதால் பஞ்சமத பஞ்சனம் தாததேசிகன் என்று ப்ரஸித்தி பெற்றிருந்தார். இந்த மஹாபுருஷன் அவதாரம் சாலிவாஹன சகம் 1431. கலி 4610. (இ. கி. பி. 1509) இவர் 82-வர்ஷம் லீலாவிபூதியில் எழுந்தருளியிருந்தார்.

அந்த ஸ்ரீநிவாஸ தீக்ஷிதருடைய குமாரர் ரகுநாததீக்ஷிதர். அவர் குமாரர் வெங்கடாத்வரி. இவ்வம்சத்தில் எல்லோரும் மஹாபண்டிதர்கள். அநேக கிரந்தங்கள் செய்திருக்கிறார்கள். கவி வித்வத்சிகாமணி என்று பிருது பெற்றவர்கள். இந்த வேங்கடாசார்ய தீக்ஷிதர் செய்த அநேக கிரந்தங்களில் 'விச்வ குணாதர்சம்' மிகப்ரஸித்திபெற்றது. இதை அநேக லௌகிகர்கள் வாசித்தும் பார்த்தும் இருக்கிறார்கள்.

அதில் கவி தன் வம்சத்தின் பெருமையைப்பற்றிச் சொல்லும்போது,

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]'

காஞ்சீமண்டலத்திற்கு அலங்காரமாய் கர்ணாட ராஜகுருவாய் யாகங்கள் செய்பவராய் எல்லா திக்குகளிலும் புகழ்பெற்ற தாதாசாரியருக்கு எவர் உடன்பிறந்தாள் குமாரரோ, ஆத்ரேய கோத்திரத்தில் பிறந்த பண்டித ச்ரேஷ்டராகிய அந்த அப்பய்ய தீக்ஷிதருடைய குமாரர் ரகுநாத தீக்ஷிதரே கவி

குணங்கள் நிறைந்து விளங்குகிறார் என்று சொல்லி மேலே தான் அவரது குமாரரென்று சொல்லியிருக்கிறார்.

அண்ணா என்பதை 'அண்ணய' என்றும் 'அப்பா' என்பதை 'அப்பய' என்றும் 'கிருஷ்ண' என்பதை 'கிருஷ்ணம்' என்றும் சொல்வது உலக வழக்கம்.

இந்த வேங்கடாசார்யர் அருளிச்செய்த ஆசார்ய பஞ்சாசத் என்கிற தேசிகன் ஸ்தோத்ரத்தில்.

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]'

யாகசீலராகிய தாத தேசிகனது உடன்பிறந்தாள் குமாரராகிய ஸ்ரீநிவாஸாத்வரியின் குமாரராய் பிரசித்தியோடு வாழ்ந்துவருபவரும் ஆத்ரேயகோத்ரோத்பவருமாகிய ரகுநாத தீக்ஷித கவியின் குமாரராகிய வேங்கடாத்வரி கவி அழகிய ஐம்பது ச்லோகங்களால் ஸ்ரீவேதாந்த தேசிகனை ஸ்தோத்ரம் செய்தார், என்று பிரதிபாதித்திருக்கிறார். மற்றும் அநேக க்ரந்தங்களில் இப்படி காட்டப்பட்டிருக்கிறது. இந்த அப்பயதீக்ஷிதரென்கிற ஸ்ரீநிவாஸ தீக்ஷிதருடைய திருத்தகப்பனார் வரதாசாரியர்.

இவர்கள் கிருஷ்ண யஜுச் சாகிகள். மிகப்ரஸித்தியோடு பல ராஜஸ்தானங்களில் பெருமைப்பெற்று பல க்ரந்தங்கள் செய்திருக்கிற அப்பய தீக்ஷிதரென்கிற ஸ்மார்த்தபண்டிதரொருவர் இருந்தார். இவர் யாதவாப்யுதயமென்கிற தேசிகன் அருளிச்செய்த காவ்யத்திற்கு வ்யாக்யானம் செய்திருப்பதால் ஸ்ரீவைஷ்ணவர்களில் பலர் இவரை அறிந்திருக்கிறார்கள். இவர், அநேக யாகங்கள் செய்தவர். இவர் பாரத்வாஜகோத்ரம். ஸாமசாகை. இவர் தகப்பனார் ஸ்ரீரங்கராஜாத்வரி. இவர் ஜநநகாலம் சா. ச. 1475. கலி 4654. (இ. கி. பி. 1553).

இதன் விவரம் இப்படியிருக்க, அப்பயகுரு என்று கீழ் எடுத்த சுலோகத்திலுள்ளார்த்தத்துக்கு அப்பய தீக்ஷிதரென்று அர்த்தம் செய்து ஸ்மார்த்த வைஷ்ணவ ஸம்பந்தம் அந்த காலம் வரையில் அதாவது இப்போதைக்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் வரையில் இருந்ததாக தீபிகையில் சிலநாள் முன் வெளியிட்டிருப்பதைப்பார்க்க ஆச்சர்யமாயிருக்கிறது. ஒருபெரிய பரமைகாந்திவம்சத்திற்கு இப்படி ஒரு அப்பிரதிஷ்டை யுண்டாகாமலிருக்கும் படிக்கும் உண்மையில்லையை வெளியிடவேண்டியதற்கும் இதை எழுதலானேன்.

ஸ்ரீ:

ஸ்ரீதேசிகாபிமான விசேஷம். *

'[illegible] வாஸாதிகேஷு' என்றும், 'போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ்சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே' என்றும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில், சிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் அருளிச்செய்திருப்பதைப் பராமர்சிக்குங்கால் ஆசார்யனுடைய ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களிலும், அவர் வாஸம் செய்துகொண்டிருந்த இடத்திலும், அவருடைய ஸ்ரீகோசம் முதலியவைகளிலும் நாம் விசேஷமான கௌரவம் செய்யவேண்டும் என்பது ஸ்பஷ்டமாய் விளங்கும். 'நிக்ருஹீதேந்த்ரியக்ராமோ யத்ர யத்ர வஸேந்நர: தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிஶம் புஷ்கரம் ததா ॥' இத்யாதி ப்ரமாணங்கள் பொதுவில் எந்த இடத்தில் இந்திரியங்களை ஜயித்த புருஷன் வஸிக்கிறானோ அந்த இடம் குருக்ஷேத்ரம், நைமிசாரண்யம், புஷ்கரம் முதலிய க்ஷேத்திரங்களாகும், அதாவது அவைகளைப்போல் பாவநதமமான க்ஷேத்திரமாகும் என்று முறையிடுகின்றன. இந்திரியஜயமானது பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹ த்யானத்தாலன்றி ஸாத்யமானதல்லவென்று ஸ்ரீபகவத்கீதையில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதினால் இந்த ச்லோகத்தின் அர்த்தத்தை ஸ்ரீதேசிகன் விவரித்தருளும் பொழுது 'தேனார் கமலத் திருமகள் நாதன் திகழ்ந்துறையும் வானுடுகந்தவர் வையத்திருப்பிடம் வன்தருமக் கானுரிமயமும் கங்கையும் காவிரியும் கடலும் நானுநகரமும்நாகமும்கூடிய நன்னிலமே' என்கிற பாட்டில்பரதத்வமான ச்ரிய:பதியினிடத்தில் பக்திசெய்துகொண்டு முமுக்ஷுக்களாயிருக்கும்பரமைகாந்திகள்வஸிக்கும்இடமானது அப்படிப்பட்ட புண்யக்ஷேத்திரங்கள் என்றுகீழ் ச்லோகத்தில் ப்ரஸ்துதமானஇந்திரிய ஜயம்பண்ணினவனுடைய வாஸஸ்தானம் என்கிற ஸாமாந்யத்தை பாகவதர்களின் வாஸஸ்தானமான விசேஷத்தில் பர்யவஸானம் செய்து காட்டியருளினார். இந்த அர்த்தத்தையே ப்ரதேசாந்தரத்திலும் (அபீதிஸ்தவத்திலும்) '[illegible]'

* இது சென்ற புரட்டாசிமீ திருவஹீந்திரபுரத்தில் நடந்த ஸ்ரீமத் வேதாந்ததேசிக ஸபையாரின் வார்ஷிகோத்ஸவத்தில் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம் ஸ்ரீ. உ.ப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி செய்த உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம். [கோ. ஸ்ரீ. - உ. கா.]

என்கிற ச்லோகத்திலும் நிரூபித்தருளினார். ஆக எந்த இடத்தில் ஒரு பாகவதோத்தமர் கொஞ்சக் காலமாவது வஸித்திருந்தாரோ அந்த இடம் ஒரு பெரிய க்ஷேத்திரம்போல் பாவநதமமாகும் என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டதாயிற்று. இதைக் கைமுதிக ந்யாயத்தினால் ஸ்ரீதேசிகன் சிரகாலம் வஸித்திருந்த இந்தத் திருமாளிகையின் விஷயத்தில் யோஜிக்கவேண்டும். அதாவது கேவலம் ஒரு பாகவதோத்தமர் கொஞ்சக்காலம் எழுந்தருளியிருந்ததினால் ஒரு இடத்திற்கு க்ஷேத்திர மஹிமை உண்டாகுமானால் 'அன்றிவ்வுலகினையாக்கி அரும்பொருள் நூல் விரித்து நின்றுதன் நீள்புகழ் வேங்கடமாமலை மேவிப் பின்னும் வென்றிபுகழ்த் திருவேங்கடநாதன் என்னும் குருவாய் நின்று நிகழ்ந்து' என்கிறபடியே பகவானுடைய அவதாரமாய், ஆசார்யர்களுக்குள் ச்ரேஷ்டதமராய், அந்த ஆசார்ய சப்தத்திற்கு முக்யார்த்த பூதரான ஸ்ரீதேசிகன் சிரகாலம் (முப்பது ஸம்வத்ஸரம்போல்) எழுந்தருளியிருந்த இடமாகிய இந்தத் திருமாளிகை ஒரு பெரிய க்ஷேத்திரம் என்று சொல்லுவது இதினுடைய மஹிமையை மிகவும் குறுக்கிச் சொல்லுவதேயாகும் என்றபடி. இதை ஸ்ரீவைகுண்டநாதன் எழுந்தருளியிருக்கும் திருமாமணி மண்டபம் என்றே சொல்லவேண்டும்.

உபயவிபூதிக்கும் மத்ய ப்ரதேசத்தில் இருப்பதினால் திருவேங்கடமாமலை விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பானாற்போலே இந்த திவ்யதேசம் நடுநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகையினாலே இந்த லீலா விபூதியிலுள்ளவர்கள் அனைவர்க்கும் உபஜீவ்யமாகிறது என்பதை திருவுள்ளம் பற்றியே ஆசார்யன் 'ஆர்க்கும் கருணை பொழிவான் அயிந்தையில் வந்தமர்ந்த' என்றருளிச்செய்திருக்கிறார். திருவயோத்தியையில் ஜனங்கள் சக்ரவர்த்தித்திருமகனை விட்டுப்பிரிந்த ஆற்றாமையின் மிகுதியினால் 'அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குர கோரகா:' என்கிறபடியே துளிர், மொக்கு, இலை, வேர், மரம் முதலிய எல்லாமும் வாடி வருந்தி நிற்க அவற்றிற்கு ஒரு ஆப்யாயநமாயிருக்கும்படி தம்முடைய திருவடி நிலையாழ்வாரைத் தந்தருளினாற்போலே, நம் ஆசார்யனும் இந்தத் திவ்யதேசத்து பாகவதோத்தமர்களுக்குத் தம்மிடத்தில் இருந்த ப்ரீதியின் விசேஷத்தைக் கண்டு, அவர்கள் தம்முடைய பிரிவில் ஆற்றாமைப் படாமல் இருப்பதற்காகத் தம்மைபோல் அவர்களுக்குப் பூஜ்யமான இந்தத் திருமாளிகையையும், தமது திருக்கைகளாலேயே கட்டப்பட்ட திருக்கிணற்றையும் சாச்வதமான அடையாளங்களாக க்ருபைபண்ணிப் போந்தருளினபடியால் ஆசார்யனுக்கு இந்தத் திவ்யதேசத்தில் உள்ள அபிமான விசேஷம் தெரிவிக்கப்பட்டதாகிறது. ஆகையினா

லேயே இவருடைய குமாரராகிய நைனாராசார்யரும் ‘பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச ॥ ப்ராப்யாய ப்ராபகாயாஸ்து வேங்கடேசாய மங்களம் ॥’ என்கிறபடியே தமக்கு ஜனக பிதாவாயும், ப்ரும்மோபதேசம் செய்தவராயும், ஆசார்யனையும், அத்தால் தேவதையாயும், ப்ராப்யனையும் ப்ராபகனையும் இருந்த இவருடைய திருவுள்ளத்தை, அதாவது அபிமானவிசேஷம் இந்தத் திவ்யதேசத்தில் அதிகமாயிருந்ததைத் திருவுள்ளம்பற்றி ஆசார்யனால் சில்பிராஜனை ஜயித்தகாலத்தில் ஏறியருளப்பண்ணப்பட்ட ஆசார்யனுடைய அர்ச்சாவிக்ரஹத்தை இந்தத் திவ்யதேசத்திலேயே ப்ரதிஷ்டை செய்தருளினார் என்று நம் பெரியோர்கள் அநுஸந்தித்துப் போருவார்கள். ஆக நம் ஆசார்யன் சிரகாலம் எழுந்தருளி இருந்ததினால் ஒரு பெரிய க்ஷேத்திரமானதும், அவருடைய அபிமான விசேஷத்திற்கு ப்ரதானமான பாத்திரமானதும், அவராலேயே பண்ணப்பட்ட அர்ச்சாவதார திருமேனி ஸாந்நித்யம்செய்திருப்பதுமான இந்த இடம் நமக்கு மிகவும் பூஜ்யதமமாயிற்று.

இப்படி ப்ரத்யக்ஷமாகக் காணப்படும் ப்ரமாணங்களினால் ஆசார்யனுடைய அபிமான விசேஷம் ஒருவாறு நிஷ்கர்ஷிக்கப்பட்டது. இனி, இவருடைய ஸ்ரீ ஸூக்திகளைப் பராமர்சிப்போமாகில் இவருக்கு ஸ்ரீ தேவநாதன் விஷயத்திலேயே மிகுந்த அபிமானம் இருந்தது என்பது மிகவும் ஸ்பஷ்டமாய் விளங்கும். மற்ற திவ்யதேசத்து எம்பெருமான்கள் விஷயமாக இவர் அருளிச்செய்திருக்கும் ஸ்தோத்திராதிகள் பகவானுக்குப் பொதுவான குணங்களையும் பெருமைகளையும் உத்கோஷிக்கிறபடியால் அவை அநேகமாய் எல்லாத் திவ்யதேசங்களுக்கும் பொது என்றே கூறவேண்டும். ஸ்ரீ தேவநாதன் விஷயத்தில் இவருடைய ஸ்தோத்திரம் அப்படிப் பொது என்று சொல்லும்படியான நிலைமையில் இல்லை. ‘ந ஹி தஸ்மாந் மந: கஸ்சிச் சக்ஷுஷீ வா நரோத்தமாத் । நர: ஸக்நோத்யபாக்ரஷ்டும் அதிக்ராந்தேऽபி ராகவே ॥’ என்கிறபடியே திருவயோத்யா வாஸிகள் சக்ரவர்த்தித் திருமகனைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அவர் வெகுதூரம் சென்றபிறகும்கூட தங்களுடைய கண்களைத் திருப்பி இழுத்துக்கொள்ள முடியாமல் இருந்தாற்போலேயும், ‘யஸ்மிந் யஸ்மிந் வ்யாப்ருதாணீ........................சக்ஷுஸ் தத்ர நிபத்யதே ॥’ என்கிறபடியே பிராட்டியின் அவயவ ஸௌந்தர்யத்தில் ஆழங்கால்பட்ட தன்னுடைய இந்திரியங்களைத் திருப்பமுடியவில்லை என்று ராவணன் * சொன்னாற்போலேயும்.

* ராவணன் சொன்னது கெட்ட அபிப்ராயத்தினால் இருந்தபோதிலும் இங்கு அறியவேண்டியது ஒவ்வொரு அங்கத்தின் அழகும் அவனைப்ரமித்து நிற்கும்படி செய்தமை

(இன்னும் வரும்.)

ஸ்யாதேந்த்ர ச நச தத்வஜ்ஞ விவர்ஜிதா: ॥ ஸர்வேஷு: ஸர்வதா தஸ்மாத் ஸ்வசக்ராத்யங்கிதைர் ஜநை: । ஹோமஹோமாதநாத்யம் தேஷ்வர்ச்யந்தே ஹரி: வாஸிதை: । பக்ஜிதைர்வைஷ்ணவை மநாதிஷ்டைர் ப்ரஸக்த ரூபா: க்ஷணேந து । த்ருஷ்டஞ்ஜ்ஞாந ஸம்பந்நா யதோக்தாசார நிஷ்டிதா: । விப்ராத்யாஸ்ச ஸூத்ராஸ்து யதைவம் க்ருதலக்ஷணா: । தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந விஜ்ஞேயா: ஸதா ஸ்ருவ ... ணாதிஷு । ஸாவித்ர்யாதி ஜாஸ ஸர்வ ஸர்வேஷு ஸ்தோத்ர ஷஷ்டே ஹோமாதௌ । யாகே ஸர்வகர்மணா தேஷ்வ தீர்த்தாக்ஷாராதிகாந்யபி । ஸம்ஸ்காராந்தி யதாயோக்யம் சங்கசக்ராதி லக்ஷணை: । தயா யாநாஸநாதீநி விஷ்ணோ: ஸர்வாணி யத்நத: । ஸ்நாநேத்ராவகரணம் ஸர்வம் ஸாஸநாதி விவர்ஜிதம் । சுக்லாதீந் ச யந்த்ரம் ஸர்வபூர்ணஷிஷ்வவேஷ்டநம் । சக்ராதி லாஞ்சிதம் குர்யாத் ஸதீயாஸ்ச மஹாநய: । விப்ராதிவல்லாஞ்சிதவ்யா ஸ்த்ரீயா ஸம்ஸாரஹார்யய: । லாஞ்சிதவ்யா யதாயோக்யம் சக்ராதி லக்ஷணை: । ஸ்தா யகாத்யா: ஸவர்ணா ஸர்வம் சக்ராதி லாஞ்சிதா: । தேவதாஸ

ஆகையினால் எப்பொழுதும் உலோகங்களினால் செய்யப்பட்டவைகளாயும், நெருப்பில் காய்ச்சப்பட்டவைகளாயும், அந்தந்த மந்திரங்களினால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டவைகளாயும், அர்க்யம் கந்தம் முதலியவைகளினால் ஆராதனம் செய்யபட்டவைகளாயும் இருக்கிற சங்கம் சக்கரம் கதை பத்மம் முதலியவைகளினால் அங்கனம் செய்யத்தக்கவர்கள். வேதாந்த ஜ்ஞானங்களை உடையவர்களாயும் சாஸ்த்ரங்களில் சொல்லிய ஆசாரங்களில் நிஷ்டை உடையவர்களாயும் இருக்கிற ப்ராம்மணர் முதலியவர்களும் சூத்திரர்களும் எப்பொழுது இப்படி அங்கனம் செய்யப்பட்டிருக்கிறார்களோ அப்பொழுது ஸம்ப்ரதாயார்த்தம் முதலியவைகளைக் கேட்பது முதலியவற்றில் யோக்யதை உடையவர்களாக அறியத்தக்கவர்கள். ஓ! மஹாரிஷியே! சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட எல்லா ஸாமக்ரிகளுக்குள்ளும் ஆராதனம் செய்வதற்கு ஏற்பட்ட ஸாமக்ரிகளும், அர்க்யம் பாத்யம் முதலிய பாத்திரங்களும் அவைகளுக்குத் தக்கபடி சங்கம் சக்ரம் முதலிய அங்கனங்களினால் அடையாளம் செய்யத்தக்கவைகள். அப்படியே பகவானுடைய வாஹனம் ஆஸனம் முதலிய எல்லாவற்றையும் தன்னுடையதான ஆஸனம் தவிர மற்ற எல்லா வஸ்துக்களையும் மோதிரங்கள் முதலிய ஆபரணங்களையும் தலைக்குக் கட்டிக்கொள்ளும் வஸ்திரம் முதலியவற்றையும் சக்ரம் முதலியவைகளால் அங்கனம் செய்யப்பட்டவைகளாகவே செய்துகொள்ள வேண்டும். அந்தப் பகவானுடைய பசுமாடு முதலியவைகளும் அவருடைய வ்ருக்ஷம் முதலியவைகளும் ப்ராம்மணர் முதலியவர்களைப்போலவே சக்ரம் முதலியவைகளினால் அவைகளுக்குத் தக்கபடி அங்கனம் செய்யப்படவேண்டும். ஆராதனம் செய்பவர் முதலியவர்கள் இப்படி அங்கனம் செய்யப்பட்டவர்களாக இருந்தார்களேயாகில் அந்தக்கர்மங்களுக்கு யோக்யதையுடையவ

[illegible]

ர்களாவார்கள். மற்ற தேவதைகளினுடைய அடையாளங்களினால் அங்கனம் செய்யப்பட்டவர்கள் கர்மங்களுக்குத் தகாதவர்கள், எந்தப் பகவானுடைய மூர்த்தியில் சங்கம் சக்ரம் முதலிய அடையாளங்கள் காணப்படவில்லையோ அந்த மூர்த்தியில் தன் இஷ்டப்படி அங்கனம் செய்யக்கூடாது. உள்ளபடியே இருக்கிற அந்தமூர்த்தி வ்யாபக மந்த்ரத்தினால் ஆராதனம் செய்யத்தக்கது அந்த மூர்த்தியைத்தவிர மற்ற வஸ்துக்கள் முன்னால் அங்கனம் செய்யப்படாமல் இருந்தால் அங்கனம் செய்யப்படவேண்டியவைகள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீவிஷ்ணு தத்வத்தில் மூன்றுவது பாதம் முதல் படலத்தில், 'இப்படித் தெரிவிக்கப்பட்ட சிஷ்யர்கள் சக்ராங்கனத்தைச்செய்து கொண்டவர்களாய் பகவானுக்கே அடிமையாக ஆனார்கள். மற்ற தேவதைகளின் கர்மங்களைச் செய்யவில்லை' என்றும், இரண்டாவது படலத்தில் 'இப்படி சக்கரத்தின் அடையாளத்தைத் தரித்துக் கொண்டவனாகவே இருக்கவேண்டும் என்று அனுமதி செய்யப்பட்டவனாய் (அப்படியே) செய்துகொண்டான்' என்றும், ஒன்பதாவது படலத்தில் 'ஓ, மஹரிஷியே! உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களினால் ஆத்மாவைப் பரிசுத்தம் செய்து கொண்டவர்களாயும் பகவானுடைய அடையாளங்களினால் அங்கனம் செய்யப்பட்டவர்களாயும், பகவானுடைய திருநாமங்களைத்தரித்தவர்களாயும், வீடு முதலிய வஸ்துக்களில் பற்றுதலை விட்டவர்களாயும் இருப்பவர்கள் எல்லா அபிப்ராயத்தினாலும் பகவானையே சரணமாக அடையக்கடவர்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலேயே கடைசி படலத்தில் 'மனிதர்களுக்கு சக்கரம் முதலியவைகளைத் தரிப்பது' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டிருப்பது முன்னமேயே உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் நாலாவது படலத்தில் 'ப்ரும்மசாரி, க்ருஹஸ்தன், வான

[illegible]

ப்ரஸ்தன், ஸந்யாஸீ இவர்கள் நாலு ஆச்ரமத்தார்கள் என்று முறையே சொல்லப்பட்டார்கள்' என்றாரம்பித்து 'இவர்கள் எல்லோரும் சக்ரத்தின் அங்கனத்தைத் தரித்துக்கொண்டவர்களாய் ஸமயாசாரங்களில் நிஷ்டையுடையவர்களாய்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. (இருக்கவேண்டும்) என்று மேல்பதம். பராசரஸம்ஹிதையில் க்ரஹார்ச்சையின் ப்ரதிஷ்டையைச் சொல்லும் அத்யாயத்தில் 'ச்ரோத்ரியனும், விஷ்ணு பக்தனும், க்ரஹஸ்தாச்ரமத்தை உடையவனும், சக்கரத்தின் அடையாளத்தைத் தரித்துக்கொண்டவனும் இருக்கிற ப்ராம்மணன் ப்ரதிஷ்டையைச்செய்ய யோக்யதை உடையவனாகிறான். அவனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட அந்த விஷ்ணு அந்த பிம்பத்தில் ஸாந்நித்யத்தைச் செய்கிறார். இதர தேவதைகளிடத்தில் பக்தி உடையவனாவது, இதர தேவதைகளும் விஷ்ணுவும் ஸமம் என்கிற புத்தியையுடையவனாவது, தைவம் இல்லை என்கிற புத்தியை உடைய நாஸ்திகனாவது, வேதாத்யயனம் செய்யாதவனாவது ப்ரதிஷ்டை செய்யக்கூடாது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாரதீய பத்ததியில 'க்ருஹஸ்தனும், வேதாத்யயனம் செய்தவனும், நித்யகர்மங்களை அனுஷ்டிப்பதில் ஆசை உடையவனும், பரிசுத்தனும், சாந்தியை உடையவனும், தாந்தியை உடையவனும், சக்ராங்கனத்தைத் தரித்துக்கொண்டவனும், அந்தப் பகவானிடத்தில் பக்தி உடையவனும், தோஷம் இல்லாதவனும், சாஸ்திரங்களை அறிந்தவனும், கர்மங்களைச் செய்வதில் ஸாமர்த்திய முடையவனும் இருக்கிற ப்ராம்மணன் ப்ரதிஷ்டை செய்யத்தகுந்தவனாகிறான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் எல்லாவற்றிற்கும் [illegible] ஸ்ரீஸாத்வத ஸம்ஹிதையில் விபவாவதார மூர்த்தியை நிரூபிக்கு[illegible]டத்தில், எந்த மூர்த்திகளுக்கு ஆயுதங்களினாலும் வஸ்திரங்களினா[illegible] [illegible]சான்களி

186744

யெஷாம் வூக்ஷி வஷ்க்ஷா ஜமதூயெ । தெஷி ஶூஷ்ந வ்ருஹ்ம் த்ர யாரயஷ்ரூஷி மொவரெ । ஶுஹாடெ வாம்ஸவடெ வா வ்ருஷெ வாணி தறுவயெ । த ந்ஶுஸ வமயெ உஶூஷ் கஷுணாம் ஷூதிவத்து யெ । சுவிஸம்ஸாரிணொஜந்தொ: ஹரிவா மெவஷ்ணவஸ்ய । ந ஜஹாத்யாவ்ருதம் ஜீஜம் கிம் வடந விஷவாக்ருதெ: ॥ '' இதி

ந வ வாவ்யூ-' சுஸஶுத யம் ஶாஹாவாரம் வாஸ-தெவ வராய ணம் । ஶுஹஶுக்ஷணஸம்வஷம் வக்ராங்கித உதஷ்ஷம் ॥ '' இதி மெ ஜவவதாஜிஜஷி ஸஹஜ விஷ்ணவாஶிதி—தஷிஷி மெஜவவமெ ஸஹஜ விஷ்ணவாஶெவ நியாஜகாஹாவாக, ஶுஹஶுக்ஷண ஸம்வஷ ஶித்யூநெ மதாயக்வாக,; ஶுஹாவாரஶிதிவக வாஶ்தாத்யாய வண-மெநாவவமெதூ । சுஷூ வா ஶுஹஶுக்ஷண ஶுஷவஸ்யெ ஷஷீவஷ்யூபாக ஸம்கொவ:, சுக்ரு ஸம்ஹிதாஜாஷ் ஶூஷ்ஷா ஜ்யூநஷஸாராக சுஜ்ஷ விஷயஜிதி உஷவ்ய । ஷவம் ஸநக்ஷஜா

னும் மூன்று உலகங்களிலும் ப்ரகாசம் ஏற்படவில்லையோ அவைகளும் கால்களிலாவது நெற்றியிலாவது தோள்பட்டையிலாவது பின்பக்கத்திலாவது இரண்டு உள்ளங்கைகளிலாவது மயிர்க்கால்களிலாவது தலையிலாவது கர்மங்கள் நிறைவேறுவதற்காக அடையாளங்களைத் தரிக்கின்றன. ஸம்ஸாரியாகிய ஜந்துக்களுக்கும் வைஷ்ணவர்களின் ஸ்வபாவத்தினால் பகவானுடைய அடையாளங்கள் நீங்கிவிடுவதில்லையென்றால் விபவரூபியான பகவானுக்குக் கேட்கவேண்டியதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'நல்ல நடவடிக்கை யுடையவனும் வாஸுதேவனையே ஆச்ரயித்தவனும், சுபங்களான அடையாளங்களை உடையவனும் சக்ராங்கனம் செய்யப்பட்டவனும் இருக்கிற உத்தமமான எந்தப்பிள்ளையைப்பெற்றாளோ' என்று சொல்லுகிற லிங்கபுராணத்தில் சொல்லியிருக்கிற வசனத்தை அனுஸரித்து இதுவும் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டசக்ரம் முதலிய சின்னங்களைச் சொல்லுகிறது என்று சொல்லுவது உசிதமல்ல—அந்த லிங்க புராண வசனத்திலேயே ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட சின்னத்தைச் சொல்லுகிறது என்பதற்குக்காரணம் ஒன்றும் இல்லாமையாலும், 'நல்ல அடையாளங்களை உடைய' என்பதினால் ஸ்வபாவத்தில் ஏற்பட்ட அடையாளங்கள் சொல்லப்பட்டபடியினாலும், 'நல்ல நடவடிக்கையையுடைய' என்று சொல்லியிருப்பதைப் போலப் பின்னால் வரப்போகிற சக்ராங்கனத்தைச் சொல்லுவது பொருந்து மாதலாலும், 'நல்ல அடையாளங்கள்' என்கிற பதத்திற்கு அவ்விடத்தில் சுருக்கி அர்த்தம் சொல்லிக்கொண்ட போதிலும் இந்த இடத்தில் வேறு ஸம்ஹிதைகள் ச்ருதி முதலியவைகளை அனுஸரித்து சக்ராங்கனத்தையே சொல்லியிருக்கிறதென்று எண்ணத்தக்கது. இப்படியே ஸநத்குமார ஸம்ஹிதை முதலியவைகளிலும் 'சக்ராங்கன

ஸம்ஹிதாஜிஷ்வபி 'ஷவஷ்வாவ விநாஶாஹம் ஶயாக்ஷஸ்ய தூ யாஶ ணம் । ஷவஷ்கஸ்யாணஷ ஜிஹவஷ்ராக ஸம்ஸார நாஶநம் । ஸுவண்ஷ ஶஷவ்யதாஷ்ஷாமெஷ்யெ மொஷமெஹந வ தமெவெவ வ । தயா ஶயாஜ உஷ்டாஶம் ஸநாஹிம் வ ஸுவ்யத்தகம் । ஜ்வாலா வதுஷ்கஸம்யுக்தம் க்ருத்வா மெவம் வியாநத: । சுஶள ஷூதாவ்ய விஷிவக யாஶயெக ஹக்ஷிஸம்யுதம் ॥ '' இத்யாஜி ஊஷ்ஷ்வ்ய । தமெவம் ஹமவஷ்ஷமெ ஸ ஜாராயகாஜிநாம் ஸமெவஷாஜஷி வக்ராஜி ஶூஷ்நயாரணஸ்யாவ ஶ்யகதஷ்வ்யதயாஷிஹிதக்வாக ஷூஜாணாஷாஶ மவெஷணம் வாவ வாகக நிஹித ஹிரண்யநிஷெ: வஶஶஷஸ்ய கொஷ்ஷுவாஷ்யம் க்ருவணஜநயாவநஜிதி வயிஹஸந்தி ஸந்த: । தெநாஹித ஶுக்ஷ ணவயஷயதயா க்ருதஶுக்ஷண ஶுஷவஸ்ய ஷூஹிஷஶுஜி விஶெஷா ஶ்யுணஜஷி நிஷஷ்ஷக்த: ''வ்ராஹ்மணெ: க்ஷத்ரியெவெஶ்யெ: ஶஷ்ஷு க்ருதஶுக்ஷணெ: '' இதி வக்ராஜிவிஷயஜெவ । ஸ தெநயஷ்ஷம்ஹரிவம்ஶெ ஸவ்ய வக்வாரிம்ஶ ஹததஜெயாயெ யாத்ரா ஶஹ் "வக்ராங்கிதா: ஷூவெஷ்ஷவ்யா யாவஷாமஜநம் ஜஜ; இதி । தஜவி,

---

த்தைத் தரிப்பது எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கத்தக்கது. இந்த உலகத்தில் எல்லா மங்களங்களையும் கொடுக்கத்தக்கது. பிறகு ஸம்ஸாரத்தையும் போக்கடிக்கத்தக்கது. தங்கம் வெள்ளி தாம்பரம் முதலிய லோஹங்களினால் எட்டு ஆரைக்கால்களை உடையதாய் அழகான நடுப்ரதேசத்தை உடையதாய் வர்த்துலமாய் நாலு ஜ்வாலைகளோடு கூடினதாய் சக்ரத்தைச் செய்து சாஸ்திர விதிப்படி அக்னியில தாபம் செய்து பக்தியுடன் தரிக்கவேண்டும்' என்றிவை முதலியது சொல்லப்பட்டிருப்பது காணத்தக்கது. இப்படிப் பாஞ்சராத்திர சாஸ்திரத்தில் ஆராதனம் செய்பவர்கள் எல்லோருக்கும் சக்ரம் முதலிய அடையாளங்களைத் தரிப்பது அவச்யம் வேண்டியதென்று விதிக்கப்பட்டிருப்பதினால் இது விஷயத்தில் வேறு ப்ரமாணங்களைத் தேடுவது ரேழியில புதையலை வைத்துக்கொண்டிருக்கிற புருஷன் கேழ்வரகுக்காக ஏழைகளிடத்தில் யாசகம் செய்வதைப்போல் இருக்கிறதென்று பெரியோர்கள் பரிஹாஸம் செய்கிறார்கள். ஆகையினால் 'ஆஹித லக்ஷண' என்கிற பதத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிற 'க்ருதலக்ஷண' என்னும் பதத்திற்கு ப்ரஸித்தமல்லாத ரூடி (இடுகுறி) அர்த்தத்தை அங்கீகரிப்பது நிராகரிக்கப்பட்டது. ஆகையினால் 'செய்யப்பட்ட லக்ஷணங்களையுடைய ப்ராம்மணர்களினாலும் க்ஷத்ரியர்களினாலும் வைச்யர்களினாலும் சூத்திரர்களினாலும்' என்று சொல்லியிருப்பது சக்ரம் முதலியவைகளைப்பற்றியே சொல்லுகிறது. இத்தால் ஹரிவம்சத்தில் நூற்று நாற்பத்தேழாவது அத்யாயத்தில் பகவான் யாத்ரைக்குப் புறப்படுவதை நிரூபிக்கும் இடத்தில் 'நான் வருகிறவரையில் இவ்விடத்தில் சக்ராங்கனம் செய்யப்பட்டவர்கள்,

[illegible]

உள்ளே விடத்தக்கவர்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே அதுவும் ப்ரமாணங்களில் கண்டறிந்திருப்பதை அநுஸரித்துப் பொதுவாக எல்லாரையும் பற்றியதாகவே நிர்வஹிக்கப்பட்டது. அவ்விடத்தில் பட்டணத்தைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லுவதில் தாத்பர்யம் என்று சொன்னபோதிலும் சக்ராங்கனம் பகவானுடைய அஸாதாரணமான அடையாளம் என்பது ஏற்பட்டுவிட்டது—மற்றோரிடத்தில் விசேஷித்து வைஷ்ணவர்களுக்கு அவச்யம் தரிக்கவேண்டியது என்று சொல்லியிருப்பதினால். இது பட்டணத்தைக் காப்பாற்றுவதற்குக் காரணமான சிப்பாய் முதலியவர்களைமாத்திரம் சொல்லுகிறதென்று சொல்லுவது உசிதமாகாது—அவ்வளவு காலம் ப்ராம்மணர் முதலியவர்கள் அவ்விடத்திற்குப் போகக்கூடாது என்று தடுத்தார் என்பதற்கு ப்ரமாணம் இல்லாமையினாலும், ப்ராம்மணர் முதலியவர்கள் சக்ராங்கனம் செய்யப்படவில்லை யென்பதற்கு ப்ரமாணம் இல்லாமையினாலும், மேலும் ச்ருதி ஸ்ம்ருதி முதலியவைகளில் விதிக்கப்பட்டிருப்பதினால் சக்ராங்கனத்தை உடையவர்கள் என்றேற்படுகிறபடியினாலும். சக்ராங்கனம் செய்யப்படாத ப்ராம்மணன் முதலியவர்களைத் தடுப்பது இவ்விடத்தில் உபயோகமற்றது என்பது உசிதமல்ல— பாகவதர்களல்லாத ப்ராம்மணர்கள் விரோதமான அபிப்ராயத்தை உடையவர்களாக இருக்கக்கூடுமாதலால் அவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்ள முடியாததலால் அவர்களைத் தடுப்பது பட்டணத்தைக் காப்பாற்றுவதற்கு உசிதமாகுமாதலால். ஆகையினால் 'எவர்கள் சக்ராங்கனம் செய்யப்பட்டார்களோ அவர்கள் உள்ளேவிடத்தக்கவர்கள், அவர்கள் தடுக்கத்தக்கவர்களல்ல, எவர்கள் சக்ராங்கனம் செய்

[illegible]

யப்படாதவர்களோ அவர்கள் உள்ளேவிடத்தக்கவர்களல்ல' என்று வாக்யம் இருந்தபோதிலும் இங்கு சக்ராங்கனத்தை அநுவாதம் செய்திருப்பது புரோவசநத்தை (அதாவது இதற்கு முன் சில வாக்யங்களினால் சக்ராங்கனம் செய்துகொள்ளவேண்டும் என்று விதித்திருப்பதை) அபேக்ஷிக்கிறபடியினால் ச்ருதி முதலியவைகளில் சொல்லப்படுகிற ப்ராம்மணன் முதலிய எல்லாவர்ணங்களிலும் உண்டான பகவானுக்கு அஸாதாரணமான தாஸர்களைப் பற்றியது 'எவர்கள் சக்ராங்கனம் செய்யப்பட்டார்களோ' என்கிற இந்த அநுவாதம். தடுக்கவேண்டுமென்று சொல்லியிருப்பது மற்றவர்களைப் பற்றியது. 'எவர்கள் உள்ளேவிடத் தக்கவர்களோ அவர்கள் சக்ராங்கனம் செய்யப்பட்டவர்களாகவே இருக்கவேண்டும்' என்று வாக்யத்தை வைத்துக்கொண்டு 'சிவந்த வர்ணமுடைய தலைக்குட்டை உடையவர்களாய் ரித்விக்குகள் அக்னியைச்சுற்றி வருகிறார்கள்' என்கிற வாக்யத்தில் சொல்லியிருக்கும் ந்யாயத்தை அநுஸரித்து 'சக்ராங்கனம் செய்யப்பட்டவர்களாக இருக்கவேண்டும்' என்று விசேஷணத்தை விதிப்பதில் தாத்பர்யமென்று சொன்னபோதிலும் பட்டணத்தில் உள்ளேவிடவேண்டுமென்பது ஒரு ஜாதியாரைப்பற்றியதாக இல்லாமையினாலும் பொதுவாக அநுவாதம் செய்திருப்பதினாலும் அந்தந்த ஜாதியில் எவர்கள் சக்ராங்கனம் செய்யப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் உள்ளேவிடத் தக்கவர்கள், அப்படி அங்கனம் செய்யாப்பட்டாதவர்கள் உள்ளேவிடத் தக்கவர்களல்ல என்றே வாக்யத்தின் தாத்பர்யம் முடிவுபெறும். அப்படி இருந்தபோதிலும் ப்ராம்மணன் முதலியவர்களுக்கு சக்ராங்கனம் உண்டென்பது ஸித்தித்துவிட்டது. அப்படியே புராணங்களில் சொல்லப்படுகிற நூற்றுக்கணக்கான வசனங்கள் இருக்கின்றன. 'விஷ்ணுவினிடத்தில் பக்திசெய்துகொண்டிருப்பவன் வலதுகையில் சக்கரத்தைத் தரிக்கவேண்டும், இடதுகையில் சங்கத்தைத் தரிக்கவேண்டும், இப்படித் தரித்துக்கொண்டிருந்தானேயானால் விஷ்ணுவை அடைவான், சக்ரத்தினால்

[illegible] இதி । [illegible] இதி । [illegible]

அங்கனம் செய்யப்பட்ட தத்வங்களை உணர்ந்தவன் மனதிற்குள் பக்தியை உடையவனாகி வாஸுதேவனை ஆச்ரயிக்கவேண்டும், அப்படி இருந்தானாகில் பரமாத்மாவின் லோகத்தை அடைவான்' என்று பாத்மபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாகவதத்தில் 'சக்ராங்கனம் செய்யப்பட்டவனுடைய ஸமீபத்தில் தபஸ்ஸு, ஸ்நாநம், தானம், ஜபம், ஹோமம் இவைகளைச் செய்யவேண்டும், இப்படிச் செய்யப்படுகிற அவைகள் அழிவில்லாத பலத்தைக்கொடுக்கும், மனதினாலாவது சரீரத்தினாலாவது ஒரு வருஷம் வரையில் எந்தப்பாபம் செய்யப்பட்டதோ அவையெல்லாம் சக்ராங்கனம் செய்துகொண்டிருப்பவனை ஒருதரம் பார்ப்பதினால் நாசமடைந்து விடுகிறது, எந்த இடத்தில் சக்ராங்கனம் செய்துகொண்டிருப்பவன் வஸிக்கிறானோ அந்த இடத்தில் ஜ்வரம், தீப்பற்றுதல், திருடர்கள் இவைகளினாலுண்டான பயம் எல்லாம் ஓய்ந்து விடுகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக்நேயபுராணத்தில் 'பக்தி ச்ரத்தை இவைகளை உடையவர்களால் ஐந்து ஆயுதங்களும் நெற்றி, தலை, மார்பு, கைகள் இவைகளில் தனித்தனியே ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்றாகத் தரிக்கப்படவேண்டும், நெற்றியில் கதை தரிக்கத்தக்கது, தலையில் சார்ங்கம் (என்கிற தனுஸ்ஸு) தரிக்கத்தக்கது, நந்தகம் என்கிற கத்தி மார்பின் நடுவில் தரிக்கத்தக்கது, சங்கசக்ரங்கள் இரண்டு கைகளிலும் தரிக்கத்தக்கவை, எப்படி என்னில்:— இந்த ஐந்து ஆயுதங்களையும் சாஸ்திர முறைப்படிசெய்து அந்தந்த மந்திரங்களினால் தனித்தனியே ப்ரதிஷ்டைசெய்து, நெருப்பின் நடுவில் வைத்து சாஸ்திரப்படிப் பூஜைகளைச்செய்து ஸாவதானமாயிருந்து சாஸ்திர முறைப்படி வர்ணாச்ரமங்களில் நிஷ்டையை உடையவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அங்

வேதாந்த தீபிகை அநுபந்தம்.

ஸ்ரீ:

மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்.

இஞ்சிமேடு ஸ்வாமியின் லேகத்திற்கு ப்ரத்யுத்தரம்

(ஸ்ரீ. உ. வெ. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர்.)

[illegible] ॥

மதப்ரஷ்டர்களுக்கு ப்ராயச்சித்தாதிகள் செய்துவைக்கலாமென்று சாஸ்திர ப்ரமாணங்களைக்கொண்டு நாம் தீபிகையில் மாசி பங்குனி ஸஞ்சிகைகளில் எழுதியிருந்த லேகத்திற்கு கண்டன ரூபமாக ஸ்ரீ. இஞ்ஜிமேடு ரங்கநாதாசார்யரால் எழுதப்பட்ட ப்ரதிலேகமொன்று வைகாசி முதலான மூன்று ஸஞ்சிகைகளில் "மதப்ரஷ்ட ப்ராயசித்தமும் தர்மசாஸ்திரங்களும்" என்ற சிரோலிபியுடன் பிரசுரமாயிருக்கிறது. இந்த ஸ்வாமி ப்ரதிலேகம் எழுதியதற்குத் தமது ஆஸ்திக்யமே மூலகாரணமென்று பிறருக்குத் தோன்றும்படி 'அப்ருவந் விப்ருவந் வாபி நர: கில்பிஷமாப்நுயாத்' (மௌனமாயிருப்பவனும் விபரீதமாகச் சொல்லுகிறவனும் பாபத்தை யடைவான்) என்கிற சாஸ்த்ரார்த்தமே தம்மை நிர்ப்பந்தித்துவிட்டதாக எழுதுகிறார். ஆயினும் 'வ்ருச்சிகாத் பீத: [illegible] பதித:' (தேளுக்குப் பயந்து ஸர்ப்பத்தின்வாயில் விழுந்தான்) என்கிறபடி "அப்ருவந்" என்கிற சாஸ்த்ரார்த்தத்திற்குப் பயந்து தத்வார்த்தத்தை வெளியிடப்புகுந்த இந்த ஸ்வாமி தம்மை யறியாமலேயே 'விப்ருவந்' என்கிற தோஷத்திற்குத் தம்மையே லக்ஷ்யமாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து ப்ராமாணிகர்கள் அநுசோசிப்பார்கள்.

இந்த ஸ்வாமி தமது லேகத்தின் தலைப்பில் எழுதியிருக்கும் பிருது ச்லோகத்தில் 'தர்ம விப்லவ வாரணம்' (தர்மம் குலைதலைத் தடுத்தல்) என்று குறிப்பிட்டு இருப்பதைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. புத்திபூர்வமாகவோ தவறுதலாகவோ ஒருவன் பெரிய பாபத்தைச் செய்துவிட்டால், அவன் பிறகு அநுதாபமடைந்து, பிராயச்சித்தங்களைச் செய்துகொண்டு சுத்தியடைய வேண்டும்,

[illegible] ப்ராயச்சித்தம் விதீயதே ।
[illegible] ப்ராயச்சித்தம் விதீயதே ॥

என்று மநுவும், யாக்ஞவல்க்யரும் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியதை விதியாகவே சொல்லியிருக்கிறார்கள், விக்ஞாநேச்வரரும் ‘ ஊரிதவெ்ரா நிதூ இதி ககரணெ டொஷ ஶுவணெ நாவஶுகஊாவமரோஜ ’ என்று ப்ராயசித்தம் செய்துகொள்ள வேண்டியது கட்டாயம் என்றும் செய்துகொள்ளாவிட்டால் தோஷமென்றும் விதிக்கிறார். இப்படிப்பட்ட ப்ராயச்சித்தத்தை ஒருதோஷமுள்ளவன் விஷயத்தில் உபயோகித்து தர்மக்ஞர்கள் அவனை சுத்தனாக்க யத்நம் செய்தால், இது தர்மரக்ஷணமா அல்லது தர்மத்தைக் குலைப்பதா என்பதை தார்மிகர்கள் யோசிக்கட்டும். ப்ராயச்சித்த அர்ஹனை ஒருவன் விஷயத்தில் அதை உபயோகிப்பது தர்மவிப்லவமல்லவோ வெனில், அது மிகவும் அஸங்கதம். ப்ராயசித்தார்ஹனை ஒரு அதிகாரியே கிடையாதென்றல்லவோ சாஸ்த்ர மர்யாதை! ப்ராயச்சித்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படாத விடங்களில்கூட ‘ ஶூாயஶ்ரிதூம ஶூகஷூ ஶூாகயதூ வொக்ஷா நமிக்ஷூதி ’ என்பதால் கல்பித்தும் செய்யவேண்டுமென்று யாக்ஞவல்க்யரால் விதிக்கப்பட்டுமிருக்கிறது. பராசர மாதவியத்திலும்.

‘ தஜெவ ஜெஹிக வூவஹாராய வரஜொகாய வா காகேஷூதா நாம். ஹொவா தகா நாம் உவவாதகா நாம வ கஜெலூவ ஶூாயஶ்ரிதூ இதி விஷு ’ என்கிற பங்க்திகளால் புத்திபூர்வ ப்ரம்மஹத்யாதிகளான எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயச்சித்த முண்டென்பது ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க அந்த ஸ்வாமி தோஷிகளுக்கு ப்ராயச்சித்தம் விதிப்பதை தர்மவிப்லவமென்று சொன்னால் அதற்காக ஏற்பட்ட மநு யாக்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகளும் ரிஷிகளுமே தர்மவிப்லவம் செய்கிறவர்களாக ஏற்படும்.

இக்காலத்தில் லௌகிகர் எனப்படுவோர் மட்டில்லை வைதிகரென்று ப்ரஸித்தராயிருக்கும் எவரும்,

ஜாதீ ஶூயாத வாதாரும் காஜும் விஜய ஶூதூத ।
ஜௌாவம் ஜௌாவம் யாத ஜாம் கெவக ஶிக்ஷூ நீ ॥

என்கிறபடி தமது ஜாதி குலாசாராதிகளை வேண்டுமென்றே கைவிட்டு அநேகவித ப்ராயச்சித்தாதிகளால் கூட ஸமாதானம் செய்யமுடியாத பலநிஷித்தாநுஷ்டானங்களைச் செய்துகொண்டு வருகிறோம் என்பதை இந்த ஸ்வாமியாவது வேறு யாராவது மறுக்க முடியாதென்பது நிச்சயம். இக்காலத்திலுள்ள மூன்று ஆச்ரமிகளும் புத்திபூர்வகமாகச் செய்துவரும் நிஷித்தாநுஷ்டானங்களை ஒவ்வொன்றாக நாம் எடுத்துச்சொன்னால் வீணான லோகவித்வேஷமே யுண்டாகும். ஆகையால் அதை இங்கு விவரிக்கப்போவதில்லை. இவர்களை நெருங்கி ஏன் இப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டால், ‘ என்ன செய்யலாம் காலாநுகுணமாகத் தான் இருக்கவேண்டியிருக்கிறது.’ என்று பதில் சொல்லிவிடுகிறார்கள், இப்படி ஸ்வ விஷயத்தில் சாஸ்திர வச்யதை இல்லாமைக்கு ஸமாதானம் சொல்லக்கூடாத நாம் பரோப தேசத்தில் பாண்டித்யத்தை வஹித்துப் பிறர் மீது வீணான தோஷாரோபணம் செய்வதைப்பார்த்து தர்ம சாஸ்திரங்களே பரிஹஸிக்குமல்லவோ?

இந்த ஸ்வாமியால் எழுதப்பட்ட ப்ரதிலேகத்தை நாம் வெகு ஜாக்ரதையுடன் பலதடவை படித்துப்பார்த்ததிலும் அது நமது முதல் லேகத்தில் சொல்லப்பட்டிருக்கிற ப்ரமாணாநுஸாரியான ஸித்தாந்தத்தில் ஒரு அம்சத்தையாவது சிறிதுகூட பாதிக்கவில்லையென்று உறுதியாகக் கூறுவோம். மத்யஸ்தர்களும் இதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம். அந்த ஸ்வாமி வெகு ச்ரமப்பட்டு தீபிகையில் எழுதியுள்ள விஷயங்களிலிருந்து. நம்முடைய லேகத்தில் ஏதாவது ஒரு அம்சத்தையாவது நாம் திருத்திக்கொள்ளும்படி ஏற்பட்டிருந்தால், அதை வெகு ஸந்தோஷத்துடனேயே ஒத்துக்கொண்டிருப்போம்.

இங்கு விசாரிக்கவேண்டிய விஷயங்களாவன :—

1. புத்திபூர்வக பதனீயங்களுக்கும் ப்ராயச்சித்தமுண்டா?

2. இருந்தால் அதன் ப்ரயோஜனமென்ன?

3. ப்ரக்ருத மதப்ரஷ்ட விஷயம் எதில் சேர்ந்தது?

4. இதற்கு ப்ராயச்சித்தம் உண்டா?

5. அது இக்காலத்தில் அநுஷ்டிக்கத் தக்கதா?

6. அதிலிருந்து ஸம்வ்யவஹாரம் (ஜாதி ஜனங்களோடு கலத்தல்) ஏற்படுமா?

—என்பவைகளே.

இவற்றுக்கு நமது ஸித்தாந்தங்களாவன :—

1. புத்திபூர்வக பதனீயங்களுக்கும் ப்ராயச்சித்தமுண்டு.

2. ப்ராயச்சித்தத்தினால் நரக நிவ்ருத்தி எப்படியானாலும் ஸம்வ்யவஹாரம் நிச்சயமாக ஏற்படுகிறது.

3, 4. மதப்ரம்ச பாபத்தை உபபாதக, ஸமபாதக, அதிபாதகங்களில் அதிகாரி தோஷ தாரதம்ய க்ரமத்தில் படித்து, அதற்கு ப்ராயச்சித்தத்தை சாஸ்திரம் விதித்திருக்கிறது.

5. அது சாஸ்திர ஸம்மதமான ப்ரத்யாம்நாய (பிரதிநிதி) விதிகளைக் கொண்டு இக்காலத்திலும் அநுஷ்டிக்கத்தக்கது தான்.

6. பாப தாரதம்யாநுகுணமாக நரக நிவ்ருத்தி ஸம்வ்யவஹாராதிகள் உண்டாகின்றன. எல்லா அதிகாரிகளுக்கும் பிராயச்சித்தத்திற்குப் பிறகு ஸம்வ்யவஹாரம் ஏற்படத் தடையில்லை—என்று.

இவற்றுக்காதாரமான ப்ரமாணங்கள் பின்னால் விவரிக்கப்படுகின்றன.

புத்திபூர்வ பாப விஷயம்.

இந்த ஸ்வாமி தமது ப்ரதிலேகத்தின் 2 - வது பக்கத்தில்.

‘ இதில் இந்த பாபத்தை அபுத்திபூர்வகமாக ஸமர்த்தித்து இதற்கு ப்ராயச்சித்தம் விதிக்கலாமென்றும்,புத்திபூர்வகமானாலும் பதநீயவ்யதிரிக்த புத்திபூர்வகமாக்இரண்டு பங்கு ப்ராயச்சித்தம் விதித்து ஸமாதானம் செய்யலாமென்றும் பூர்வபக்ஷிகளின் அபிமானம்.”

என்று நம்முடைய அபிப்ராயத்தை இந்த ஸ்வாமி அநுவதித்திருக்கிறார். இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. நம்முடைய லேகத்தில், தேவலஸ்மிருதி விசாரப்ரகரணத்தில், மேற்படி ஸ்மிருதியில், ‘ பலாத் ’ என்கிற பதம் பிரயோகிக்கப்பட்டு இருப்பதைக்கொண்டு தற்காப்பு செய்துகொள்ள முடியாதவன் விஷயத்தில் மட்டிலேயே அந்தஸ்மிருதி உபயோகப்படுமாயினும், பிறருடைய வஞ்சநோக்திகளால் ஏமாற்றப்பட்டு மதப்ரஷ்டனாகப் போகிறவன் விஷயத்திலும் அந்த ஸ்மிருதி விஹிதங்களான ப்ராயச்சித்தங்களை ப்ரயோகிக்கலாமென்பதற்கு ஸாதகமாகவிருக்கிறதென்றும் ‘ பலாத்காரம் ’ என்பதில் பிறருடைய வ்யாமோஹாதிகரமான வாக்பலத்தையும் சேர்த்துக்கொள்ளலாமென்றும் சொன்னோம். இப்படிச் சொல்லியதற்கு உபபத்திகளை மேலே சொல்லுவோம். இப்படி ‘ பலாத் ’ என்பதற்கு அர்த்தம் செய்ததைக்கொண்டு, இதை அபுத்திபூர்வகமாக ஸமர்த்தித்து விட நாம் எண்ணிவிட்டதாக இந்தஸ்வாமி எப்படிக் கண்டுபிடித்தார் ? பிறருடைய வஞ்சனை வார்த்தைகளைக் கேட்டு ப்ரஷ்டனாகப் போனவன் விஷயமும் ஒருமாதிரியாக புத்திபூர்வத்தில் சேர்ந்தது தான் என்றதை,

‘ பிறருடைய வாக்பலத்தால் மதாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டவன் கூட தவறுதலாகவோ நியாயமாகவோ தனது புத்தியையும் அதில் ஸம்பந்தப்படுத்தியிருப்பானாகையால், அவன் விஷயம் ஒருமாதிரியாக புத்திபூர்வகத்தில் சேர்ந்ததேயாகும்’

என்று நமது முதல் லேகத்தில் ஸ்பஷ்டமாகக் காணலாம். இப்படியிருக்க இந்த ஸ்வாமி விபரீதமாக எழுதுவதின் நோக்கமென்ன ? முற்றிலும் புத்திபூர்வகமாகவே ஒருவன் மதாந்தரத்தில் ப்ரவேசித்துவிட்டால் கூட அவன் விஷயத்தில், ‘ ஸ்வாதிகாரேணாநுஷ்டிதே யத்து த்விகுணம் வ்ரதமாசரேத் வலக்கே ’ என்றும், ‘ விஹிதம் யதகாமானாம் காமாத்து த்விகுணம் பவேத் ’ என்றும் அபுத்தி பூர்வகத்திற்குச் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தத்தையே புத்திபூர்வகவிஷயத்தில் இரண்டுபங்காகச் செய்யவேண்டுமென்று ப்ரம்ஹஹத்யாதி மஹாபாதகங்கள் விஷயத்தில் கூட விக்ஞானேச்வர, குல்லூகபட்ட, மாதவ, தீக்ஷிதாதி ஸகல நிபந்தனகாரர்களும் ஸித்தாந்தம் செய்திருப்பதால் அதை யநுஸரித்து மதப்ரஷ்டன் விஷயத்திலும் வ்யவஸ்தை செய்துகொள்ளுவது வெகு ந்யாயமாகவிருக்கையில் இதை அபுத்திபூர்வகத்தில் சேர்த்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. அப்படிப்பட்ட ஆக்ரஹமும் நமக்குக் கிடையாது. அப்படி எங்கும் நாம் சொல்லவில்லை. அந்த விடத்திலேயே,

‘முற்றிலும் புத்திபூர்வகமாக மதாந்தரத்தில் ஒருவன் ப்ரவேசித்துவிட்டால்கூட அவனுக்கும் கீழ்ச்சொல்லிய ப்ராயச்சித்தத்தையே இரண்டு பங்காகச் சேர்த்து செய்துவைக்கவேணும் ’.

என்கிற வாக்யங்களால் இதை நன்றாக விளக்கியும் இருக்கிறோம்.

அஸ்வதந்திர ப்ரவ்ருத்தி

புத்திபூர்வகமாக மதாந்தரத்தில் ப்ரவேசிக்கும் அதிகாரி ஒருவன் இருப்பதைப்போல், பிறருடைய வஞ்சநோக்திகளால் ப்ரோத்ஸாஹிக்கப்பட்டு மதப்ரஷ்டனாகப்போன அதிகாரி ஒருவன் ஏன் இருக்கக்கூடாது ? இக்காலத்தில் இப்படிப்பட்ட அதிகாரிகளே பலர் இருக்கக்கூடும். ஏனெனில் இக்காலத்தில், ப்ராம்மணர்களாகிய நாம் உதர பூர்த்தியையே பெரிய ப்ரயோஜனமாக நினைத்து நமது பிள்ளைகளை ம்லேச்ச பாஷாப்யாஸம் செய்யவிட்டு, இதற்காக கிறிஸ்தவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கலாசாலைகளில் மாதா பிதாக்களுடைய ஸாந்நித்யத்திலில்லாமல் ஸ்வச்சந்தமாகப் படிக்கவிடுகிறோம். அங்கு கிருஸ்தவமத ச்லாகையும் நம்முடைய மதத்தைப்பற்றித் தூஷணமும் நமது பிள்ளைகளுக்குக் கட்டாயமாகப் போதிக்கப்படுவதுடன் நமது பிள்ளைகளை ஸ்வமதத்திற்கு இழுத்துக்கொள்ளும் நோக்கத்துடனேயே உழைத்துவருகிற கிருஸ்துமத ப்ரசாரகர்கள் பலவித உபாயங்களால் நமது பிள்ளைகளை ப்ரோத்ஸாஹனம் பண்ணி ஏமாற்றி ஸ்வமதத்தில் சேர்த்துவிடுகிறார்கள். இவர்கள் சிறுவர்களாயும், சிறிதும் புத்தி பரிபாகத்தை அடையாதவர்களாயுமிருப்பதால் அந்த மதத்தில் ஏதோ விசேஷமிருப்பதாக வஞ்சிக்கப்பட்டுவிடுகிறார்கள். இவர்களில் வெகு பெயர்கள் சிறிதுகாலம் கழித்துத் தாம் வஞ்சிக்கப்பட்டு ஏமாந்து போய்விட்டதை அறிந்து மிகவும் நொந்து கஷ்டப்படுவதைப் பலதடவைகளில் நாம் கேள்விப்படுகிறோம் இப்படிப்பட்டவனை எந்த அதிகாரியில் சேர்த்து ப்ராயச்சித்தம் விதிப்பது ? இவர்களையும் புத்திபூர்வக பாபிகளில் சேர்த்து ப்ராயச்சித்தம் விதிக்கக்கூடாதென்று இந்தஸ்வாமி ஸமர்த்தித்து விடமுடியுமா ?

‘ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தி விஷய ஜ்ஞாந காமநாப்யாம் நியதா।
தயோரந்யதராபாவே விதந்த்ர ஸம்பவாத்’—

என்கிற விஜ்ஞாநேச்வர வாக்யத்தால் ஒரு மனிதனுக்கு ஒரு பாபத்தில் ஸ்வதந்த்ரமாக ப்ரவ்ருத்தியுண்டாவதாயிருந்தால், அதற்கு விஷய ஜ்ஞாநம், இச்சை, ஆகிய இரண்டும் சேர்ந்தே இருக்கவேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று இல்லாவிட்டால் கூட அது ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தியாகாது. உதாரணமாக, சோர ம்லேச்சாதிகளுடைய பலாத்காரத்தால் ஒருவன் கோவதாதி பாபங்களைச் செய்தால், அங்கு, அவனுக்கு விஷய ஜ்ஞானம், இருந்தாலும், ‘இச்சை’ இல்லையாகையால், அந்த பாபம் ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தியில் சேராமல், பலாத்காரத்திலேயே சேருகிறது. இதுபோல் ஒருவனுக்கு, ஒரு பாபம் செய்வதில் ‘காமம்,’ அதாவது இச்சை யிருந்தாலும், அவனுக்குச் சரியான விஷய ஞானமில்லாவிட்டால் அதுவும் ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தியாகாது. இத்துடன் அவனுக்கு இருக்கும் காமமும் பிறருடைய வஞ்சநோக்திகளால் ஏற்பட்டிருந்தால், இவனை ஸ்வதந்த்ர ப்ரவ்ருத்தியுள்ளவனாக எப்படிச் சொல்லமுடியும். இந்த விஷயம் மேற்படி விஜ்ஞாநேச்வர வாக்யத்தாலும் அதையொட்டியிருக்கும் இதர பங்க்திகளாலும், விசதமாகிறது. ஆகவே, கீழ்ச் சொல்லியபடி பிறரால் ப்ரோத்ஸாஹிக்கப்பட்டு, ஸரியான விஷய ஜ்ஞானமும் இல்லாமல், மதாந்தர ப்ரவேசத்தில் ருசியை அடைந்தவனை ஸ்வதந்த்ரனாக ப்ரவ்ருத்தித்தவனென்று சொல்லமுடியாதாகையால், பரதந்த்ரனாய்ப் பாபம்செய்த அதிகாரியிலேயே அவனைச் சேர்க்கவேண்டும்.

இங்கு நாம் முற்றிலும் புத்திபூர்வகம், என்றும் ஸ்வல்ப புத்திபூர்வகமென்றும், எழுதுவதற்கு ‘ப்ராயச்சித்தே ஸமுத்பந்நே’ என்கிற ச்லோகத்திய அபரார்க்க பங்க்திகளே ப்ராமணங்கள். அவைகள் மேலே ஓரிடத்தில் எடுக்கப்படுகின்றன.

இப்படிப் பிறரால் ப்ரோத்ஸாஹிக்கப்பட்டு ஒருவன் பாபம் செய்யக்கூடுமென்றும், அத்தகைய அதிகாரிக்கு ப்ராயச்சித்தத்தைக் குறைத்துச் செய்துவைக்க வேணுமென்றும், ஸ்ம்ருதிகளும் நிபந்தனகாரர்களும் அபிப்ராயப்படுவதாகவே தெரிகிறது.

‘ப்ராஜாபத்யம் சரேத் க்ருச்ச்ரம் ஸமோவாதம துர்வதம்’ என்கிற யாஜ்ஞவல்க்ய வசநவ்யாக்யானத்தில் மிதாக்ஷரையில் ‘க்ருச்ச்ரமேவாதி க்ருச்ச்ரம் ததா க்ருச்ச்ராதி க்ருச்ச்ரகம் ஸமோ ந்யூநஸத்ருசம் விப்ரக்ஷத்ரியாதிஷ்வநுக்ரமாத்’ என்கிற ப்ரமாணத்திற்கு வ்யவஸ்தை செய்திருப்பதைக் கவனிக்கவேண்டும். இந்த வசநத்தில், ஒரு ப்ராம்ஹணன் தனக்கு ஏதோ ஒருவகையில் ஆசார்யனாக விருக்கும் ஒரு க்ஷத்ரியனுடைய பார்யையிடத்தில் ஸம்ஸர்கித்துவிட்டானாகில், அவனுக்கு மூன்றுமாதம் வரையில், க்ருச்ரம், அதிக்ருச்ரம், க்ருச்ராதிக்ருச்ரம் ஆகிய மூன்றுவிதமான ப்ராயச்சித்தம் சொல்லப்படுகிறது. இந்த மூன்றில் வரிசையாக ஒன்றைவிட மற்றொன்று பெரியது. ஒரே பாபத்திற்கு மூன்றுவிதமான ப்ராயச்சித்தம் சொல்லியதற்கு விக்ஞாநேச்வரர் அங்கு வ்யவஸ்தை சொல்லுகிறார். அதாவது, ‘அத்ரேயம் வ்யவஸ்தா। யதா ப்ரோத்ஸாஹிதஸ்ய த்ரைவர்ணிகம் ப்ராஜாபத்யம் உபயேச்சாத: ப்ரவ்ருத்தஸ்ய அதிக்ருச்ச்ரம் தாவதேவ। ஸ்வத ப்ரோத்ஸாஹிதாயாம் ப்ரவ்ருத்த: க்ருச்ச்ராதி க்ருச்ச்ராநுஷ்டாநம் ச தாவதேவ ॥’

என்று. இங்கு, ஸ்திரீயால் புருஷன் ப்ரோத்ஸாஹிக்கப்பட்டிருந்தால் அப்போது புருஷனுக்கு தோஷம் ஸ்வல்பமாகையால் லகுவான ப்ராஜாபத்யத்தை அநுஷ்டிக்கவேண்டும்; இரண்டுபேர்களுடைய இச்சையாலும் ப்ரவ்ருத்தி ஏற்பட்டிருந்தால், தோஷம் இரண்டு பேருக்கும் ஸமமாகையால், அப்போது இவன் இன்னும் கொஞ்சம் கடினமான அதிக்ருச்ரத்தை செய்து கொள்ளவேண்டும்; புருஷனால் ஸ்திரீ ப்ரோத்ஸாஹிக்கப்பட்டுப் பாபம் நடந்திருந்தால் அப்போது இவன் நிரம்பக் கடினமான மூன்றாவது ப்ராயச்சித்தத்தைத் செய்துகொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து, பிறருடைய ப்ரோத்ஸாஹனத்தினால் ஒருவன் பாபத்தைச் செய்துவிடக்கூடுமென்பதும், அதில் ப்ரோத்ஸாஹநம் செய்தவனுக்கு அதிகபாபமும், கடினப்ராயச்சித்தமும் ப்ரோத்ஸாஹிக்கப்பட்டவனுக்கு ஸ்வல்பதோஷமும், லகுவான ப்ராயச்சித்தமும் விதிக்கலாமென்பதும் நன்றாக விளங்குகிறது.

இதேமாதிரி இன்னும் இரண்டு வசநங்களுக்கு, விக்ஞாநேச்வரர் அங்கு வ்யவஸ்தை காண்பித்துவிட்டுக், கடைசியில். ‘அநயைவ திசா அந்யேஷ்வபி ஸ்ம்ருதி வசநாநாம் வ்யவஸ்தா ஊஹநீயா।’ (இந்த வ்யவஸ்தையை அநுசரித்தே மற்ற ஸ்ம்ருதி வசநங்களுக்கும் வ்யவஸ்தையை ஊஹித்துக்கொள்ளவேண்டும்.) என்றும் சொல்லியிருக்கிறார்.

இதை யநுஸரித்து ப்ரக்ருதத்தில் மதப்ரஷ்ட விஷயத்திலும், நாஸ்திக்யம் என்கிற தோஷத்தைச் சிலர் உபபாதகத்திலும், சிலரிஷிகள், பாதகத்திலும், இன்னும் சிலர் அதிபாதகத்திலும் படித்து லகுவாயும் கடினமாயும் அத்தற்குத் தகுந்தபடி ப்ராயச்சித்தத்தை விதிப்பதால் அந்த விடத்திலெல்லாம் கீழ்க்கண்ட மாதிரி வ்யவஸ்தை செய்துகொள்ளலாமென்றே ஏற்படுகிறது. ஆகையால் புத்திபூர்வகமாக ஒருவன் நாஸ்திக்யத்தை அடைவது

போல், பிறரால் ப்ரோத்ஸாஹிக்கப்பட்டு நாஸ்திக்யத்தை அடைந்த அதிகாரி ஒருவனும் நிச்சயமாக இருக்கக்கூடுமானது பற்றி இவனுக்குப் புத்திபூர்வக அதிகாரியைவிடக் குறைந்த ப்ராயச்சித்தமே செய்துவைக்க வேண்டுமென்பதைக் காட்டவே இவ்வளவு தூரம் எழுதவேண்டியதாயிற்று. இந்த விஷயத்தையே நமது பூர்வலேகத்தில் சுருக்கமாகச் சொல்லியுள்ளோம்.

விசாரம் பொதுவானது.

இந்த விடத்திலும், மற்றும் பலவிடத்திலும் இந்த ஸ்வாமி, 'ஒருவன், புத்திபூர்வகமாகவோ பிறருடைய தூர்போதனையினாலோ, வேறுவிதமாகவோ' என்றும், 'இவ்வாறு புத்திபூர்வகமாகவோ, தவறுதலாகவோ மதப்ரஷ்டன் விஷயத்தில்—' என்றும் அங்காங்கு எல்லாவித அதிகாரிகளையும் பற்றிப் பொதுவாகவே நாம் விசாரித்திருப்பதைக் கவனியாமல் சோளதேசத்தில் ஏற்பட்ட ஒரே லக்ஷ்யவிஷயத்தில் நமது லேகம் முழுவதையும் ஸமந்வயப்படுத்திக்கொண்டு, தமது லேகம் முழுவதிலும் அந்த லக்ஷ்யமொன்றையே ப்ரஸ்தாபித்து 'சார்ச்சு தொழுதேசிரகாலம் போக்கின,' வென்றும் 'திருமண்பூநூல்களைப்போட்டுசாரங்கபாணியைத் தொழச்செய்து, ச்ரோத்ரிய ஸஹபோஜநாதிகளைச் செய்வித்து' என்றும் இம்மாதிரியான உக்திகளால் எழுதிவிட்டிருப்பது ஸமீசீனமா என்பதை ஸஹ்ருதயர்களே யோசிக்கட்டும். இம்மாதிரியான உக்திகளால்மட்டும் இவருடைய சக்ஷி ஸ்தாபிதமாகாது. கீழ்ச்சொல்லிய லக்ஷ்யத்தில் ஒரு ஸ்வாமியால் ப்ராயச்சித்தம் செய்து வைக்கப்பட்டதை நாமும், இன்னும் பல ப்ராமாணிக வித்வான்களும் சாஸ்த்ர ஸம்மதமென்று மனப்பூர்வமாக ஆமோதித்திருக்கிறோமாயினும், ஷை விஷயத்தை நாம் புத்திபூர்வகத்தில் சேர்த்திருக்கிறோமா, அல்லது ப்ராமாதிகத்தில் சேர்ந்தோமா, அதவா, பலாத்காராதிகளில் சேர்த்தோமா, எந்தெந்த ப்ராயச்சித்த விதிகள் ஷை லக்ஷ்ய விஷயத்தில் பொருந்தின, என்னென்ன ப்ராயச்சித்தம் செய்து வைக்கப்பட்டது, பண்டிதர்கள் அதை எப்படி ஆமோதித்தார்கள், இத்யாதி விஷயங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு இந்த ஸ்வாமி எழுதியிருப்பதாகத் தோற்றவில்லை. மேலும் பொதுவாக எல்லா வித மதப்ரம்சத்திற்கும் எழுதிய லேகத்தை ஒரு அதிகாதி விஷயத்திற்கு மட்டில் எழுதப்பட்டதாக என் நினைத்துக்கொள்ளவேண்டும்?

இந்த ஸ்வாமி, புத்தி பூர்வகம், அபுத்தி பூர்வகம், என்பவைகளுக்கு ஏதோ அபூர்வமான அர்த்தம் சொல்லுவதுபோல் எழுதுகிறார். இத்துடன் "பலாத்" என்பதற்கு வேறு மாதிரியான அர்த்தம் செய்வதாயிருந்தால் ஏதோ லோக மர்யாதையே அழிந்துபோய்விடுமோவென்று பயப்படுகிறார். இவைகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டுபோனால் தீபிகையில் இடம் போதாது. ப்ரக்ருதத்தில் அவை அவ்வளவு முக்யங்களுமல்ல.

புத்திபூர்வகபதநீயங்களுக்கும் ப்ராயச்சித்தமும் ஸம்வ்யவஹாரமும் உண்டு.

இந்த ஸ்வாமியினுடைய ப்ரதிலேகத்தில் 'புத்திபூர்வக பதநீயங்களுக்கு ப்ராயச்சித்தம் கிடையாது. செய்துகொண்டாலும், 'ஸஹிஷ்ணு ஸயமாவி' என்கிற ஸூத்ர ப்ரமாணத்தின்படி ஸம்வ்யவஹாரம் கிடையாது' என்கிற ஒரு அபிப்ராயம் தான் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்த ஸ்வாமி எழுதுவது மனு, யாக்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகளுக்கும், விக்ஞாநேச்வர, குல்லூகபட்ட, மாதவ, தீக்ஷிதாதி ஸகல நிபந்தனகாரர்களின் ஸித்தாந்தத்திற்கும் அடியோடு விருத்தமாயிருப்பதால் இந்த விஷயத்தையேமுதலில்விசாரிப்போம். நம்முடைய பூர்வலேகத்தில்,

'பாபங்களுக்குள் பெரியவைகளும் மஹாபாதகங்களென்று சொல்லப்படுகிறவைகளுமான ப்ரம்ஹத்யா ஸுராபாநாதிகளுக்குக் கூட சாஸ்திரங்களில் ப்ராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகள் ஸ்பஷ்டமாகச்சொல்லப்பட்டிருப்பதால் அவைகளில் சேராததும் அவைகளைவிடச் சிறியதுமான இந்த மதப்ரம்ச பாபத்திற்கு ப்ராயச்சித்தமுண்டென்கிற விஷயத்திற்கு ப்ரமாணங்களைத் தேடவேண்டியதில்லை.'

என்று எழுதிவிட்டு புத்திபூர்வக பதநீயவிஷயத்திலும், ப்ராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகள் உண்டென்பதற்கு ப்ரமாணங்களைக் காட்டிவிட்டு ப்ராயச்சித்தம் கிடையாதென்று சொல்லுகிற ஸ்ம்ருதி வசனங்களுக்கு ப்ராயச்சித்தத்தைத் தடுப்பதில் தாத்பர்யமில்லையென்றும், ப்ராயச்சித்தத்தால் பரலோகத்தில் நரகநிவ்ருத்தியுண்டாகாதென்றாலும் இந்தலோகத்தில் சிஷ்டஜனங்களோடு ஸம்வ்யவஹாரம் நிச்சயமாக உண்டாகிறதென்றும் விக்ஞாநேச்வர, மாதவ, தீக்ஷிதாதிகள் நிஷ்க்ருஷ்டமாகச் சொல்லிய ஸித்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறோம். புத்திபூர்வகமாகச் செய்யப்பட்ட மஹாபாதகாதிகளான எல்லா பதநீயங்களுக்கும் ப்ராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகள் உண்டென்று சிறிது கூட ஸம்சயத்திற்கு இடமில்லாமல் விக்ஞாநேச்வராதிகள் ஸித்தாந்தம் செய்திருப்பதை இந்த ஸ்வாமி மறந்து லேகத்தில் 'புத்திபூர்வபதநீயங்களுக்கு ப்ராயச்சித்தம் கிடையா'தென்று ஸாதித்தாரே யொழிய அதற்கு ப்ரமாணங்களைச் சொல்லவில்லை. நாம் காட்டும் ப்ரமாணங்களுக்கு அவருடைய ஸமாதானம் என்னவென்றும் விளங்கவில்லை.

'ப்ராயச்சித்தைரபைத்யேநோ யதஜ்ஞாநக்ருதம் பவேத் ।
காமதோ வ்யவஹார்யஸ்து வசநாதிஹ ஜாயதே ॥'

என்கிற யாக்ஞவல்க்ய வசநத்தின் வியாக்யானத்தில் விஜ்ஞாநேச்வரர் வெகு அழகாக விசாரித்து நிர்ணயித்திருப்பதை இங்கே முதலில் எடுத்துக்காட்டுவோம்.

'ப்ராயஶ்சித்தை: வக்ஷ்யமாணை: அஜ்ஞாநாத் யதேந:, பாபம் க்ருதம் । ததபைதி நஶ்யதி । ந காமத: க்ருதம் । கிந்து தத்ர ப்ராயஶ்சித்த விதாயக வசநபலாத் இஹ லோகே வ்யவஹார்யோ ஜாயதே ।'

என்கிற வாக்யத்தால் அதன் அர்த்தத்தை விளக்கியிருக்கிறார். அதாவது 'அஜ்ஞாநத்தினால் செய்யப்பட்ட பாபமானது ப்ராயச்சித்தத்தால் போய்விடுகிறது. புத்திபூர்வகமாகச் செய்த பாபம் ப்ராயச்சித்தத்தால் போகாது. ஆனால் புத்திபூர்வக பாபத்திற்கு ப்ராயச்சித்தமுண்டென்று வசநங்களிருப்பதால் அந்த வசநபலத்தைக்கொண்டு ப்ராயச்சித்தம் செய்து கொண்டால் பாபம் போகாவிட்டாலும் இந்தலோகத்தில் அவன் கலந்து கொள்ளத்தக்கவனாக ஆய்விடுகிறான். இங்கு புத்திபூர்வக பாபம் என்றால் பதநீயத்தைத் தவிரவென்று அர்த்தம் செய்யமுடியாது. மாதவீயத்திலும் இந்த வசனத்திற்கு அர்த்தம் செய்யும்போது 'ப்ரம்மஹத்யா முதலான பாபமானது அஜ்ஞாநத்தினால் செய்யப்பட்டிருக்குமானால் ப்ராயச்சித்தத்தால் அது போய்விடும். புத்திபூர்வகமாகச் செய்யப்பட்டிருந்தால் இங்கு ப்ராயச்சித்தம் செய்துகொண்டு சிஷ்டர்களுடன் கலந்து கொள்ளலாம். ஆனால் பரலோகத்தில் நரகத்தை உண்டுபண்ணக்கூடிய பாபம் மட்டும் போகாது' என்று.

அஸ்யார்த: யதேந: ப்ரஹ்மவதாதிகம் அஜ்ஞாநக்ருதம் தத் விஹிதை: த்வாதஶவார்ஷிகாதிபி: அபைதி । காமதஸ்து க்ருதம் தேந - ஸதாசாராநுஶிஷ்டை: வ்யவஹார்ய: கேவலம் இஹ லோகே பவதி. ந து தஸ்ய நரகபாதகம் ஏந: ப்ராயஶ்சித்தை: அபைதி ।

முதலான பங்க்திகளால் மஹாபாதகாதி பதநீயங்களையும் சேர்த்தும் கொண்டிருக்கிறார். ஆகையால் ப்ரம்மஹத்யாதி பதநீயங்களைப் புத்திபூர்வகமாக ஒருவன் செய்துவிட்டால் அவனுக்கு ப்ராயச்சித்தமுண்டென்றும் அந்த ப்ராயச்சித்தத்தால் பரலோகத்தில் நரகம் போகாது என்றும் போனாலும் இந்தலோகத்தில் சிஷ்டஜனங்களோடு ஸம்வ்யவஹாரம் செய்துகொள்ளக்கூடிய சுத்தி உண்டாயிருக்கிறதாகவும் ஸ்பஷ்டமாகிறது.

இதைப்போல் விஜ்ஞாநேச்வரரும் இந்த வசநத்தில் புத்திபூர்வக பதநீயங்களையும் க்ரஹித்துக்கொண்டு அர்த்தம் செய்திருப்பதை கீழ்க்காட்டப்படுகிற விசாரத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். அதாவது,

நந்வகாமக்ருதே ப்ராயஶ்சித்தாபாவாத் கதம் வ்யவஹார்யத்வம், ததா வஸிஷ்ட: 'அநபிஸந்தி க்ருதே ப்ராயஶ்சித்தம் அபராதே' இதி வஸிஷ்ட வசநாத், 'இயம் விஶுத்திருதிதா ப்ரமாப்யாகாமதோ த்விஜம் । காமதோ ப்ராஹ்மணவதே நிஷ்க்ருதிர்ந விதீயதே ॥' இதி மநுவசநாச்ச அபி ஸ்மர்யதே ॥

என்பதால் புத்திபூர்வ பாபத்திற்கு பிராயசித்தம் கிடையாது என்கிற வஸிஷ்ட வசநத்தினாலும் 'கீழ்ச்சொல்லிய ப்ராயச்சித்தம், தவறுதலாக ப்ரம்மஹத்தி செய்தவனுக்கே சொல்லப்பட்டது. புத்தி பூர்வகமாக ப்ரம்மஹத்தியை செய்தவனுக்கு ப்ராயச்சித்தம் விதிக்கவில்லை,' என்கிற மனுஸ்ம்ருதி வசநத்தினாலும் புத்திபூர்வக ப்ரமஹத்தியாதிகளுக்கு ப்ராயச்சித்தமே கிடையாதென்று தெரிவதால், ஸம்வ்யவஹாரம் எப்படி உண்டாகும், என்று ஆக்ஷேபித்துக்கொண்டு ஸமாதாநம் சொல்லுகிறார்.

நைதத் । யத: காமதோ மஹாபாபம் நர: குர்யாத் கதஞ்சந । ந தஸ்ய நிஷ்க்ருதிர் த்ருஷ்டா ப்ருக்வக்நிபதநாத்ருதே ॥ இதி. ததா 'விஹிதம் யதகாமாநாம் காமாத்து த்விகுணம் பவேத்' இதி ச காமக்ருதேऽபி ப்ராயஶ்சித்தஸ்மரணாத், யத்து வஸிஷ்ட வசநம் தஸ்யாபி, அகாமக்ருதே ஸ்வல்பமேவ ப்ராயஶ்சித்தம் ஶாஸ்த்ர த்ருஷ்டிபூர்வ்யாய: நவாந்த: காமக்ருதே ப்ராயஶ்சித்தாபாவ: இதி । யத்து மநுவசநம் 'இயம் விஶுத்திருதிதா' இத்யாதி, ததபி 'இயம்' இதி ஸமநந்தரோக்த த்வாதஶவார்ஷிகாதி வ்ரத விஷயம் ந து 'காமதோ ப்ராஹ்மணவதே நிஷ்க்ருதிர்ந விதீயதே' இத்யேதத் ப்ராப்திநிஷேதபரம், ந பாவத: ப்ராயஶ்சித்தாபாவஸ்ய । மரணாந்திகாதேஸ்து ப்ராயஶ்சித்தஸ்ய தர்ஶிதத்வாத் ।'

ஆனாலது மேல்கண்டபடி பூர்வபக்ஷி சொல்லியது ஸரியல்ல. புத்திபூர்வமாக ப்ரம்மஹத்யை செய்தவனுக்கு ப்ருகு பதநாதி ப்ராயச்சித்தம் சொல்லியிருக்கிறபடியாலும், 'தவறுதலாகச்செய்த பாபத்திற்குச் சொல்லிய ப்ராயச்சித்தத்தையே புத்திபூர்வக விஷயத்தில் இரண்டு பங்காச் செய்து ப்ராயச்சித்தம் செய்யலாம்,' என்று வசனங்கள் சொல்லுகிறபடியாலும், புத்திபூர்வக ப்ரம்மஹத்யாதிகளுக்கும் ப்ராயச்சித்தம் உண்டு. ஆனால் வஸிஷ்டர் புத்திபூர்வகத்திற்கு ப்ராயச்சித்தம் கிடையாதென்று சொல்லியதற்கு அர்த்தமென்னவென்றால், அந்த வசனத்திற்கு, அபுத்தி பூர்வக பாபத்திற்கு ப்ராயசித்தம் சுத்தியை உண்டுபண்ணுமென்பதில், தாத்பர்யமே தவிர, புத்தி பூர்வகத்தில் ப்ராயச்சித்தம் கிடையாதென்பதில் தாத்பரியமில்லை. ஆகவே,

அந்த வசநம் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளுவதைத் தடுக்க வரவில்லை. இது போல், மநு ஸ்ம்ருதியில் 'இயம் விஶுத்திருதிதா' என்பதால் புத்திபூர்வக ப்ரம்ஹத்யைக்கு, ப்ராயச்சித்தம் கிடையாதென்று சொல்லியிருப்பதற்கும் அர்த்தமென்னவென்றால், ஷெ வசனத்தில் முதலில் காணப்படுகிற, 'இயம்' என்கிற பதத்தை உத்தரார்த்தத்தில் இருக்கிற 'நிஷ்க்ருதி:' என்கிற பதத்தோடு சேர்த்து அர்த்தம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் புத்திபூர்வக ப்ரம்மஹத்யைக்கு 'இந்த ப்ராயச்சித்தம் கிடையாது' என்று அர்த்தம் ஆகிறது. அதாவது கீழ்ச்லோகங்களில் தவறுதலாக ப்ரம்ஹஹத்யை செய்தவனுக்குச் சொல்லிய ப்ராயச் சித்தத்தை புத்தி பூர்வக விஷயத்தில் அப்படியே உபயோகிக்கக் கூடாதென்பது தான் ஷெ வசநத்திற்கு அர்த்தமே யல்லது, ப்ராயச்சித்தமே கிடையாதென்று சொல்லவில்லை; 'மரணாந்திகம்' முதலிய ப்ராயச்சித்தம் இருக்கிறபடியால்.—என்று.

இந்த அர்த்தத்தையே குல்லூக பட்டரும் 'இயம் விஶுத்திருதிதா' என்கிற மநுவசந வ்யாக்யாநத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார். அதாவது,

காமதஸ்து ப்ராஹ்மணவதே நேயம் நிஷ்க்ருதி: ஏதேநாஸ்ய ப்ராயஶ்சித்தம்। கிந்து ஸதோ த்விகுணாதி காரணாத்தஸ்ய இதி ப்ராயஶ்சித்த கௌரவார்த்தம், ந து ப்ராயஶ்சித்தாபாவார்த்தம்। 'காமதஸ்து க்ருதம் மோஹாத் ப்ராயஶ்சித்தை: ப்ருதக் விதைரிதி வக்ஷ்யமாணத்வ விரோதாத் ॥'

(புத்திபூர்வக ப்ராம்ஹண வதத்திற்கு இந்த ப்ராயச்சித்தம் கிடையாது, அதற்கு, இதைப்போல இரண்டுபங்கு ப்ராயச்சித்தம் செய்துவைக்கவேணுமென்று சொல்லி, புத்திபூர்வகத்தில் ப்ராயச்சித்த கௌரவத்தை இந்த வசனம் சொல்ல வந்ததே யல்லது, அதற்கு ப்ராயச்சித்தம் கிடையாதென்று சொல்ல வரவில்லை. புத்திபூர்வகமாகச் செய்த ப்ரயத்திற்கும் ப்ராயச்சித்தமுண்டென்று 'காமதஸ்து க்ருதம்' என்று கீழே மநு வசனத்தில் சொல்லியிருக்கிறபடியால், இங்கு மறுபடியும், இல்லை, யென்று சொல்லுவது விரோதிக்கும்,) என்று. ஆகவே குல்லூகபட்டரும் மேற்கண்ட வாக்யங்களால், புத்தி பூர்வக மஹா பாதகமாகிய பதநீயத்திற்கு இரண்டு பங்கு ப்ராயச்சித்தம் செய்துவைப்பதை ஒப்புக்கொள்ளுகிறார். இந்த விஷயத்தை குல்லூகபட்டர் மேலும் 'ப்ரஹ்மஹா த்வாதஶ ஸமா:' -, என்கிற மநு வ்யாக்யானத்தில், அபுத்தி பூர்வகத்திற்கு பன்னிரண்டு வர்ஷ ஸாத்யமான வ்ருதத்தை ப்ராயச்சித்தமாகச் சொல்லிவிட்டு மேலே,

'காமக்ருதே து ப்ராஹ்மணவதே த்விகுணம் ப்ராயஶ்சித்தம் வக்ஷ்யதி வக்ஷ்யதே। ததாஹ அங்கிரா: - ப்ராக்ஞாநகாமக்ருதே யத்தஸ் த்விகுணம் பவதி வக்ஷ்யதே।' இதி ॥

என்கிற வாக்யங்களால் புத்திபூர்வகமாகச் செய்யப்பட்ட ப்ராம்மண வதத்திற்கு, இரண்டு பங்காக, அதாவது 24-வருஷங்கள் வ்ருதானுஷ்டானம் செய்வது ப்ராயச்சித்தமாகும். இதை. அங்கிரஸ் என்கிற ரிஷி "புத்திபூர்வகத்திற்கு இரண்டு பங்கு ப்ராயச்சித்த" மென்பதால் சொல்லியிருக்கிறார், என்று வெகு ஸ்பஷ்டமாக புத்திபூர்வக ப்ரம்ஹத்யைக்கு, ப்ராயச்சித்தமுண்டென்பதை ஒப்புக்கொள்ளுகிறார். இப்படிக் குல்லூகபட்ட வாக்யத்திலும் கீழ்க்காட்டிய விக்ஞாநேச்வர பங்க்திகளிலும், புத்திபூர்வகப் பிரம்மஹத்யைக்கு இரண்டு பங்கு ப்ராயச்சித்தம் விதிக்கலா மென்பதற்கு ப்ரமாணமாக 'விஹிதம்யத் அகாமாநாம் காமாத்தத் த்விகுணம்பவேத்' 'த்விகுணம் பவதி வக்ஷ்யதே' இத்யாதி வசனங்களை ப்ரமாணமாகக் காட்டுவதால், ஷெ ப்ரமாணங்கள் புத்திபூர்வக பதநீய விஷயங்களுக்கு உபயோகப்படக்கூடியதாயிருப்பதை இந்த ஸ்வாமியும், மத்யஸ்தர்களும் கவனிக்கவேண்டும்.

மிதாக்ஷரையில் மேலே,

நநு யதி காமக்ருதேऽபி ப்ராயஶ்சித்தமஸ்தி, ததிஹ பாபக்ஷயோऽபி கஸ்மாந்ந பவதி, அவிஶேஷாத், யதி பாபக்ஷயோ நாஸ்தி, ததிஹ வ்யவஹார்யத்வமபி கதம் பவதி ॥

என்கிற வாக்யத்தால் 'புத்திபூர்வக பதநீயங்களுக்கு ப்ராயச்சித்தமுண்டானால் அதில் பாபக்ஷயம் ஏன் உண்டாகக்கூடாது? பாபக்ஷயம் இல்லையானால் ஸம்வ்யவஹாரமும் எப்படி உண்டாகும்? என்று ஆக்ஷேபித்துக் கொண்டு ஸமாதானம் சொல்லுகிறார்,

உபயத்ர ப்ராயஶ்சித்த விதேஷ்வபி ஹேதுவிஶேஷ: ஶாஸ்த்ராதவகம்யதே। அஜ்ஞாநக்ருதே து ஸர்வஸ்ய பாபக்ஷய:। யதாஹ, 'ப்ராஹ்மண: ஸ்வேவ மாநஸம் தமேவ ஶாஸ்த்ர விதஸ்து யோ நிஸ்ஸம்ஶய மஹாத்மாநவிஹிதம் காமகார்யாஹு —' இதி மநுவசநாத்து காமகாரக்ருதே வ்யவஹார்யத்வம் நிஷித்தம், தஸ்மிந்நபி பதநீயே காமாணி காமக்ருதே, வ்யவஹார்யத்வமாத்ரம், ந பாபக்ஷய:, இதி ॥

[illegible]

[illegible] (புத்திபூர்வகம், அபுத்திபூர்வகம் ஆகிய இரண்டிலும் ப்ராயச்சித்தத்தில் விசேஷமில்லையாயினும், இரண்டிற்கும் பலத்தில் வித்யாஸமிருப்பதாக சாஸ்த்ரத்தினால் தெரிகிறது. அஜ்ஞானக்ருதமான பாபம் எல்லாவற்றிலும் பாபக்ஷயம் உண்டுதான். கௌதமரால் சொல்லப்பட்ட ப்ரம்மஹத்யா ஸுராபான, குருதல்பகமன, நாஸ்திகாதி மஹாபாதக பதநீயங்களில் கூட புத்திபூர்வகமாயிருந்தால் ஸம்வ்யவஹாரம் மாத்திரம் உண்டு, பாபக்ஷயம் கிடையாது. ஆனால் பாபம் போகாதுபோனால், அந்த பாபியுடன் எப்படி ஸம்வ்யவஹாரம் செய்து கொள்ளலாமென்று ஸம்சயப்படக்கூடாது. ஏனெனில் பாபத்திற்கு இரண்டுவித சக்தியிருக்கிறது. ஒன்று பரலோகத்தில் நரகத்தையுண்டுபண்ணுவது. மற்றொன்று இங்கு ஜனங்களொடு கலந்து கொள்ளமுடியாமல் தடுப்பது. புத்திபூர்வக பதநீயபாபங்களில் ப்ராயச்சித்தத்தினால் நரகத்தை நிவ்ருத்தி செய்யமுடியாதே போனாலும் ஸம்வ்யவஹாரத்தைத்தடுக்கக்கூடிய சக்தியானது ப்ராயச்சித்தத்தால் நசித்துபோய்விடுகிறது. ஆகையால் பாபக்ஷயம் உண்டாகாது போனாலும் ஸம்வ்யவஹாரம் உண்டாகத்தடையில்லை) என்று.

இந்த விஷயத்தில் மாதவீயத்தில் சொல்லியுள்ள ஸித்தாந்தத்தையும் எடுத்துச் சொல்லுவோம். பராசர ஸ்மிருதியின் 8-வது அத். முதல் ச்லோகவ்யாக்யானத்தில் மாதவாசார்யர் புத்பூர்வக பதநீயங்களுக்கு ப்ராயச்சித்தம் உண்டா இல்லையா வென்பதை விசாரிக்க ஆரம்பித்து, ஷை விஷயத்தில், சில ரிஷிகள் ப்ராயச்சித்தம் கிடையாதென்றும்; சிலர் உண்டென்றும் சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டிவிட்டுக் கடைசியில் ‘[illegible]’ என்று ஆரம்பித்து, புத்திபூர்வக ப்ரஹம்மஹத்யாதி விஷயத்தில் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளலா மென்றும், அதனால் நரகநிவ்ருத்தி யுண்டாகாது போனாலும் ஸம்வ்யஹாரம் ஸித்திக்கத் தடையில்லையென்றும் நிர்ணயித்து இருக்கிறார்.

[illegible]

[illegible]

என்கிற வாக்யங்களால், விக்ஞானேச்வரர் சொல்லியபடியே புத்திபூர்வக ப்ரும்மஹத்யாதிகளுக்கு ப்ராயச்சித்தம் செய்து கொள்ளலாமென்றும், அந்த ப்ராயச்சித்தத்திற்கு நரகத்தைத் தடுக்கக்கூடிய சக்தியில்லாதபோதிலும் இந்த லோகத்தில் ஸம்வ்யவஹாரத்தை யுண்டுபண்ணக்கூடிய சக்தியிருப்பதால் இரண்டுபங்கு ப்ராயச்சித்தாதிகளால் இங்கு வ்யவஹாரம் உண்டாகிறது என்றும் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார்.

இப்படி விஜ்ஞானேச்வர, குல்லூகபட்ட மதவாதிகள் சொல்லிய ஸித்தாந்தமே தீக்ஷிதீயத்திலும்,

[illegible]

என்கிற பங்க்திகளால் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. இங்கு ப்ராயச்சித்தமில்லை யென்கிற வஸிஷ்ட ஸூத்ரத்திற்கு நரகநிவ்ருத்தி ஏற்படாது. ப்ராயச்சித்தம் கிடையாதென்பதில் அதற்கு தாத்பர்யமில்லையென்கிற வாஸ்தவார்த்தத்தை தீக்ஷிதரே, ‘[illegible]’ என்று இதுவே நிர்ணயித்துவிட்டபடியால் மறுபடியும் இங்கே எழுதவில்லை. புத்திபூர்வக

பதநீயத்திற்கு ப்ராயச்சித்தம் கிடையாதென்று தீக்ஷிதருக்கு அபிப்ராய மிருக்கிறதாகச் சொல்வது முற்றிலும் பிசகு. அதே விடத்தில் நாலு வரி தள்ளி,

'அத: கலௌக்ருத மஹாபாதகானாம் மரணாந்திக ப்ராயச்சித்தஸ்ய கலௌ நிஷேதாத், த்வாதச வார்ஷிகாதி ப்ராயச்சித்தை: க்ஷீணபாபா யா ஸர்வா அபி ஹ வ்யவஹார்யத்வ ஶாஸ்த்ரம் விஜ்ஞப்தி ।'

என்கிற வாக்யத்தால் கலியுகத்தில் பஞ்சமாபாதகர்களுக்கு விதிக்கப்பட்ட மரணாந்திக ப்ராயச்சித்தத்தைச் செய்யக்கூடாதாகையால் த்வாதசவார்ஷிகாதி ப்ராயச்சித்தத்தை செய்யவேண்டுமென்றும், அந்த ப்ராயச்சித்தத்தால் பாபக்ஷயம் உண்டாகாதபோனாலும் இங்கு ஸம்வ்யவஹாரமுண்டாகிவிடுகிறதாயும் ஸ்பஷ்டமாக எழுதி புத்திபூர்வக ப்ரம்மஹத்யாதிகளுக்கு ப்ராயச்சித்த ஸம்வ்யஹாராதிகளை ஒப்புக்கொண்டிருக்கிறாரல்லவா? ஆகையால் வஸிஷ்டாதி ஸ்மரணம் பதநீயவிஷயமென்று அவர் சொல்லியதற்கு தப்பர்த்தம் செய்யவும் முடியாது.

இப்படி புத்திபூர்வக மஹாபாதகாதி பதநீயங்களுக்கு ப்ராயச்சித்தம் உண்டென்றும் ப்ராயச்சித்தத்தால் நரகநிவ்ருத்தி யுண்டாகாதபோனாலும் இங்கு ஸம்வ்யவஹாரத்திற்கு யாதொரு தடையும்கிடையாது என்றும் மநு, யஜ்ஞவல்க்யாதி மஹர்ஷிகளும் விஜ்ஞானேஶ்வராதி ஸகல நிபந்தகாரர்களும், ஏகமதிகளாக விருந்து ஸித்தாந்தம் செய்திருப்பதையே நமது பூர்வ லேகத்திலும் நாம் சுறுக்கமாகச் சொல்லியிருந்தோம். நமக்கு ப்ரதிலேகம் எழுதிய ஸ்வாமி அந்த விஷயங்களுக்கு நேராக ஸமாதானம் சொல்ல முடியாமல் ப்ரமாண விருத்தமாக என்னென்னவோ ஊஹங்களைச் செய்துகொண்டு விட்டார். அவருக்கு அநுகூலமாக ப்ரமாணங்கள் இருந்தால் ஏன் எழுதக்கூடாது?

இந்த ஸ்வாமியினுடைய ப்ரதிஜ்ஞா வாக்யத்தில் 'புத்திபூர்வக பதநீயங்களுக்கு ப்ராயசித்தம் கிடையாது, செய்துகொண்டாலும்—'என்று சொல்லுவதை எல்லோரும் கவனிக்கவேண்டும். புத்திபூர்வகங்களுக்கு ப்ராயச்சித்தம்கிடையாதென்று சொல்லிவிட்டு, அதேமூச்சில், 'செய்து கொண்டாலும்' என்று இவர் எழுதுவது மிகவும் விநோதமா யிருக்கிறது ப்ராயசித்தம், கிடையாதென்பது நிஷ்க்ருஷ்ட ஸித்தமா யிருந்தால், 'செய்துகொண்டாலும், என்கிற பக்ஷம் எங்கேயிருந்து வரும்? 'இல்லை' என்கிற பக்ஷத்தையே இந்த ஸ்வாமி ஸமர்த்தித்து எழுதவேண்டாமா? இதற்கு ப்ரமாணங்களை எடுத்துக்

காட்ட வேண்டாமோ? இப்படி யெல்லாம் செய்யாமல் 'செய்துகொண்டாலும்' என்கிறபக்ஷத்தையும் சேர்த்துச் சேர்த்து எழுதுவதிலிருந்து ப்ராயச்சித்தம் கிடையா தென்கிற பக்ஷத்தை அவர் ஸமர்த்திக்க முடியாதென்பதை நன்கு அறிந்திருக்கிறதாகத் தெரிகிறது. இப்படி எழுதுவதிலிருந்து என்ன நிர்ணயத்தைச்செய்து விட்டதாக இவர் நினைக்கிறாரோ? தெரியவில்லை. எப்படியிருந்த போதிலும், யுத்திபூர்வக பதநீயங்களுக்கும் ப்ராயச்சித்த முண்டென்பதை இவர் தமக்கிஷ்டமில்லாமலே அங்கீகரிக்கப்பதாகவே ஏற்படுகிறது. இதை ஏன் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடாது?

தீக்ஷிதீய வாக்யத்திற்கு நாம் ஏதோ வஞ்சித்து அர்த்தம் செய்துவிட்டதாக இவர் நம்மீது தோஷாரோபணம் செய்கிறார். அதை விசாரிப்போம்! தீக்ஷிதீயத்தில்,'நாஸ்தி க்ருதே ப்ராயச்சித்தே நிவ்ருத்திரிதி வஸிஷ்டாதி ஸ்மரணம் பதநீய விஷயம்।'என்கிற வாக்யத்தில் காணப்படுகிற 'பதநீய' என்கிற பதத்திற்கு பஞ்சமஹாபாதங்கள் தான் அர்த்தமென்று நாம் நமது முதல் லேகத்தில் எழுதி 'ப்ராயச்சித்தம் கிடையாதென்கிற பக்ஷமானது பஞ்சமஹாபாதக விஷயமென்று தீக்ஷிதருடைய அபிப்ராயத்தால் தெரிவதை வெளியிட்டோம். அந்த விடத்தில் தீக்ஷிதர், அபுத்திபூர்வகம், அபதநீயம் ஆகியவைகளுக்கு வ்யவஸ்தை சொல்லிவிட்டு பதநீயத்திற்கு சொல்லுகையில் ஷை வாக்யம் காணப்படுகிறது. இந்த வாக்யத்திற்கு அர்த்தம் செய்யும்போது 'ப்ராயச்சித்தம் கிடையாது' என்று சொல்லுகிற ஸ்ம்ருதி வாக்யங்களுக்கு விஜ்ஞானேச்வர மாதவாதிகளும் இந்த தீக்ஷிதரும் செய்திருக்கிற அர்த்தத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு பார்த்தால் இந்த பதநீயபதத்திற்கு பஞ்சமஹாபாதங்கள் தான் அர்த்தமென்பது விசதமாகும். இந்த விடத்திலும் தீக்ஷிதர், 'வஸிஷ்டஸ்மரணம் பதநீய விஷயம்' என்று எழுதிவிட்டு இந்த அர்த்தத்துக்கு உபபலமாக 'ததாஹ மநு:' என்று ஆரம்பித்து 'அகாமத: க்ருதம் பாபம்—, இயம் விஶுத்திருதிதா' என்கிற மநுவசநங்களை உதாஹரிக்கிறார். இங்கு, 'இயம் விஶுத்திருதிதா ப்ரமாப்ய காமதோ த்விஜம். காமதோ ப்ராஹ்மணவதே நிஷ்க்ருதிர்ந விதீயதே' என்கிற வசநமானது ப்ரம்மஹத்யா விஷயமென்பது ஸ்பஷ்டம். இதுபோல், அகாமத: க்ருதம் பாபம் வேதாப்யாஸேந ஶுத்த்யதி। காமதஸ்து க்ருதம் மோஹாத் ப்ராயச்சித்தை: ப்ருதக் விதை:॥' என்கிற மநுவசநங்கூட ப்ரம்மஹத்யா விஷயத்தில் சேர்க்கலாமென்பதை குல்லூகபட்டர் 'ப்ரஹ்மஹாத்யாதிஷு' என்கிற ச்லோகத்தில் ஒப்புக்கொள்ளுகிறார். இவ்வது

களைக்கீழே எடுத்துச்சொன்னோம். இங்கு, 'பதநீய விஷயம்' என்பதற்கு ப்ரமாணமாக ப்ரம்மஹத்யைக்கு ப்ராயச்சித்தம் கிடையாதென்கிற மநுவசநத்தை தீக்ஷிதர் ஏன் உதாஹரிக்கவேண்டும்? இந்த மட்டுமா? மேலும், 'ப்ராஹ்மணஸ்ய இதி ஸுராபாநாதிஷு ப்ரவ்ருத்தஸ்ய லக்ஷணம்' ப்ரஹ்மஹத்யா ஸுராபாந ஸ்வர்ணஸ்தேயேஷு காமத: । க்ருதேஷு நிஷ்க்ருதி: நாஸ்தி—, இதி ஸ்ம்ருதே:' என்கிற வாக்யத்தில் ப்ரம்மஹத்யைக்குப் போல் ஸுராபாந ஸ்வர்ணஸ்தேயாதிகளுக்கும் ப்ராயச்சித்தம் கிடையாதென்கிற வசநத்தையுமுதாஹரிக்கிறார். இதற்கு அடுத்த பங்க்தியிலும், 'ஸர்வஸ்ய பதநீயே கர்மணி காமக்ருதே மரணாந்திக ப்ராயச்சித்தேந கல்மஷக்ஷயோ பவத்யேவ ||' என்று புத்திபூர்வக பதநீயத்தில் மாரணாந்திக ப்ராயச்சித்தம் செய்துகொண்டால் பாபக்ஷயம் உண்டாகிறது' என்றுசொல்லுகிறார். இந்த வாக்யத்திலும் பதநீயம் என்றே இவர் ப்ரயோகிக்கிறார். இங்குள்ள பதநீயசப்தத்திற்கும் மஹாபாதகம் என்கிற அர்த்தத்தையே மனதிற்கொண்டுதான் எழுதுகிறார். ஏனெனில் மாரணாந்திகப்ராயச்சித்தமானது பஞ்சமஹாபாதகங்கள் தவிர வேறு பதநீயத்திற்கும் ப்ராயச்சித்தமாக விதிக்கப்படவில்லையன்றோ? விக்ஞாநேச்வரர் 'யாமஹ்ய க்ஷத்ரு:' என்கிற ச்லோக வ்யாக்யானத்தில், 'ப்ராணாந்திகம் தம் காமிதஸ்யேதே, ப்ரயச்சித்தம் மஹாத்மநாம்' என்றும், 'மரோர்த்த மஹாபாதகவாசி' என்கிற அடுத்த ச்லோகத்திலும், 'அத ஏவ தேஷிகே ஸர்வாந்தர்ப்ரகாசி தேஷிகாநாம் பாபேநைவ ப்ரஹ்மஹத்யாதீநாம் வ்ரதாநி த்வாதசவார்ஷிகாதீநி பவந்தி। ப்ரஹ்மஹத்யா ஸுராபாந ஸ்தேயாதீநாம் காமக்ருதாநாம் ப்ராயச்சித்தமிதி' என்று சொல்லியிருப்பதால் அது ஸ்பஷ்டமாகிறது. வெகுவாய்ச் சொல்லியென்ன? இந்த ப்ரகரணத்தில் பதநீய பதத்திற்குப் பஞ்சமஹாபாதகங்கள் தான் அர்த்தமென்பதை 'யதாவ சேந:' என்று துடங்கி ப்ரகரணம் முடியும் வரையில் தீக்ஷிதருடைய உபபாதநத்தால் தெரிவதை வாக்யசைலியை அறிந்த பண்டிதர் எவரும் மறுக்கமுடியாது. அப்படியில்லையேல் 'யதாவசேந:' என்று ஆரம்பித்து 'வக்ஷ்ய ஸாரணம் பதநீய விஷய'மென்கிறதற்கு உபபலமாக பஞ்சமஹாபாதக விஷயமான வசநங்களை அவர் உதாஹரிப்பது அஸங்கதமாகுமல்லவோ?

இப்படி ஸுஸ்பஷ்டமாகவிருக்கிற அர்த்தத்தையே நாம் வெளியிட்டிருக்க நாம் ஏதோ எழுதிவிட்டதாக இவர் நினைத்து மஹாபாதகங்களைத் தவிரவும் பதநீயங்கள் உண்டென்பதை நாம் அறியவில்லையோ வென்று பரி

ஹஸித்து விட்டு கௌதம போதாயன, ப்ருஹ்ம ஸூத்ராதிகளை கொண்டு மஹாபாதகாதிகளைத் தவிரவும் பதநீயங்கள் உண்டென்கிற அபூர்வார்த்தத்தை உபதேசிக்கப் புறப்படுகிறார்! இந்த ஸ்வாமி இதர பதநீயங்களுமுண்டென்பதற்கு இரண்டொரு ஸூத்ரங்களையே காண்பித்தாராயினும், நாம்.

(1) பதத்யஸௌ த்ருவம் பிக்ஷு: யஸ்யைகஸ்ய விசயம் ஸவேத் ।
யே பாபகம் மத உத்ஸ்ருஜ்ய: ஸ்வார்த்தஸம்ப்ரஹ ஏவ ஸ ॥
ஸத்ய: பததி மாம்ஸேந லாக்ஷயா லவணேந ச ।

(2) த்ர்யஹேண சூத்ரீ பவதி ப்ராஹ்மண: க்ஷீர விக்ரயாத் ॥
யோऽநதீத்ய த்விஜோ வேதம் அந்யத்ர குருதே ச்ரமம் ।
ஸ ஜீவந்நேவ சூத்ரத்வம் ஆசு கச்சதி ஸாந்வய: ॥

(3) பாரிவ்ராஜ்யம் க்ருஹீத்வா து யஸ்ஸ்வதர்மே ந திஷ்டதி
ச்வபதே நாங்கயித்வா தம் ராஜா சீக்ரம் ப்ரவாஸயேத் ॥'

இத்யாதி நூற்றுக்கணக்கான வசநங்களை யுதாஹரித்து, வேறு பதநீயங்களும் உண்டென்பதை நிரூபிக்கக்கூடும்! இது இருக்கட்டும், தீக்ஷிதீயத்தில் இந்தப்ரகரணத்தில் இருக்கும் பதநீய பதத்திற்குப் பஞ்சமஹா பாதகம் அர்த்தமென்று சொல்லிவிட்டால், இதைக்கொண்டு வேறு பதநீங்களே கிடையாதென்று நாம் சொல்லியதாக எப்படி ஆகும்? இப்படிக் கற்பனை செய்துகொண்டு ப்ரஸங்கம் செய்வதைப் பார்த்தால் இந்த விடத்தில் தீக்ஷிதீயத்தில் 'யதாவ சேந:' என்று ஆரம்பித்து அடுத்த பங்க்திகளில் சொல்லியிருப்பதை நம்மீது தோஷம் சொல்லி 'லௌகிக பாமர வ்யாமோஹார்த்தம்' நாம் இப்படி எழுதிவிட்டதாக இந்த ஸ்வாமி தீபிகையில் எழுதியிருப்பதை அபிஜ்ஞர்கள் கவனிக்கவேண்டும்! 'லௌகிக பாமரர்கள்' என்கிற பதத்திற்கு என்ன அர்த்தமென்பதை நாம் விசாரிக்க வேண்டியதில்லை. அது அவர்களுடைய கார்யமே! ஆயினும் நமக்கு இத்தகைய பாமர வ்யாமோஹக் கார்யமானது என்றுளிலும் ஏற்பட்டதில்லை. ஆகவே தீக்ஷிதீயத்தில் இந்த ப்ரகரணத்தில் காணப்படுகிற பதநீய பதத்திற்குப் பஞ்சமஹாபாதகங்கள் தான் அர்த்தமென்பதை முன்னைவிட இன்னும் த்ருடமாக நாம் சொல்லுகிறோம்? இந்த ஸ்வாமியால் அடிக்கடி கூப்பிடப்படுகிற 'ப்ராமாணிக வைதிகர்கள்' இதை எடுத்துப் பார்த்துக் கொள்ளட்டும்; இங்கு தீக்ஷிதீயத்தில் 'ப்ராயச்சித்தம் கிடையா'தென்கிற வசநங்களுக்கு வாஸ்தவார்த்தமென்ன வென்பதைக் கீழே நிரூபித்துள்ளோம்! புத்திபூர்வக மஹா பாபத்திற்கும் த்வாதச வார்ஷிக ப்ராயசித்தமும், ஸம்வ்யவஹாரமும் உண்டென்று கடைசியில் நிஷ்க்ருஷ்டமாக அவர்,

'அத: காமக்ருத மஹாபாதகாநாம் மரணாந்திக ப்ராயச்சித்தஸ்ய கஶுள நிஷேதாத், ஆதம வர்ஷேணாதிபி: ஶுத்தஸ்யாபி ஸாவாஸ உஹ வ்யவஹாரார்ஹத்வம் நாஸ்தி'

என்கிறதால், வேறு அர்த்தத்தற்கு இடமேயில்லை.

இந்த தீக்ஷிதீய பங்க்திகளை 'புத்திபூர்வக பதநீயத்திற்கு ப்ராயச்சித்த மில்லை'யென்பதற்கு ப்ரமாணமாக இந்த ஸ்வாமி எடுத்துக்காட்டுவது அஸம்பத்தமாகவே யிருக்கிறது. தவிரவும் புத்திபூர்வக பதநீயத்திற்கு ப்ராயச்சித்த மில்லை யென்று இவர் சொல்லுவதானது 'பஹிஸ்தூபயதாபி ஸ்ம்ருதேராசாராச்ச' என்கிற ப்ருஹ்ம ஸூத்ரத்திற்கும், அங்குள்ள ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகாதிகளில் சொல்லப்பட்ட ஸித்தாந்தத்திற்கும், விருத்தமாயிருப்பதை இவர் கவனித்தாரில்லை. அங்கு நைஷ்டிக வாநப்ரஸ்த, ஸந்யஸ்தர்களான மூன்று அதிகாரிகளும் பதிதர்களானால் ப்ராயச்சித்தமுண்டென்றும் ஆனால் அவர்கள் ப்ராயச்சித்தம் செய்துகொண்டாலும் அவர்களுடன் ஸம்வ்யவஹாரம் செய்யக்கூடாதென்றும்,

'நைஷ்டிகாநாம் வநஸ்தாநாம் யதீநாம் சாவகீர்ணிநாம்। ஶாஸநாதபி ந ஶுத்யந்தி ப்ராயச்சித்தாத் ந்ருமிஷ்யதே ॥'

என்று விசேஷவசனமிருப்பதைக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாஷ்யத்தில்,

'யத்யபி கூடஷ்த நிர்வர்ணாய நைஷ்டிகவ்ரதஸ்ய ப்ராயச்சித்தாதிகாரோ வித்யதே, ததாபி கஷாயிகாரணதாந் ஶக்தி மஹாந் ப்ராயச்சித்தம் ந ஸம்பவதி ॥'

என்பதால் பாபக்ஷயார்த்தமாக ப்ராயச்சித்தமுண்டென்பதை ஸ்பஷ்டமாக அருளிச்செய்தார். இப்படியெல்லாமிருக்க இந்தஸ்வாமி 'ப்ராயச்சித்தமுண்டென்கிற வசநங்களுக்கு அபதநீய புத்தி பூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமுண்டென்று தாத்பர்யம், ப்ராயச்சித்தமில்லையென்பதற்கு பதநீயபுத்திபூர்வகத்திற்கு ப்ராயச்சித்தமில்லையென்று தாத்பர்யம்' என்று ஸகலசாஸ்த்ரங்களுக்கும் விருத்தமாக வ்யவஸ்தை சொல்லுவதானது ஆச்சரியமாகவே யிருக்கிறது. இம்மாதிரி இவர் சொல்லுவதச்கு எங்கேயாவது ப்ரமாணமுண்டா?

சிஷ்டர்களின் அபிப்பிராயம்.

இந்த விஷயத்தில் சில மஹான்களுடைய திருவுள்ளத்தையும் இங்கே மத்யஸ்தர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம். ஸ்ரீகாஞ்சியில் பலவருஷங்களுக்கு முன் எழுந்தருளியிருந்த திருப்புட்குழி ஸ்வாமி என்கிற மஹானை யாவரும் அறிவார்கள். அந்த மஹான் தேசிகாவதாரமென்றே எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களும் நினைக்கும்படி அவ்வளவு ஜ்ஞாநுஷ்டானங்களுடன் எழுந்தருளியிருந்தது ஸுப்ரஸித்தம். அந்த மஹானால் ஒரு ஸந்தர்ப்பத்தில் அருளிச்செய்யப்பட்ட 'துர்வ்ருத்த நிக்ருதி' என்ற பெயருள்ள ஸமுத்ரயாந விசார க்ரந்தத்தில் வெளியிடப்பட்டிருக்கும் ஸித்தாந்தமானது இந்தவிடத்தில் அவச்யம் கவனிக்கத்தக்கது. ஸமுத்ரயாந பாபமானது பதநீயமென்பதைப்பற்றி ஒருவரும் ஆக்ஷேபம் செய்ய முடியாது. போதாயநாதிகள் 'அத பதநீயாநி' என்று ஆரம்பித்து ஸமுத்ரயாநத்தையே முதலில் படிக்கிறார்கள். மேலும் அது புத்திபூர்வக பதநீயமென்பதிலும் ஒருவருக்கும் ஆக்ஷேபமிருக்க முடியாது. இத்தகைய புத்திபூர்வக பதநீயமாகிய ஸமுத்ரயாந பாபத்திற்கும் ப்ராயச்சித்த முண்டா இல்லையா வென்பதை விசாரித்து, ப்ராயச்சித்தம் உண்டென்பதை அந்த மஹான் நிஷ்கர்ஷித்தார். அங்கு 'தஸ்யைவ நிஷ்க்ருதிர் நாஸ்தி தப்தக்ருச்ச்ரஶதைரபி' என்கிற வசநத்தால் ஸமுத்ரயாத்ரை செய்தவனுக்கு ப்ராயச்சித்தமே கிடையாதென்று ஆக்ஷேபித்துக் கொண்டு,

'உக்த பதநஸ்யாயாதாயாம் ப்ரவ்ருத்தஸ்ய ப்ராயச்சித்தாபாவ ப்ரத்யாயகஸ்ய ஸம்பவாத் அஸ்யைவ ஸமாவதி வா ஸமுத்ரயாநஸ்ய ப்ராயச்சித்தம். ததாஹி ॥'

என்று ஆரம்பித்து ஸமுத்ரயாநத்திற்கு ப்ராயசித்த முண்டென்பதை வசந ந்யாயாதிகளைக்கொண்டு நிரூபித்துக் கடைசியில்,

'அதோऽஸ்யைவ ஸமாவதி ஸமுத்ரயாநஸ்ய ப்ராயச்சித்தம் இதி ஸித்தம். தஸ்ய போதாயநோக்த த்ரைவார்ஷிக ஏவ நிஷ்கிதம் ॥'

இத்யாதி வாக்யங்களால் கலியில், போதாயநரால் சொல்லப்பட்ட மூன்று வர்ஷ ஸாத்யமான வ்ருதத்தைப் பிராயச்சத்தமாக அநுஷ்டிக்கலாமென்பதை ஸாதித்தார். மேலேயும், ஒருவிடத்தில்,

'த்விஜ ஸ்ய ஸமுத்ர நௌயாத ஶ்ராயித்தஸ்யாபி ஸஹ ஹ'

[illegible] ।

என்று விஸ்தாரமாக விசாரித்து ப்ராயச்சித்த முண்டென்பதை நிர்ணயித்தார். அதன்பிறகு மூன்று வர்ஷ ஸாத்யமான ப்ராயச்சித்தத்தை இக்காலத்தில் அநுஷ்டிக்க முடியாதென்பதை ஆக்ஷேபித்துக்கொண்டு ப்ரத்யாம்நாயங்களைக்கொண்டு த்ரைவார்ஷிக வ்ரதத்தை அநுஷ்டிக்கலாமென்று விக்ஞாநேச்வராதிகளுடைய ஸித்தாந்தப்படி ஸமர்த்தித்தார். இதை நாம் பிறகு விஸ்தாரமாக எழுதுவோம். இங்கு ப்ராமாணிகர்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இஞ்சிமேடு ஸ்வாமி புத்திபூர்வக பதநீயத்திற்கு ப்ராயச்சித்தம் கிடையாது என்று ப்ரமாணங்களுக்கு கட்டுப்படாமல் ஸ்வச்சந்தமாக எழுதிய போதிலும் ப்ராமாணிகர்களான ப்ராசீந காலத்திய மஹான்கள் ப்ரமாணங்களுக்குக் கட்டுபட்டு விஷயத்தை வெளியிட்டிருப்பதுதான். அந்த மஹான் அருளிச்செய்த விஷயத்தையும் இஞ்சிமேடு ஸ்வாமி ஆக்ஷேபிக்கப் புறப்படமாட்டார் என்று நம்புகிறோம்.

மதப்ரஷ்ட விஷயம்.

இப்படி புத்திபூர்வகபதநீயங்களுக்கும் ப்ராயச்சித்த ஸம்வ்யவஹாராதிகள் உண்டென்று விக்ஞாநேச்வராதிகள் வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டபடியால் ப்ரக்ருத மதப்ரம்ச பாபத்தைப்பற்றி இனிப் பேசுவோம். இந்த மதப்ரம்ச பாபமானது ஒருவனுக்கு உண்டாயிருந்தால் அதற்கு அவனுடைய நாஸ்திக்யமே மூலகாரணமாயிருப்பதால் அதையும் ஒரு தோஷமாக்கி அதன்மூலமாக அவன் தனது நித்ய நைமித்திகாதிகளைக் கைவிட்டதை ஒரு தோஷமாக்கியும் இரண்டுக்கும் இரண்டு விதமாக ப்ராயச்சித்தத்தை செய்துவைக்கலாமென்று நமது பூர்வலேகத்தில் குறிப்பிட்டோம். மநு, யாக்ஞவல்கிய, விக்ஞாநேச்வர மாதவாதிகள் சொல்லியபடி இந்த பாபத்தை ஒருவித வேதநிந்தை தோஷத்தில் சேர்த்து ஸமபாதக பாபத்தில் சேர்க்கலாமென்பதும் நமது அபிப்ராயம். இதையெல்லாம் நமது பூர்வலேகத்தில் விஸ்தாரமாக எழுதியுள்ளோம். ப்ரதிலேகம் எழுதிய ஸ்வாமியும் இதை அநேகமாக ஒப்புக்கொள்ளுவதாகவே தெரிகிறது. ஏனெனில் கிறிஸ்துவாதி மதங்களில் ப்ரவேசித்தவனை 'க்ரியாதுஷ்டன்' என்கிற நாஸ்திகனில் சேர்த்து அதை ஒருவகை மஹாபாதகமாக நிர்வஹிக்கவேண்டு

மென்று இந்த ஸ்வாமி எழுதிவிட்டார். நாம் எழுதியதற்கும் இந்த ஸ்வாமி எழுதுவதற்கும் அதிக வ்யத்யாஸமில்லையாகையால் இதைப்பற்றி அதிகமாக சர்ச்சை வேண்டியதில்லை. ஏனெனில் நாஸ்திக பதத்திற்கு '[illegible]' என்று அபரார்க்கத்தில் சொல்லப்பட்டது. வேதநிந்தை '[illegible]' என்று சொல்லப்பட்டது. ஆகவே இரண்டும் ஒன்றாயிருக்கலாம்.

ஆயினும் நாம் மதப்ரம்ச பாபத்தை பதநீயமல்லவென்று சொல்லுவதாக இந்த ஸ்வாமி க்ரஹித்துக்கொண்டு நம்மீது மிகவும் கோபம் கொள்ளுகிறார். நமது பூர்வலேகத்தில் இந்தப் பாபமானது பதநீயமல்லவென்று நாம் எங்கும் சொல்லவில்லை. அப்படிப்பட்ட வார்த்தைகளாவது அபிப்ராயமாவது நமது லேகத்தில் கிடையவே கிடையாது. '[illegible] விஷயம்' என்கிற தீக்ஷிதபங்க்திக்கு நாம் சொல்லிய அர்த்தத்தை வைத்துக்கொண்டு இந்த ஸ்வாமி இப்படி ஊஹித்திருப்பார் போலிருக்கிறது. ஆகவே கீழ்ச்சொல்லியபடி இந்த மதப்ரம்ச பாபத்தை எந்த வகையில் சேர்த்தாலும் கௌதமர் சொன்னபடி பதநீயம் தான் என்பதில் நமக்கு அபிப்ராய பேதமில்லை. ஆனாலும் இந்த மதப்ரம்ச பாபமானது புத்திபூர்வகம், தவறுதல், பலாத்காரம் ஆகிய எல்லாவகையாலும் உண்டாகக் கூடியதாயிருப்பதால் அந்தந்த தோஷ நிமித்தங்களுக்குத் தக்கபடி ப்ராயச்சித்தத்தில் கௌரவ லாகவங்களைக் கற்பித்தே யாகவேண்டுமென்பதையே நாம் வற்புறுத்திச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த அபிப்ராயத்துடனேயே தான் நமது பூர்வலேகம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் ஆரம்பத்திலேயே 'ஒருவன் புத்திபூர்வகமாகவோ அல்லது பிறருடைய துர்போதனையினுலோ வேறு விதமாகவோ' என்று பலதரப்பட்ட அதிகாரிகளையும் பொதுவாக எடுத்திருக்கிறோம்.

கீழ்ச்சொல்லிய நாஸ்திக்யம், வேதநிந்தை என்கிற பாபங்களை ஒவ்வொரு ரிஷிகளும் ஒவ்வொரு மாதிரியான விபாகத்தில் சேர்த்துப்படிக்கிறார்கள். கௌதம சங்க, ஹாரிதாதிகள் நாஸ்திக்ய பாபத்தைப் பாதக, மஹாபாதகாதிகளில் சேர்த்துப்படித்தார்கள். மநு, யாக்ஞவல்க்யாதிகளோ வெனில், நாஸ்திக்யத்தை உபபாதகத்தில் சேர்த்துப் படித்துவிட்டார்கள். இப்படி நாஸ்திக்யத்தில் பலவிபாகங்கள் இருப்பதை அதிகாரிபேதத்தால் வ்யவஸ்தை செய்யவேண்டியது அவச்யமாயிருக்கிறது. இதுபோல் வேதநிந்தை என்கிற பாபத்தையும் யாக்ஞவல்க்யர் ப்ரம்மஹத்யா ஸமமான பாபத்தில் சேர்த்தார். இதையே மநுவானவர் [illegible] சேர்த்துப் படி

த்தார். இதையே, 'ஜாவயொ வூாதூகா' என்கிற ச்லோக வ்யாக்யானத்தில் விக்ஞானேச்வரர் எடுத்திருக்கிற ப்ரமாணத்தின்படி ப்ருஹத் விஷ்ணு என்பவர் உபபாதகத்தில் சேர்த்துப் படிக்கிறார். இப்படியிருப்பதில், ஒருவன் புத்திபூர்வகமாகவே, மேற்கண்ட நாஸ்திக்ய, வேதநிந்தாதி பாபங்களைச் செய்துவிட்டால் அவனுக்குக் கடின பாபத்தில் சேர்த்துக் கடினமான ப்ராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். ஒருவன் பலாத்காரத்தினாலோ தவறுதலாகவோ மேற்கண்ட பாபத்தைச் செய்துவிட்டால், அவனுக்கு யதோசிதம் லகுவான ப்ராயச்சித்தத்தை செய்யவேண்டும். இப்படி வ்யவஸ்தை செய்யாதவரையில், பலவித விபாகத்திலும் ஷை பாபங்களைச் சேர்த்தது தப்பாகவே முடியும். அல்லது, 'ஆபத்காலம், அநாபத்காலம்' என்கிற வ்யவஸ்தையாவது வேண்டும். இப்படி யேற்பட்டால் ஒருவன் தவறுதலாகவோ, பலாத்காரத்தினாலோ மதப்ரஷ்டனாகி ஆகிவிட்டால் அவன் விஷயத்தில் புத்திபூர்வக நாஸ்திக்யத்திற்கோ, வேத நிந்தைக்கோ சொல்லிய கடினப்ராயச்சித்தத்தை செய்து வைப்பது ந்யாயமல்லவாகையால், அவன் விஷயத்தில் 'நாஸ்திகஃ க்ருதக்னாடி ஸாஹம் வஸிகவா விரொஜக நாஸ்திக்யாக' என்று வஸிஷ்டாதிகள் சொல்லிய லகு ப்ராயச்சித்தத்தையே ப்ரயோகிக்கவேண்டும். இந்த அபிப்ராயம் கொண்டுதான், ஸமபாதமாகச் சொல்லப்பட்ட வேதநிந்தைக்கு ஒரு அதிகாரி விஷயத்தில் வஸிஷ்டர் சொல்லிய ப்ராயச்சித்தத்தை உபயோகிக்கலாமென்று சொன்னோம். புத்திபூர்வக விஷயத்திற்கு ஷை வஸிஷ்ட ப்ராயச்சித்தம் போதுமென்று நாம் சொல்லிவிட்டதாக இவர் நினைத்துவிட்டார் போலும்! தவிரவும் சோளதேசத்தில் ஏற்பட்ட லக்ஷ்யத்திற்கும் இது போதுமென்பதும் நமது அபிப்ராயமில்லை. பொதுவாக எல்லாவித மதப்ரஷ்டர்களுக்கும், சாஸ்திரங்களில் இருக்கும் ஆநுகூல்யத்தை வெளியிடுவதே நமது நோக்கம்.

இந்த விடத்தில் நமது பூர்வ லேகத்தில் "வஸிஷ்ட ஸூத்ரம்" என்கிற பதத்திற்குப்பிறகு 'முதலானது' என்கிற பதம் விட்டுப்போயிருக்கிறது. நாம் முதலில் "வஸிஷ்ட ஸூத்ரம் முதலானது" என்று எழுதிக்கொடுத்திருந்ததை இரண்டாவது தடவை எழுதியவர் தவறுதலாக "முதலானது" என்கிற பதத்தை விட்டுவிட்டதாகத் தெரிகிறது.

தவிரவும் 'ஊயி தெஜ ஐதி ஹூயாம்' என்கிற ச்லோகத்தின் வியாக்யானத்தில் விக்ஞானேச்வரர் நாஸ்திக்ய பதத்திற்கு வேதநிந்தை என்கிற அர்த்தத்தை ஒப்புக்கொண்டு அதற்கு மேற்சொல்லிய வஸிஷ்ட ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட ப்ராயச்சித்தத்தை விதித்து 'வஸ்து லகு க்காரண விஷய' என்பதால் ஸமபாதக வேதநிந்தைக்குக்கூட புத்திபூர்வக ஸக்ருத்காரண விஷயத்தில் த்வாதசாஹ க்ருச்சிர ப்ராயச்சித்தத்தை அங்கீகரித்திருக்கிறார். இவ்விடத்திலேயே

186744